29 MAR 1965

# ஆரம்பக்கல்வி




ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 25 ந. பை.

| மலர் 27 | மார்ச்சு 1965 | இதழ் 3 |
| --- | --- | --- |

# முதலமைச்சர்கள் மாநாடு!

**அனைவரும் ஆவலோடு**
**எதிர்பார்த்த மாநாடு!**

இந்திய மக்கள் அனைவரும் மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த முதலமைச்சர்கள் மாநாடு, பிப்ரவரித் திங்கள் 23—24 ஆகிய நாட்களில் நடந்து முடிந்து விட்டது.

அந்த மாநாட்டில் கூடிய முதலமைச்சர்கள், விடுதலை பெற்ற இந்தியாவின் மாபெரும் பிரச்சினையாக உருவெடுத்துவிட்ட ஆட்சி மொழிச் சிக்கல்பற்றி ஓரளவு ஆராய்ச்சி செய்து, அந்த ஆராய்ச்சியின் விளைவாக, சில பல கருத்துக்களை, இந்தியப் பேரரசுக்குத் தரப்படுகிற பரிந்துரைகள்' என்கிற வடிவத்தில் அளித்துள்ளார்கள்.

இந்தப் பரிந்துரைகளில் காணப்படுகிற விளக்கவுரைகளையும், உபதேச மொழிகளையும், பூசி மெழுகும் புன்னகைச் சொற்களையும்

நீக்கிவிட்டுப் பார்த்தால், இந்தப் பரிந்துரைகளில் காணப்படுகிற தலையாயபகுதி ஒன்றே ஒன்றுதான் என்பது தெளிவாக விளங்கும்.

1963ல் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்திய ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதும், அப்படிச் செய்யப்படுகிற திருத்தம், இந்தி பேசாத மக்களின் நியாயமான அச்சங்களைப் போக்குவதாக இருக்க வேண்டும் என்பதும்தான் அந்தப் பகுதி.

காலம் சென்ற மாமேதை பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், ஆட்சி மொழி சம்பந்தமாக, இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மக்களுக்குக் கொடுத்த உறுதி மொழிகளுக்குச் சட்டபூர்வமான உருவம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அவை உறுதி மொழிகள் என்கிற அளவோடு இருந்தாலே போதும் என்றும் தான், அமைச்சர்கள் பெரும்பாலோர், இந்த மாநாடு நடைபெறும்வரையில் சொல்லி வந்தார்கள்.

பண்டித நேரு அவர்களின் உறுதி மொழிகளுக்குச் சட்ட உருவம் தரப்படவேண்டியது அவசியம் என்னும் கருத்தை, ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்கள், தெள்ளத் தெளிவாகவும் திட்ட வட்டமாகவும் முதன் முதலாக எடுத்துக்கூற முன் வந்தது, இந்த மாநாட்டின்போதுதான்.

தென்னக மாநிலங்களுக்கும், இந்தி மொழி பேசாத வட இந்திய மாநிலங்களுக்கும், முதலமைச்சர்கள் மாநாட்டின் விளைவாகக் கிடைத்துள்ள குறிப்பிடத்தக்க நன்மை இதுதான்.

முதலமைச்சர்கள் மாநாட்டின் இந்த ஆய்வுரையும், வெறும் ஆய்வுரை அல்லது ஆலோசனை அல்லது சிபார்சு என்கிற அளவில் தான் தற்போது நிற்கிறது.

இந்த ஆலோசனையை இந்தியப் பேரரசு எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளப் போகிறது? ஆட்சி மொழிச் சட்டத்தில் திருத்தம் செய்யப்படுமானால் அந்தத் திருத்தத்திற்கு உரிய மசோதா, பாராளுமன்றத்தில் எப்போது கொண்டு வரப்படும்? அப்படிக் கொண்டுவரப் படுகிற மசோதாவின் வாசகங்கள் இந்தி பேசாத மக்களின் கவலைகளையும் அச்சங்களையும் உண்மையிலேயே போக்கத்தக்கனவாக இருக்குமா ?

இந்தக் கேள்விகளுக்கு உரிய விடைகள் யாவும் கிடைக்கும் போதுதான், இந்த மாநாட்டின் விளைவாக இந்தி பேசாத மாநிலங்

களுக்குக் கிடைத்துள்ள உண்மையான இலாபம் அல்லது நன்மை எவ்வளவு என்பதை மதிப்பிட முடியும்.

## வெளித் தோற்றத்தை மட்டும் ஆராய்ந்தால் போதுமா?

முதலமைச்சர்கள் மாநாட்டைப் பற்றிப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ள செய்திகளைக் கூர்ந்து கவனித்தால், ஓர் உண்மை வெள்ளிடை மலையென விளக்கமாகத் தெரிகிறது. அந்த மாநாடானது, ஆட்சி மொழிப் பிரச்சினை முழுவதையும் அலசி ஆராய்ந்து பார்க்கவில்லை என்பதும், பிரச்சினையின் உயிர்நாடி போன்ற பகுதியை அது ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவே இல்லை என்பதும், பிரச்சினையின் வெளித் தோற்றத்தில் காணப்படுகிற சில பகுதிகளை மட்டுமே அது ஆராய்ச்சி செய்துள்ளது என்பதும்தான் அந்த உண்மை.

ஒரு மனிதருக்கு ஏற்பட்டுவிட்ட நோயைத் தீர்க்கவேண்டுமானால், யாது செய்தல் வேண்டும்? முதலில் அம் மனிதருக்கு ஏற்பட்டுவிட்ட நோய் இன்னது என்பதைக் கண்டறிய வேண்டும். அடுத்து, அந் நோய் தோன்றியதற்கு உரிய மூல காரணம் எது என்பதை உய்த்து உணரவேண்டும். அதன்பின், அந்த மூல காரணத்தை அகற்றி எறிவதற்கான வழி என்ன என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும். அப்படி அறிந்த பிறகு, அந்த வழியைத் தக்க முறையில் கையாளவேண்டும். இதுதான் நோயைத் தீர்ப்பதற்கு உரிய பொருத்தமான வழி என்கிறார் உலகப் பேரறிஞர் திருவள்ளுவர். “நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி, வாய்ப்பச் செயல்” என்பது, வள்ளுவப் பெருந்தகையாளரின் தெள்ளுதமிழ் மட்டுமல்ல ; மருத்துவ உலகத்தால் முழுமனதுடன் ஏற்கப்பட்டுள்ள நோய் தீர்க்கும் முறையும் ஆகும்.

புதுடில்லியில் கூடிய முதலமைச்சர்கள் மாநாடு, இந்திய ஆட்சி மொழிச் சிக்கல் என்னும் நோயைத் தீர்க்க, உலகம் முழுவதும் ஏற்றுக் கொண்ட இந்த மருத்துவ முறையைக் கையாண்டதா என்றால், இல்லை. நோயின் மூல காரணத்தைக் கண்டறிய முயலாமல், நோயின் புறத் தோற்றங்கள் சிலவற்றை மட்டும் கண்டறிந்து, அந்தத் தோற்றங்களை மாற்றி அமைப்பதற்கான சில பரிகாரங்களை எடுத்துக்கூறி, அந்த அளவோடு மனத் திருப்தி அடைந்து விட்டது அந்த மாநாடு. இப்படிப்பட்ட சிகிச்சை முறையால், எந்த நோயும் முழுமையாகக் குணம் அடைவதில்லை; தற்காலிகமாகக் குணம் அடைந்ததுபோலக் காணப்படும்; ஆனால் சிறிது காலத்திற்கு ஒரு முறை மீண்டும் மீண்டும் தலையெடுத்துக் கொண்டிருக்கும். இது, மருத்துவ உலகம் நன்குணர்ந்த உண்மை.

## மொழிச் சிக்கலின்
## மூல காரணம்

இந்தியாவின் ஆட்சிமொழிப் பிரச்சினை, இன்றையதினம், இந்திய மக்கள் அனைவருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிறது. அது மட்டுமல்ல, இங்கிலாந்து, அமெரிக்கா, இரஷ்யா, ஜெர்மனி, பர்மா, பாகிஸ்தான், இலங்கை, மலேசியா, தென்னாப்பிரிக்கா முதலிய பல நாடுகளின் பார்வையையும் தன் பால் ஈர்த்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் மன்றத்திலும் இந்தப் பிரச்சினை, வேறு ஓர் பிரச்சினை ஆராயப் பட்ட நேரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி யெல்லாம் உலகத்தின் கவனத்தையே தன்பால் இழுக்கத்தக்க அளவுக்கு வளர்ந்து விட்ட இந்தப் பிரச்சினையின் மூல காரணம் அல்லது உயிர் நாடி எது என்பதை ஆராய்ந்து பார்த்தால், இந்திய அரசியல் திட்டத்தின் பதினேழாம் பகுதியே அது என்பது நன்கு விளங்கும்.

இந்திய அரசியல் திட்டம் நடை முறைக்கு வருகிற நாளிலிருந்து—அதாவது 1950ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26–ஆம் நாளிலிருந்து இந்தி மொழிதான் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக இருக்கும் என்று அந்தப் பதினேழாம் பகுதி தெரிவிக்கிறது. அந்தத் தேதியிலிருந்து பதினைந்து ஆண்டுகள்வரை – அதாவது 1965–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26ஆம் நாள் வரை, அரசியல் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு ஆங்கிலம் எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப் பட்டதோ அவற்றிற்கெல்லாம் அது தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும் என்று அந்தப் பதினேழாம் பகுதி திட்டவட்டமாக அறிவித்திருந்த போதிலும், அந்தப் பதினைந்து ஆண்டுகளில்கூட, கொள்கையளவில், இந்தி மொழிதான் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழி என்பதை, அது தெள்ளத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வங்காளி, மாராத்தி, குஜராத்தி, ஒரிசா, பஞ்சாபி, அஸ்ஸாமி, காஷ்மீர், உருது, இந்தி, சமஸ்கிருதம் ஆகிய பதினான்கு மொழிகளையும் இந்தியாவின் தேசிய மொழிகள் என்று இந்திய அரசியல் திட்டம் அறிவித்திருந்த போதிலும், இந்தப் பதினான்கு மொழிகளில் இந்திமொழி ஒன்றுக்கு மட்டுமே இந்திய அரசாங்கத்தின் ஆட்சிமொழி என்கிற உயர்ந்த நிலையை—ஒப்பற்ற சலுகையை அது அளித்திருக்கிறது. ஏனைய பதின்மூன்று மொழிகளுக்கும் இந்த உயர்நிலை தரப்படவில்லை.

தேசிய மொழிகள் பதினான்கில் ஒரு மொழிக்கு மட்டும் உயர்ந்த நிலை—ஏனைய மொழிகள் யாவற்றிற்கும் தாழ்ந்த நிலை என்கிற முறையில் அமைந்துள்ள அரசியல் திட்டத்தின் இந்த ஏற்பாடுதான்,

இந்திய மொழிச் சிக்கல் என்னும் நோயின் மூல காரணம் ஆகும். நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் படைத்த யாரும் இந்த அடிப்படை உண்மையை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

## நோயைத் தீர்க்கும் சிறந்த முறை

நோயின் மூல காரணம் இது என்றால், நோயை முழுமையாகக் குணப்படுத்துவதற்கு உரிய சிகிச்சை முறை எது? மிக முக்கியமான இந்தக் கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் இருக்கமுடியும். இந்தியாவின் தேசிய மொழிகள் பதினான்கிற்கும், சரிநிகர் சமானமான—சிறிதளவும் ஏற்றத் தாழ்வு இல்லாத—ஒத்த அந்தஸ்து அல்லது நிலையைத் தரவேண்டும் என்பதே அந்த விடை.

தேசிய மொழிகள் பதினான்கிற்கும் சரிநிகர் சமானமான நிலையைத் தரவேண்டுமானால் அதற்கு இரண்டே இரண்டு வழிகள்தான் இருக்கின்றன.

பதினான்கு மொழிகளையும் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொண்டு, அந்தப் பதினான்கு மொழிகளிலும் இந்திய அரசாங்கத்தின் அலுவல்களை நடத்துவது, ஒரு வழி.

இந்தப் பதினான்கு மொழிகளில் எதனையும் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளாமல், ஆங்கில மொழி ஒன்றை மட்டுமே அத்தகைய மொழியாக ஏற்றுக்கொண்டு, இந்திய அரசாங்க அலுவல்கள் அனைத்தையும் அந்த மொழியில் மட்டுமே நடத்துவது, மற்றொரு வழி.

இந்த இரண்டு வழிகளில் ஏதாவது ஒரு வழியை ஏற்றுக்கொண்டு, அந்த வழியை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்ற வகையில் அரசியல் திட்டத்தைத் திருத்தி அமைத்தல் வேண்டும்.

இந்த இரண்டு வழிகளில் எந்த வழி சிறந்தது? கொள்கை அளவில் பார்க்கும்போது, முதல் வழிதான் சிறந்த வழி—இலட்சிய பூர்வமான வழி—நியாயமான வழி என்பது தெளிவு. ஆனால் இந்த வழியை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குமுன், விரிவான பல ஏற்பாடுகளைச் செய்தாகவேண்டும். அந்த ஏற்பாடுகளை உருவாக்குவதற்கும், ஒழுங்கு படுத்துவதற்கும், அமுல் செய்வதற்கும் பல ஆண்டுகள் பிடிக்கும். அமைதியான முறையில் ஆராய்ந்து, நின்று நிதானித்து, சிந்தித்துப் பார்த்து, தேவைப்படுகிற எல்லாமுறைகளையும் கருவிகளையும் ஏற்பாடுகளையும் தயாரித்துக் கொண்டபிறகே அந்த முறையைக் கையாளமுடியும். அவசரப்பட்டு அந்த முறையைக் கையாண்டால், நிர்வாகத் திறமை குன்றும்; வீண் பணச் செலவு மிகுதியாகும்; நாட்டின் பொருளாதார முன்னேற்றம் தடைப்படும்.

இறுதியில் கையாளப்படவேண்டிய வழி அதுதான் என்றாலும் அதற்குத் தேவையான ஏற்பாடுகள் தயாராகிறவரையில், ஆங்கிலத்தை மட்டுமே ஆட்சி மொழியாக் ஏற்பது என்கிற இரண்டாவது வழியைக் கையாள்வதுதான், அறிவுடைமையாக இருக்க முடியும்.

இந்தக் கண்ணோட்டத்தில் நின்று ஆட்சிமொழிச் சிக்கலை ஆராய்ந்தால்தான் சிக்கலைத் தீர்க்க முடியும் என்பது, தெளிவாகத் தெரிகிற உண்மை. ஆனால் முதலமைச்சர்கள் மாநாடு, இந்த அடிப்படை உண்மையை ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டதாகவே தெரியவில்லை. இந்தி மொழிதான் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழி என்று அரசியல் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை அப்படியே ஏற்றுக்கொண்டு, அப்படி ஏற்றுக்கொண்ட நிலையில், இந்தி பேசாத மக்களுக்கு என்னென்ன பாதுகாப்புகளைத் தரமுடியும் என்பதை மட்டுமே அந்த மாநாடு அலசிப் பார்த்திருக்கிறது. நோயின் மூல காரணத்தை அகற்ற முயலாமல், நோயின் புறத் தோற்றங்களை மட்டும் அகற்ற முயலும் மருத்துவ முறை இது. இந்த முறையால், நீடித்த பலனோ, நிலையான நன்மையோ விளைய முடியாது என்பதை அறிஞர் பெருமக்கள் அனைவரும் நன்கறிவர்.

## ஆங்கிலமா ? இந்தியா ? எது வேண்டும் ?

நம் நாட்டு மொழியாகிய இந்தியை ஒதுக்கிவிட்டு, வேற்று நாட்டு மொழியாகிய ஆங்கிலத்தை மட்டுமே, ஆட்சி மொழியாக வைத்துக்கொள்வதால் ஏற்படும் நன்மைகள் என்ன என்று சிலர் கேட்கக்கூடும். குறிப்பாகவும் சிறப்பாகவும், இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் இந்தக் கேள்வியை எழுப்புவது இயல்பு.

உணர்ச்சிகளின் வேகத்திற்கு அடிமையாகாமல், அறிவின் அடிப்படையில் நின்று, நடுநிலை எண்ணத்தோடு, ஆட்சிமொழிச் சிக்கலை ஆராய்ந்து பார்க்கும் சிந்தனையாளர்கள் அனைவரும், ஆங்கிலத்தைமட்டுமே ஆட்சி மொழியாக ஏற்பதால் பின்கண்ட நன்மைகள் விளையும் என்பதையும், இந்தி மொழியை மட்டுமே ஆட்சி மொழியாக ஏற்பதால் இந்த நன்மைகள் கிடைக்கமாட்டா என்பதையும், சற்றும் தயக்கமின்றி ஏற்றுக்கொள்வது உறுதி.

1. ஆங்கிலத்தை மட்டுமே இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டால், ஆட்சி மொழியால் ஏற்படுகிற அனுகூலங்களும் பிரதிகூலங்களும் அதாவது சாதகங்களும் பாதகங்களும், இந்தியாவில் உள்ள எல்லா மொழியினருக்கும், சரி நிகர் சமானமாக—சிறிதளவும் ஏற்றத்தாழ்வின்றி இருக்கும். இதற்கு நேர் மாறாக, இந்தியை மட்டுமே ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டால் இந்திக்

காரர்கள் அவர்களுடைய தாய்மொழியை மட்டும் படித்தால் போதும் —இந்திய அரசாங்கத்தின் எந்த உத்தியோகத்தையும் பெறமுடியும் என்கிற நிலையும், பிற மொழிக்காரர்கள் அவர்களுடைய தாய்மொழியோடு கூட இந்தி மொழியையும் படித்தால்தான் உத்தியோகம் பெற முடியும் என்ற நிலையும் ஏற்படும். இந்த ஏற்றத் தாழ்வின் விளைவாக இந்தி மொழியாளர்கள் இந்தியாவின் முதல்தரக் குடிமக்கள் என்னும் நிலையும், பிற மொழியாளர்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் என்னும் நிலையும் தாமாகவே ஏற்பட்டுவிடும்.

2. ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாக இருந்தால், மொழியின் காரணமாக இந்திய மக்களுக்கிடையே எத்தகைய கசப்புணர்ச்சியும் மனத் தாங்கலும் ஏற்படா. எனவே, அந்நிலையில், இந்திய ஒற்றுமை உணர்ச்சியும், ஒருமைப்பாட்டு உணர்ச்சியும் பலமடையும். இந்திய விடுதலைப் போராட்ட காலத்திலும் அதற்குப் பின்னரும், இந்தியாவில் உள்ள பல்வேறு மொழியினருக்கு இடையே ஏற்பட்ட ஒற்றுமை உணர்ச்சி, ஆங்கில மொழியால் அளிக்கப்பட்ட நன்கொடை என்றே கூறவேண்டும். மராட்டிய மண்டலத்தைச் சேர்ந்த பாலகங்காதர திலகரையும், பாஞ்சாலப் பகுதியைச் சேர்ந்த லாலா லஜபதி ராயையும், உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த பண்டித ஜவகர் லால் நேருவையும், பீகாரைச் சேர்ந்த பாபு ராஜேந்திர பிரசாத்தையும், வங்க மாநிலத்தைச் சேர்ந்த சுபாஷ் சந்திரபோசையும், குஜராத் பகுதியைச் சேர்ந்த உலக உத்தமர் காந்தியடிகளையும் ஒன்று சேர்த்து ஒரே அணியில் கொண்டுவந்து நிறுத்தி, பல்வேறு மொழிகளைப் பேசி வந்த அவர்களை, ஒருவரோடு ஒருவரை உரையாட வைத்து உறவாடவும் வைத்து ஒற்றுமைப்படுத்திய கருவி ஆங்கிலமே என்பதை யாராவது மறுக்க முடியுமா? ஆட்சிமொழியாக ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருந்தால், இந்த ஒற்றுமை உணர்ச்சி மேலும் பல மடங்கு வளர்ந்து ஓங்கிச் செழித்து நிற்க முடியும். இந்தி ஆட்சி மொழியானால், ஒற்றுமை உணர்ச்சி குன்றி, மொழியின் காரணமாக இந்திய மக்களுக்கு இடையே பிளவுகள் ஏற்பட்டு, அன்புச் சூழ்நிலை கெடும்.

3. இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தி மொழியை ஏற்றுக் கொண்டால்கூட, உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகளோடு தொடர்பு கொள்ளவும், உலக அரங்கத்தில் நம்முடைய செல்வாக்கை நிலைநாட்டவும், ஐக்கிய நாடுகள் மன்றத்தில் நாம் சிறந்த முறையில் பணியாற்றவும், நாம், ஆங்கில மொழியைத் தொடர்ந்து படிக்கத்தான் வேண்டும் என்பதை இந்தியாவின் தலைவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். அதுபோலவே, இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும் நமக்குத் தேவைப்படுகிற விஞ்ஞான அறிவையும், தொழில் நுட்ப அறிவை

யும், ஆங்கில மொழியால்தான் அளிக்கமுடியுமே தவிர இந்தி மொழியால் அல்ல. இந்த உண்மையை அதி தீவிர இந்திப் பக்தர்கள்கூட மறுக்க இயலாது. உலகத் தொடர்பு மொழி, விஞ்ஞான அறிவு மொழி, தொழில் நுணுக்க அறிவு மொழி என்கிற காரணங்கட்காக நாம் எப்படியும் கற்றுத் தீர வேண்டிய ஆங்கிலத்தையே ஆட்சி மொழியாகவும் ஏற்றுக்கொண்டால், இந்திய மக்கள் ஒவ்வொருவரும், ஆங்கில மொழி, தத்தம் தாய் மொழி ஆகிய இரண்டு மொழிகளை மட்டும் படித்தால்போதும். ஆனால்இந்திமொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டாலோ, ஆங்கிலமொழி, இந்தி மொழி, தாய் மொழி ஆகிய மூன்று மொழிகளை, இந்திய மக்கள் ஒவ்வொருவரும் படித்தாகவேண்டும். மூன்று மொழிகளைப் படிப்பதற்குத் தேவைப்படுகிற நேரம், முயற்சி, பணம், ஏற்பாடுகள் ஆகியவற்றைவிட, இரண்டு மொழிகளைப் படிப்பதற்குத் தேவைப்படுகிற நேரம், முயற்சி, பணம், ஏற்பாடுகள் ஆகியவை மிகவும் குறைவாக இருக்கும்.

4. சென்ற இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக ஆங்கில மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்திய அரசாங்கத்தின் பல்வேறு துறைகளில் பணியாற்றும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கட்கும் அதிகாரிகட்கும் ஆங்கில மொழியில் எந்தக் கருத்தையும் நுண்ணிய முறையில் எடுத்துக் கூறும் ஆற்றல் ஏராளமாக இருக்கிறது. ஒரு நிர்வாக மொழியாக இருப்பதற்குத் தேவையான சொல்வளமும் தகுதியும் ஆங்கிலத்திற்கு அப்பழுக்கு அற்ற முறையில் இருக்கிறது. இந்த நிலையில், ஆங்கிலத்தைத் தொடர்ந்து ஆட்சி மொழியாக வைத்துக்கொண்டால், ஆட்சிமொழியின் வளர்ச்சிக்காக நாம் எத்தகைய புதிய முயற்சியையும் செய்ய வேண்டியதில்லை. எத்தகைய புதிய செலவையும் ஏற்கவேண்டியதில்லை; அதற்கென்று நாட்டின் அரிய நேரத்தையும் ஒதுக்க வேண்டியதில்லை. ஆனால் இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டால், இலட்சக்கணக்கான அரசாங்க ஊழியர்கள், அந்த மொழியை இனித்தான் கற்றுக்கொள்ளவேண்டும். இதுவரை அந்த மொழி ஆட்சிமொழியாக இருந்ததில்லை. ஆகவே ஓர் ஆட்சிமொழிக்குத் தேவையான நெளிவு சுளுவுகளும், நுணுக்கமான கருத்துக்களைத் துல்லியமாக எடுத்துக்கூறும் சொல்வளமும், இனிமேல்தான் அந்த மொழியில் ஏற்படுத்தியாக வேண்டும். நிர்வாக மொழியாக இருப்பதற்கு உரிய தகுதியையும் திறமையையும் இந்திமொழிக்கு ஏற்படுத்துவதற்கும், அந்த மொழியில் போதிய தகுதியையும் திறமையையும் அரசாங்க ஊழியர்கட்கு ஏற்படுத்துவதற்கும், ஏராளமான அளவில், நாட்டின் செல்வத்தையும் நேரத்தையும் முயற்சியையும் செலவிட்டாகவேண்டும். தட்டித் தீட்டிக் கூராக்கப்பட்டுத் தயாராக உள்ள போர்வாள் போன்றது ஆங்கிலம். இப்போதுதான் பூமியி

லிருந்து வெட்டியெடுக்கப்பட்டு, இனித்தான் கொல்லன் உலைக்களத்துக்குச் செல்லவேண்டிய—பக்குவப்படுத்தப்படாத இரும்புத் துண்டு போன்றது இந்தி. உடனே போர்க்களத்திற்குச் செல்லவேண்டிய நிலையில் உள்ள ஒரு போர் வீரன், தயாராக உள்ள போர்வாளை ஏந்திச் செல்வது அறிவுடைமையா? பக்குவமாகாத இரும்புத் துண்டை எடுத்துச் செல்வது அறிவுடைமையா?

## அரசியல் திட்டத்தைத் திருத்துவது முறையா?

"நிர்வாக மொழியாக இருப்பதற்குத் தேவையான தகுதியும் திறமையும், இந்திமொழியைவிட ஆங்கில மொழிக்கு மிக அதிகமாக இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், இந்தி மொழிதான் இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று அரசியல் திட்டம் தெரிவித்துவிட்டது. அரசியல் திட்டம் புனிதமான ஒரு சாசனம். ஆகவே அதில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்வதுதான் நம்முடைய கடமையே தவிர, அதனைத் திருத்தியமைப்பது, முறையாகுமா?" என்று சிலர் கேட்கிறார்கள். இந்த வாதம், பொருத்தமற்ற வாதம்; பொருளற்ற வாதம்.

மக்களுக்காக அரசியல் திட்டம் இருக்கிறதே தவிர அரசியல் திட்டத்திற்காக மக்கள் இல்லை. மக்களின் நன்மைக்காக ஒரு குறிப்பிட்ட மாறுதலை அல்லது திருத்தத்தை அரசியல் திட்டத்தில் செய்ய வேண்டியது அவசியம் என்று ஏற்பட்டால், அந்த மாறுதலைச் செய்வதுதான் அறநெறி; அதுதான் ஒழுங்குமுறை; அதுதான் ஜனநாயகப் பாதையும்கூட. இந்த உண்மையை மிக நன்றாக உணர்ந்த காரணத்தால்தான், பல்வேறு காரணங்களுக்காக, இந்திய அரசாங்கத்தார், இதுவரை, பதினேழுமுறை அரசியல் திட்டத்தைத் திருத்தியுள்ளார்கள். பதினேழுமுறை திருத்தப்பட்ட ஒரு திட்டத்தை, மொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்காகவும், நாட்டின் ஒற்றுமையைக் கட்டிக் காப்பதற்காகவும், மேலும் ஒரு முறை திருத்துவதில், எத்தகைய தவறும் இருக்க முடியாது.

## தமிழக அரசின் தனிப் பெருங் கடமை!

பதினான்கு தேசிய மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஆக்கப்படுகிறகாலம் வரும்வரையில் ஆங்கிலமொழியை மட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழியாக வைத்துக்கொள்ளவேண்டும் என்பதையும், அதற்குத் தேவையான முறையில் அரசியல் திட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என்பதையும், இவையே தமிழக மக்களின் விருப்பங்கள் என்பதையும், இந்த நியாயமான விருப்பங்களை நிறைவேற்றாமல் ஆட்சிமொழிச் சட்டத்தை மட்டும் திருத்

துவதால் பயனில்லை என்பதையும், இந்திய அரசாங்கத்திற்குத் தக்க முறையில் எடுத்துச்சொல்லி, ஆவன செய்யவேண்டியது, தமிழக அரசின் தனிப்பெருங்கடமை ஆகும்.

இந்தி பேசாத ஏனைய மாநிலங்களின் அரசுகளும் இதே வகையான எண்ணத்தை இந்திய அரசிடம் தெரிவித்து, அந்த அரசின் அன்பான ஒப்புதலைப் பெறும்வகையில் பணியாற்ற வேண்டியது, அவற்றின் இன்றியமையாத கடமையாகும்.

இந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், ஆங்கிலம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டியதன் அவசியத்தைப் பாராளுமன்றத்தில் எடுத்துக்கூறி, இந்தியப் பேரரசின் அமைச்சர்களுக்கு உண்மை நிலையை உணர்த்த வேண்டும்.

இவர்கள் யாவரும் தத்தம் கடமையைச் செய்யவேண்டும் என்று இந்தி பேசாத மாநிலங்களின் எதிர்காலம் எதிர்பார்க்கிறது.

எதிர்பார்ப்பதில் தவறு என்ன இருக்க முடியும்?

---

# சத்தியத்தின் தலைவாயில்

சத்தியத்தை அடைவதற்கான சாதனங்கள் எப்படிக் கஷ்டமானவையோ, அப்படி எளிமையானவையாகவும் இருக்கின்றன. இறுமாப்பைக் கொண்ட ஒருவனுக்கு அவை முற்றும் சாத்தியமில்லாதவையாகத் தோன்றலாம். ஆனால் கபடமற்ற ஒரு குழந்தைக்கு அவை சாத்தியமானவை. சத்தியத்தை நாடிச் செல்பவர், தூசிக்கும் தூசியாகப் பணிவு கொள்ளவேண்டும். உலகம் தூசியைக் காலின்கீழ் வைத்து நசுக்குகிறது. ஆனால், சத்தியத்தை நாடுகிறவரோ, அத் தூசியும் தம்மை நசுக்கும் அளவுக்குத் தம்மைப் பணிவுள்ளவராக்கிக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் – அதற்குமுன் அல்ல – ஒளியைக் கணப்பொழுதாவது காணமுடியும். வசிஷ்டருக்கும் விஸ்வாமித்திரருக்கும் நடந்த வாக்குவாதம் இதை மிகத் தெளிவாக்குகிறது. கிறிஸ்தவமும், இஸ்லாமும்கூட இதை நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

—மகாத்மா காந்திஜி.

# காலமும் கருத்தும்

## தமிழக அரசின் வரவும் செலவும்

மார்ச்சுத்திங்கள் முதல்நாளன்று, தமிழ் நாட்டுச் சட்டமன்றத்தில், தமிழ் நாட்டின் முதலமைச்சரும் நிதியமைச்சருமாக உள்ள திருவாளர் பக்தவத்சலம் அவர்கள், 1965—66ஆம் ஆண்டிற்குரிய தமிழ்நாட்டு அரசின் வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளார். இந்தத் திட்டத்தைப் படித்துப் பார்க்கும்போது, தமிழ் நாட்டு அரசின் வரவும் செலவும் இதற்குமுன் எப்போதும் இருந்திராத உச்ச அளவை இப்போது அடைய இருக்கின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது. 1965-66ஆம் ஆண்டின் வரவு ரூ 163 கோடியே 63 இலட்சமாக இருக்கும் என்றும், செலவு ரூ 170 கோடியே 60 இலட்சமாக இருக்கும் என்றும் அமைச்சர் அவர்களின் நிதி நிலை அறிக்கை தெரிவிக்கிறது. அரசாங்கத்தால் செய்யப்படவேண்டிய பணிகள் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகின்றன என்பதையும், அரசாங்கத்தால் ஏற்கெனவே ஆற்றப்பட்டுவந்த பணிகளுக்கு ஆகும் செலவும், விலைவாசி உயர்வின் விளைவாக ஆண்டுக்கு ஆண்டு கூடுதலாகி வருகிறது என்பதையும், வளர்ந்து வருகிற இச் செலவுக்கு ஏற்ப அரசாங்கத்தின் வருவாயும் கூடி வருகிறது என்பதையுமே, இப்புள்ளி விவரங்கள் நமக்குத் தெள்ளத் தெளிவாக அறிவிக்கின்றன.

இந்த வரவு செலவுத் திட்டத்தில், வரவு—செலவு—ஆகிய இரண்டுமே உயர்ந்த அளவுகளை எட்டியுள்ளன என்ற போதிலும், வரவைவிடச் செலவு, ஆறு கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சம் ரூபாய் அளவுக்குக் கூடுதலாக இருக்கிறது. துண்டு விழுகிற இத் தொகையை ஈடு கட்டுவதற்காகப் புதிய வரிகள் எவையும் விதிக்கப்படவில்லை. பழைய வரிகளின் விகிதங்களும் உயர்த்தப்படவில்லை. ஓய்வு பெற்றுள்ள சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திருவாளர் பி.வி. இராஜமன்னார் அவர்கள் தலைமையில் மத்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள நிதி ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள் விரைவில் எதிர்பார்க்கப் படுகின்றன. அந்தப் பரிந்துரைகளின் விளைவாக, மத்திய அரசிடமிருந்து தமிழக அரசுக்குக் கிடைக்கும் நிதி உதவியின் அளவு கூடுதலாகும் என்று தமிழக அரசு எதிர்பார்க்கிறது. அப்படிக் கூடுதலாகும் நிதி உதவியிலிருந்து இத் துண்டுத் தொகையை எளிதில் ஈடுகட்டிக் கொள்ளலாம் என்று தமிழக அரசு கருதுகிறது. எனவேதான் துண்டுவிழும் தொகையை ஈடுகட்-

| அடிப்படை ஊதியம் | | புதியபஞ்சப் படி |
|---|---|---|
| ரூ. | | ரூ. |
| 89 வரை | | 28 |
| 90 முதல் | 149 வரை | 42 |
| 150 முதல் | 209 வரை | 54 |
| 210 முதல் | 399 வரை | 66 |
| 400 முதல் | 599 வரை | 70 |
| 600 முதல் | 799 வரை | 80 |
| 800 முதல் | 999 வரை | 85 |
| 1000 முதல் | 1200 வரை | 90 |

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று சாராரில் ஒவ்வொருவரும் தற்போது பெற்றுவருகிற பஞ்சப் படியோடு இந்தப் புதிய பஞ்சப் படி விகிதத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பஞ்சப்படியின் உயர்வு எவ்வளவு என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அவ்வாறு ஏற்படுகிற உயர்வு, ஏழரை ரூபா முதல் ஐம்பது ரூபாய்வரை இருக்கும் என்று தெரிகிறது. எனவே ஆரம்ப ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதமும் குறைந்தது ஏழரை ரூபா இனிக் கூடுதலாகக் கிடைக்கும் என்பது தெளிவு. சிலருக்கு அதைவிடக் கூடுதலாகக் கிடைக்கும். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கட்கு மேலும் சற்று மிகுதியாகக் கிடைக்கும்.

பண்டங்களின் விலைகள் கற்பனைசெய்துகூடப்பார்க்கமுடியாத அளவுக்கு உயர்ந்து, ஏழை—நடுத்தர மக்களின் உள்ளங்களையும் குடும்பங்களையும் வேதனைக் கடலில் தள்ளித் தத்தளிக்க வைத்துள்ள இன்றைய நிலையில், இந்தப் பஞ்சப்படி உயர்வால் மட்டும் அவர்களுடைய குடும்பங்களில் தொல்லையும் துயரமும் அகன்று, மகிழ்ச்சியும் நிம்மதியும் மலர்ந்துவிட முடியாது. இந்த உண்மையை நாம் மிக நன்ருக அறிவோம். நிலையான மகிழ்ச்சியும் நிம்மதி உணர்ச்சியும் அக்குடும்பங்களில் அரும்பி மலர்ந்து காய்த்து கனிய வேண்டுமானல், பண்டங்களின் விலைகள் நாளுக்கு நாள் ஓங்கி உயர்ந்து ஒப்பற்ற உருவம் பெறுகிற போக்கு, உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதுமட்டும் அல்ல. கண்ணியமான அளவுக்கு அந்த விலைகள் இறக்கப்படவும் வேண்டும். ஊதியத்தில் தரப்படுகிற உயர்வைவிட விலைகளில் ஏற்படுத்தப்படுகிற இறக்கம்தான், மக்களுக்கு நிலையான—உருவான—உண்மையான உதவியாக இருக்க முடியும். மத்திய அரசாங்கமும் சரி, மாநில அரசாங்கங்களும் சரி, விலைகளைக் கட்டுப்படுத்திக் கீழேஇறக்கும் இந்தஅரும்பெரும் பணியில் முழுமூச்சுடன் உடனடியாக ஈடுபட்டாகவேண்டும். இதில் சிறிதளவும் அவை தாமதம் காட்டல் ஆகாது. பொதுமக்களின் வாழ்க்கை, புன்னகைப் பூந்தோட்டமாக பூத்துக் குலுங்காவிட்டாலும் கவலையில்லை. ஆனல் அது உயிரைக்கொன்று தின்னும் பாலைவனமாகக் காட்சி அளிக்கலாகாது. ஆமாம் — நியாயம்தான் — என்பர் அனைவரும். நம் அரசாங்கத் தலைவர்களின் இதயங்களில் இடம் பெறவேண்டிய இலட்சிய

திதம் இதுதான் என்பர் எவரும். ஆனால் இந்த இலட்சிய கீதத்தை நடைமுறை நாதமாக்குவது எப்படி? அதற்குத் தேவையான ஏற்பாடுகள் என்னென்ன? இந்தக் கேள்விகளுக்கு உரிய விடைகளைக் கண்டறிவதிலும், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதிலும், நம் அரசாங்கங்கள் முழு ஆர்வத்துடன் ஈடுபடுவது இன்றியமையாதது.

ஆனால் ஒன்று அரசாங்கங்கள் எவ்வளவுதான் ஆர்வத்தோடு இந்தப் பணியில் ஈடுபட்டாலும் விலைகள் இறங்குவதற்குச் சற்றுக் காலம் பிடிக்கும். அதுவரையில் ஆசிரியர்களும் அரசாங்க ஊழியர்களும் விலைவாசி உயர்வால் வாட்டப்படுவதைக் கண்டும் வாளா கிடக்கலாமா அரசாங்கம்? தற்காலிகப் பரிகாரம் ஒன்றைத் தேடித்தானே ஆகவேண்டும்? அத்தகைய பரிகாரம்தான் பஞ்சப்படி உயர்வு.

அரசாங்கத்தார் அளித்துள்ள பஞ்சப்படி உயர்வு என்னும் தற்காலிகப் பரிகாரத்தை, நெஞ்சம் நிறைந்த நன்றியுணர்ச்சியுடன் வரவேற்கிறோம். ஆனால் அப்படி வரவேற்கிற அதே நேரத்தில், இந்தத் தற்காலிகப் பரிகாரத்தோடு ஆட்சியாளர்கள் மன நிறைவு கொண்டு விடக்கூடாது என்பதையும், விலைவாசிக் கட்டுப்பாடு என்னும் நிலையான பரிகாரத்தைக் கூடிய விரைவில் அளித்தால்தான் மக்களின் வாழ்வு வாழ்வாக இருக்கமுடியும் என்பதையும் வற்புறுத்திக்கூற விழைகிறோம்.

## நாட்டுக்கு நலம் பயக்கும் நல்லதோர் ஏற்பாடு

அரசாங்க அலுவலகங்களிலும் தனியார் அலுவலகங்களிலும் பணியாற்றுகின்ற பல்லாயிரம் ஊழியர்களில் பலர், உயர்நிலைப் பள்ளியின் இறுதி வகுப்பு என்கிற அளவோடு தங்களுடைய கல்விப் பயிற்சியை முடித்துக்கொண்டு, பொருள் ஈட்டவேண்டிய நெருக்கடியின் காரணமாக அலுவல்களில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களில் பலர், பி. ஏ., பி. காம்., பி. எஸ்ஸி., எம். ஏ. முதலிய மேல்நிலைத் தகுதிகளைப் பெறவேண்டும் என்கிற பேராவல் படைத்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அந்த ஆவலை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள், கல்லூரிகளிற் சேர்ந்து முழுநேர மாணவர்களாக ஆவது என்பது, இயலாத ஒன்று. ஏனென்றால் அப்படி அவர்கள் ஆகவேண்டுமானால், அவர்களுடைய உத்தியோகப் பொறுப்புகளிலிருந்து விடுதலை பெற்று, ஊதியத்தை இழக்கத் தயாராக இருக்கவேண்டும். ஊதியத்தை இழந்துவிட்டால் குடும்பம் நடப்பது எப்படி? இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காகத்தான், மேல்நாடுகள் பலவற்றில், மாலை நேரக் கல்லூரிகள் ஏராளமான அளவில் அமைந்துள்ளன. அப்படி அமைந்திருப்பதால்தான், அந்த நாடுகளில், அலுவல்களில் இருப்பவர்கள், அலுவல் நேரத்திற்குப் பின்னர், மாலை வேளைகளில் மட்டும் அக் கல்லூரிகளில் நடத்தப்

படும் வகுப்புகளிற் சேர்ந்து பயின்று தம் கல்வித் தகுதிகளை உயர்த்திக் கொள்ள முடிகிறது. அவ்வாறு அவர்கள் பெறுகிற புதிய தகுதிகளின் விளைவாக, பல சமயங்களில், உயர்ந்த பதவிகளையும் கூடுதலான ஊதியங்களையும் அவர்களால் அடைய முடிகிறது.

அலுவல்களில் இருப்பவர்களுக்கு இன்றியமையாத இந்த வசதி, இதுவரை தமிழகத்தில் ஏற்படுத்தப்படவில்லை. சில திங்கள்களுக்கு முன்னர்தான், சென்னைப் பல்கலைக் கழகத்தார், மேல் நாடுகளில் இருப்பன போன்ற மாலை நேரக் கல்லூரிகளை இங்கும் ஏற்படுத்துவதற்கு, கல்லூரி நிர்வாகிகளுக்கு அனுமதி அளித்தார்கள். அந்த அனுமதியைப் பயன்படுத்திக்கொண்டு, தமிழ்நாட்டு அரசாங்கத்தார், அடுத்த கல்வி ஆண்டிலிருந்து, மாலை நேரக் கல்லூரிகள் மூன்றை ஏற்படுத்த முடிவு செய்துள்ளார்கள். அக்கல்லூரிகளில் இரண்டு, ஆடவருக்காகவும் ஒன்று, மகளிருக்காகவும் அமைந்திருக்கும். ஆடவருக்கான இரு கலைக் கல்லூரிகள், முறையே, சென்னை அரசினர் கலைக்கல்லூரி, கோயமுத்தூர் அரசினர் கலைக் கல்லூரி ஆகிய இடங்களில் அமைந்திருக்கும். மகளிருக்கான மாலை நேரக் கல்லூரி, சென்னை மேரி அரசி கல்லூரியில் பணியாற்றும்.

மார்ச் முதல் நாளன்று முதலமைச்சர் திருவாளர் பக்தவத்சலம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கையில் காணப்படுவதுதான் இந்த வரவேற்கத் தக்க செய்தி.

மாலை நேரக் கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி, நம் "ஆரம்பக் கல்வி" இதழானது எத்தனையோ முறை தலையங்களும் துணைத் தலையங்களும் தீட்டியிருக்கிறது என்பதை நேயர்கள் நன்கு அறிவார்கள். நம்முடைய இதயத்தைக் கவர்ந்த இலட்சியங்களில் ஒன்று இப்போது நடைமுறை உருவம் பெறுவதைக் காணும்போது, நம்முடைய நெஞ்சக்கடலை இன்ப அலைகள் தாலாட்டுவது இயற்கை அல்லவா?

மாலை நேரக் கல்லூரிகள் மூன்றுதான் தொடங்கப்படுகின்றன, வருகிற கல்வி ஆண்டில். அடுத்துத் தொடர்கிற ஆண்டுகளில் அத்தகைய கல்லூரிகள் மேலும் பலவற்றைத் தொடங்க வேண்டும்—ஆட்சியாளர்கள்.

மாலை நேரக் கல்லூரிகளைத் தற்போது அரசினர் மட்டுமே தொடங்குகிறார்கள். விரைவில் அத்தகைய கல்லூரிகள் பலவற்றைத் தனியார் நிறுவனங்களும் தொடங்குதல் வேண்டும்.

இத்தகைய கல்லூரிகளின் எண்ணிக்கை பெருகுவதற்குத் தேவையான சூழ்நிலை, அடுத்து வருகிற ஆண்டுகளில் உருவாகும் என்பதில் நமக்கு ஐயம் துளியும் இல்லை.

---

# மொழிப் பிரச்சினை!

**மூடுபனியில் சிக்கிவிட்டால் முடிவைக் காண முடியாது;**
**பிரச்சினையைத் தீர்க்க வழியும் ஏற்படாது!**

*உயர்தனிச் செம்மொழியான தமிழ் மொழி என்னுடைய தாய் மொழி என்ற பெருமிதம் எனக்கிருக்கிறது. நீண்ட வரலாற்றையும் புகழ்மிக்க பொற்காலங்களையும் உடைய மொழி-கவிஞர்கள் யாத்த மொழி - கவிதைகள் கொஞ்சும் மொழி - காலத்தாலும் கவினுறு வளத்தாலும் கடலெனப் பரந்து கிடக்கும் மொழி-எங்கள் உயிருடன் வாழ்வுடன் கலந்த மொழி-அந்தத் தமிழ் மொழி மற்றெதற்கும் தாழாத வகையில் மத்திய ஆட்சிமொழி என்ற தகுதி தரப்படும்; வரை, நான் அமைதி பெறமாட்டேன்; திருப்தி அடையமாட்டேன்!*

**மாநிலங்களவையில் குடியரசுத் தலைவர் நிகழ்த்திய பேருரையின்மீது நடந்த விவாதத்தில்**

# அறிஞர் அண்ணாத்துரை விளக்கவுரை

"அவைத் தலைவர் அவர்களே, கடந்த பிப்ரவரி 17-ந் தேதி பாராளு மன்ற உறுப்பினர்களை வரவேற்று, குடியரசுத் தலைவர் ஆற்றிய பேருரைக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

'தளராத நம்பிக்கையுடனும், சிதையாத உறுதியுடனும் நாட்டை நடத்திச் செல்ல' பாராளுமன்ற உறுப்பினர்கள் பாடுபட வேண்டுமென்று குடியரசுத்தலைவர் அறிவுரை வழங்கியுள்ளார்.

'தளராத'—'உறுதி' என்று குடியரசுத் தலைவர் கூறியவை நன்கு சிந்திக்கவேண்டிய சொற்களாகும்.

அரசாங்கத்தை நடத்திச் செல்லும் போக்கும், எடுக்கும் முடிவுகளும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து எதிர்பார்க்க வேண்டிய அளவுக்கு உயர்ந்து இல்லாதனவாகக் குடியரசுத் தலைவருக்கு ஒரு வேளை பட்டிருக்கலாம்—பெரும் பாலும் அது சரியாகக்கூட இருக்கலாம்.

### மக்கள் கணக்கு!

அரசாங்கத்தை எல்லாவற்றுக்கும் பாராட்டுவது என்ற சபலத்துக்கு ஆட்படாமல் இருந்திருந்தால், குடியரசுத் தலைவர், அரசாங்கத்தின் சாதனைகளைப் பற்றிப் பலவாறு பெருமைப்படுத்திப்பேசியிருந்திருக்கமாட்டார்.

ஆனால், அரசாங்கத்தின் சாதனைகளைப்பற்றி மக்கள் வேறு விதமாகக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பயங்கரமான உணவு நெருக்கடி—படுகுழியை நோக்கிச் செல்லும் ஊழல் ஆட்சி—விலைவாசி உயர்வு—வேதனை தரும் நலிவுகள்—இவைகள்தான் இந்த ஆட்சியின் அரும் பெரும் 'சாதனை' களாக இன்று விளங்குகின்றன!

## வேதனைக்குரிய விபரீதம்!

தென்னாட்டில் நிகழ்ந்த பலாத்காரச் செயல்கள் பற்றிக் குடியரசுத் தலைவர் கூறுவதுபோல், நாம் ஒவ்வொருவரும் வேதனைப்படுகிறோம்.

அந்த நிகழ்ச்சிகள் குறித்து யாரும் மகிழ்ச்சியடைய முடியாது—குறிப்பாக அந்தப் பகுதியிலிருக்கும் மக்கள் நிச்சயமாக மகிழ்ச்சியோ பெருமையோ அடையவில்லை.

நாட்டு முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்கள்—பலாத்காரச் செயல்களால் பாதிக்கப்படுபவர்கள்—ஒருபோதும் அத்தகைய பலாத்காரச் செயல்களை ஆதரிக்க மாட்டார்கள்.

## கட்சியல்ல காரணம்

தென்னகத்தில் நடைபெற்ற பலாத்காரச் செயல்களுக்குச் சில அரசியல் கட்சியினர்தாம்காரணம் —என்று யாராவது கூறுவார்களே யானால், அது தற்பொழுதுள்ள நிலைமையைப் புரிந்து கொள்ள மறுப்பது மட்டுமல்ல—, நாட்டின் அரசியல் வரலாற்றையும், தென்னாட்டிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகளின் வரலாற்றையும், அந்தக்கட்சிகளின் வளர்ந்த தன்மையையும் புரிந்துகொள்ளாததுமாகும்.

பலாத்காரத்தைக் கண்டிப்பதில் நான் தயங்கவில்லை. குடியரசுத் தலைவருடனும், மற்ற உறுப்பினர்களுடனும் சேர்ந்து நானும் வன்மையாக — அழுத்தந் திருத்தமாக — பலாத் காரத்தைக் கண்டிக்கிறேன்.

## உறுதி கூறுகிறேன்!

எனது கழகத்தின்மீது பழி சுமத்தப்பட்டாலும், நான் உள்ளத் தூய்மையுடன், நேர்மை உணர்வுடன் கூறுகிறேன்—'நடைபெற்ற பலாத்காரச் செயல்களுக்கும், எங்களுக்கும் நேரிடையாகவோ மறைமுகமாகவோ துளிக்கூடத் தொடர்பு இடையாது' என்று.

திராவிட முன்னேற்றக் கழகம் தூய்மையான குறிக்கோளை உடையது - உடனடியான திட்டத்தை உடையது—நேர்மையான வழியைப் பின்பற்றுவது—குறிக்கோளிலும், நடைமுறைத் திட்டத்திலும், மற்ற எந்த அரசியல் கட்சிக்கும் பின்னடையாத விதத்தில், தி. மு. கழகம் தூய்மையையும் உயர்ந்த மனப்பாங்கையும் பெற்றிருக்கிறது.

மாணவர் கிளர்ச்சியை நாங்கள் தூண்டிவிடவுமில்லை - பலாத்கார

முறைகளை நாங்கள் கடைப்பிடிக்கவுமில்லை.

இப்பொழுது சாட்டப்படும் குற்றச்சாட்டுகளைச் சமாளிக்க, இவற்றை நான் கூறவில்லை.

எந்தக் காலத்திலும்-எந்தக் கட்டத்திலும் — நேர்மையுள்ளம் கொண்ட எவரும், எனது கட்சியின் தூய்மை பற்றியோ-நடைமுறைத் திட்டம் பற்றியோ குறைகாண முடியாத விதத்தில் இருந்து வந்திருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்......

## திருத்தத்தாலல்ல, தீர்க்கமான முடிவால்!

திரு. ஜி. இராமச்சந்திரன் (நியமனம்; தமிழ்நாடு):—"நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். இந்தியாவின் ஒற்றுமை என்பது உங்கள் கட்சிக் கொள்கையில் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளதா?

அண்ணா:—"எங்கள்கொள்கையில் இந்திய ஒற்றுமையைத் திட்டவட்டமாக ஏற்றுக்கொண்டு விட்டிருக்கிறோம். அது நீங்கள் கொண்டு வந்த சட்டத் திருத்தங்களால் அல்ல - சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்ட பொழுது, 'ஒற்றுமையுடனிருந்தால்தான் அனைவருக்கும் நல்லது என்ற உணர்வு எங்களுக்கு ஏற்பட்டது."

திரு. ஜி. இராமச்சந்திரன்:—சீன ஆக்கிரமிப்புப்பயம் நீங்கிவிட்டால், மீண்டும் ஒன்றுபடாத நிலைக்கு நீங்கள் திரும்பப் போய் விடுவீர்களா?

அண்ணா:—"சீன ஆக்கிரமிப்பை ஒரு சின்னமாகக் கூறினேன்; அது ஒன்றுமட்டும் காரணம் என்று கூறவில்லை."

## கவனத்துக்கு

நமது தலைமையமைச்சர் அவர்கள் இங்கு இருக்கிறார்கள்; தென்னாட்டில் நடந்தவைபற்றி அவரிடம் நேரிடையாக விளக்கிக் கூறுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. மாறாக, அரசாங்கத் தரப்பில் தரப்பட்ட விளக்கங்கள்தான் அவருக்கு இது வரை கிடைத்திருக்கும்.

எனவே, அதுபற்றி ஒரு சிலவற்றை இந்த அவையின் கவனத்திற்கும், தலைமையமைச்சரின் பார்வைக்கும் வைக்க விரும்புகிறேன்.

மாணவர்கள் கிளர்ச்சி சனவரி 25ந்—தேதி ஆரம்பித்தது. நானும் எனது கழகத்தைச் சேர்ந்த 3,000 பேரும் 25—ந் தேதி நள்ளிரவில் கைது செய்யப்பட்டு, 2—ந் தேதி வரை சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருந்தோம். அப்பொழுதே வெளியில் நடைபெறும் பலாத்காரச் செயல்கள் பற்றிய செய்திகளை சிறைச்சாலைக்குள்ளிருக்கும் நாங்கள் பத்திரிகைகளில் படித்துத் தெரிந்துகொண்டோம். அவ்வளவுதான்.

இந்த நிலையில், பலாத்காரச் செயல்களுக்கு எங்களைக் காரணமாக்குவது எந்த அளவு பொருந்தும் என்று தெரியவில்லை. நிலைமைக்குப் பொருந்தி வாராதது

மட்டுமல்ல—எங்கள் கழகத்தின் கொள்கைக்கும் திட்டத்துக்கும் பலாத்காரம் என்பது சிறிது கூடப் பொருந்தி வராத ஒன்று.

## அவருக்குத் தெரியாததல்ல!

'சௌரி சௌரா' பற்றியும், ஜாலியன் வாலாபாக் பற்றியும் தலைமையமைச்சர் அவர்கள் நன்கு அறிந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

மக்கள் சிறைகளில் தள்ளப் பட்ட காட்சிகளையும், மக்கள் சட்ட முறைகளை மீறிய காட்சிகளையும் அவர் கண்டிருப்பார்.

மக்களுடைய உணர்ச்சி சட்ட முறையில்வெளிவாராதபடி தடுக்கப் பட்டால், அது பொங்கி எழுந்து சமுதாயத்தின் பல துறைகளிலும் வெள்ளமெனப் பாய்ந்து செல் லும் என்பது அவருக்குத் தெரிந் திருக்க வேண்டும்.

தென்னாட்டில் உண்டான கிளர்ச்சிகளைத் தி.மு. கழகம்தான் தூண்டிவிட்டது – என்று சிலர் ஆர அமர யோசிக்காமல் பழிச் சொற்களை அள்ளி வீசியபோதி லும், தலைமையமைச்சர் லால்பக தூர் அவர்கள், அத்தகைய அவ சர முடிவுக்கு வரமாட்டார் என்று நினைக்கிறேன்.

எனது கட்சிக்கு வாய்ப்புத் தரப்பட்டால், எங்களது குற்ற மற்ற தன்மையை தலைமையமைச் சர் அவர்களே கண்டு கொள்ளும் படி செய்யமுடியும்.

பலாத்காரம் பற்றியோ, அது கலந்த கிளர்ச்சி பற்றியோ, நாங் கள் ஒரு அறிக்கையோ—கட்டு ரையோ—தலையங்கமோ — இது வரை தீட்டியது கிடையாது; பேச்சிலும் எழுத்திலும் துளிக் கூட நாங்கள் ஆதரவு காட்டியது மில்லை—தூண்டிவிடவுமில்லை.

உள்ளத் தூய்மையுடன் கூறு கிறேன்—ஒரு நியாயமான முடி வை அமைதியான முறையில் காணவேண்டுமென்று நாங்கள் பாடுபட்டு வருகிறோம்!

"மாணவர்கள் அரசியல் போராட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது" என்று நாங் கள் வலியுறுத்தி வந்திருக் கிறோம்.

அரசியல் நிகழ்ச்சிகளிலோ, போராட்டங்களிலோ ஈடுபடு மாறு மாணவர்களை நாங்கள் அழைத்தது கிடையாது.

## ஒப்பந்தத்தை மீறியது! கழகமல்ல, காங்கிரஸ்

நான் இங்கு வெளிப்படை யாகக் கூறுவேன் — தலைமை யமைச்சர் சார்ந்திருக்கும் கட்சி தான், மாணவர்களை, 'அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடுத்தக் கூடாது' என்று ஏற்பட்ட ஒப் பந்தத்தை மீறி நடந்தது.

தஞ்சாவூரில் அதற்காக ஒரு மாநாடு கூட்டி, காங்கிரசுத் தலை வர்கள் அதில் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

ஆக, ஒழுங்கு வரையறையை மீறிய குற்றச்சாட்டு காங்கிரசுக் கட்சி மீதுதான் இருக்கிறதே தவிர, எங்கள் மீது அல்ல!

## ஆதாரமற்ற அலங்கோலம்

இப்பொழுது நடைபெற்ற மாணவர் கிளர்ச்சியில், இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த மாணவர்கள் முன்னணியில் நின்று கிளர்ச்சி செய்துள்ளனர்.

இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த ஒரு மாணவர் தலைவர், அப்பொழுது சிறையில் வைக்கப்பட்டார்; அவர் மீது ஒரு வழக்கும் போடப்பட்டுள்ளது. மேலும் அவர், ஒரு போலீசு அதிகாரியின் மகனுமாவார்.

ஆக, எல்லாவற்றுக்கும் தி. மு. கழகம் மீது குற்றஞ்சாட்ட நினைப்பது, விவரம் அறியாதோரின் முயற்சி—ஆதாரமற்ற அலங்கோலம் !

அத்தகைய பொறுப்பற்ற—ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இந்தப் பேரவையிலுள்ள கனம் உறுப்பினர்கள், அப்படியே நம்பி விட்டார்கள் ! அத்தகைய மூடுபனியில் சிக்கிவிட்டால் முடிவைக் காண முடியாது. பிரச்சினையைத் தீர்க்க வழியும் ஏற்படாது.

## உடலை ஒடுக்கலாம்; உணர்ச்சியை அடக்க முடியாது

கிளர்ச்சிக்குக் காரணம் ஒரு அரசியல் கட்சிதான்—என்ற கருத்தை நீங்கள் ஆரம்பமாக வைத்துக் கொண்டால், பிறகு, 'அந்தக் கிளர்ச்சியை அடக்கும் வழி என்ன ?' என்று ஆராயப் புகுந்து, அந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சியை, 'எந்த முறையாலாவது அடக்கி ஒடுக்கி அழித்து விடுவதுதான் நல்லது' என்ற முடிவுக்கு வருவீர்கள். அத்தகைய அடக்கு முறையில் நீங்கள் ஈடுபட உங்களிடம் அதிகாரம் நிறைய இருக்கிறது; அடக்குமுறை ஆட்சியில் நீங்கள் வெற்றி பெறுவதாகக்கூட வைத்துக் கொள்ளலாம்.

உடலை ஒடுக்கலாம் — உணர்ச்சியை மாய்க்க முடியாது !

## தலைதூக்கும் உணர்ச்சி !

ஒருகணம் யோசித்துப் பாருங்கள் — அவ்வளவுக்குப் பின்னும் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு கண்டுவிட்ட நிலைமை ஏற்படுமா ?

இந்தப் பிரச்சினைகளைவிட ஒரு பெரிய பிரச்சினை இருக்கிறது—அதுதான், பலாத்கார உணர்ச்சி ஏன் அவ்வப்போது தலைதூக்குகிறது — அது தலையெடுக்காதபடி தடுத்து நிறுத்துவது எப்படி—என்பது !

அரசியல் பிரச்சினைகளில் பலாத்காரம் தலைதூக்குவது, பல தடவைகளில் ஏற்பட்டிருக்கிறது.

ஆந்திர மாநிலக் கிளர்ச்சியில் பலாத்காரச் செயல்கள் நிகழ்ந்தபோது, எல்லோரும் அவற்றைக் கண்டித்துப் பேசினார்கள்.

பலாத்கார உணர்ச்சி கண்டிக்கப்பட்டது—உயர்ந்த பண்புகள் பாராட்டப்பட்டன !

"பலாத்காரம் மூலம் எதையும் சாதிக்க முடியாது" என்று கூறினோம்.

மாராட்டிரத் தனி மாநிலக் கிளர்ச்சி வந்தபொழுது — அந்தக் கிளர்ச்சியில் பலாத்காரச் செயல்கள் நிகழ்ந்தபொழுது - மீண்டும் யோசனைகள்-குழுக்கள் — உபதேசங்கள் உண்டாயின; பலாத்காரத்தைக் கைவிடும்படி மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

## சரிந்தது, எப்போது?

மக்களும் பலாத்காரத்தைக் கைவிட்டார்கள்—எப்பொழுது? மராத்திய மாநிலம் தனியாக அமைக்கப்பட்டன!

மகா குசராத் கேட்டு கிளர்ச்சி மூண்டபொழுது, பலாத்காரம் தலை தூக்கவில்லையா?

விதர்ப்ப மாநிலம் கேட்டு கிளர்ச்சி ஏற்படவில்லையா?

முதுபெரும் அரசியல்வாதிகளான டாக்டர் ஆனே போன்றவர்கள் காங்கிரசை எதிர்த்துப் போராடவில்லையா?

அசாமில் மூண்ட மொழிக் கலவரங்களில் அசாமியருக்கும்-வங்காளிகளுக்குமிடையில் விரோதம் மூண்டு, பல்வேறு பலாத்காரச் செயல்கள் நடந்தேறின.

"நான் இங்குக் குறிப்பிட விரும்புவது — பலாத்காரத்தைக் கண்டித்து உபதேசங்களும், ஆலோசனைகளும் எவ்வளவுதான் வழங்கப்பட்ட போதிலும் பலாத்கார உணர்ச்சியை ஏன் இது காறும் அறவே அகற்ற நம்மால் முடியாது போயிற்று என்பது தான்!

## முதற்கடமை!

பலாத்கார உணர்ச்சி தலைகாட்டாமலிருக்க நாம் என்ன செய்ய வேண்டும்? — இந்தக் கேள்விக்கு நல்ல பதில் காண்பதுதான் இன்றைய அரசாங்கத்தின் முதற் கடமையாக இருக்கவேண்டும்.

இந்த அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களாக இருப்பவர்கள் 'செளரி செளரா' பலாத்காரத்தையும் பார்த்திருக்கிறார்கள் — ஜாலியன் வாலாபாக் அடக்குமுறையும் பார்த்திருக்கிறார்கள்.

ஆனால், நிலைமைகளின் அடிப்படைத் தன்மைகளை ஆராய்ந்து பார்க்காமல், அடக்குமுறையையும் இந்தியப் பாதுகாப்புச் சட்டங்களையும் நம்பி பிரச்சினைக்கு முடிவுகாண இப்பொழுதுள்ள ஆதரவாளர்கள் முயலுகிறார்கள்.

அமைதியான மக்கள் — நேற்று வரை சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து அடக்கமாக இருந்தவர்கள் - திடீரென்று 24 மணி நேரத்துக்குள் 'பயங்கர வாதிகளாக மாறுவதேன்?

## அன்றும் இன்றும்

கலவரங்கள் மூண்ட சிற்றூர்களுக்கும், நகரங்களுக்கும் நான் முன்பு சென்றிருக்கிறேன்.

அங்குள்ள மக்கள் பயங்கரத்தைத் தூண்டுபவர்களாகவோ, அடாத செயல்களைச் செய்யக்

கூடியவர்களாகவோ எனக்குப் பட்டதில்லை.

அவர்களெல்லாம் அமைதியானவர்கள்—சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் — ஒழுங்குடன் வாழ்பவர்கள் !

அப்பேர்ப்பட்டவர்கள், திடீரெனப் பலாத்காரத்தில் ஈடுபட்டு விட்டார்கள் என்றால், ஏன் அத்தகைய திடீர் மாறுதல்? எந்தக் காரணங்களால் அவர்கள் அந்தப் பயங்கர நிலைமைக்குத் துரத்தப் பட்டார்கள்?

மனிதப் பண்புகள் — அமைதிக் குணங்கள் — மறக்கப்படும் நிலைமை எப்படி உருவானது ?—இவைகளுக்குத் தக்க பதில்களை நீங்கள் கண்டு பிடித்தாக வேண்டும்.

## கிடைக்காத விடை !

பலாத்காரம் என்றால் என்ன ? —கட்டுப்படுத்தாத உணர்ச்சி !

போலீசு முறைகளை மட்டும் பயன்படுத்தி பலாத்காரத்தை அடக்கிவிட நினைப்பது முடியாத ஒன்று !

அடக்குமுறை — பலாத்காரம்— இதில், எதனால் எது உண்டாகிறது என்பது விவாதத்திற்குரிய ஒரு கேள்வி. உலகில் அதற்குச் சரியான விடை இன்னும் காணப் படவில்லை.

“அடக்குமுறையின் கொடுமையால் பலாத்காரம் துவங்கியது” என்று மக்கள் கூறுகிறார்கள்.

“பலாத்காரம் துவங்கியதால் அடக்குமுறை ஆரம்பித்தது” என்று அரசாங்கம் கூறுகிறது.

இந்தப் பிரச்சினையில் இரண்டு விதக் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இரண்டு தரப்பிலும் சமாதானங்கள் தரப்படுகின்றன !

எனவேதான், தமிழ் நாட்டிலுள்ள வழக்குரைஞர் சங்கங்கள், நீதி விசாரணை கேட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன.

## நீதி விசாரணை

நடைபெற்ற சம்பவங்களின் தன்மையையும் காரணங்களையும் ஆராய்வது மட்டுமல்ல—மொழிப் பிரச்சினையில் பொதுவாக உண்டாகியுள்ள சூழ்நிலையையும் நீதி விசாரணையின் மூலம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

கடந்த இரண்டு நாட்களாக மொழிப் பிரச்சினை பற்றி கனம் உறுப்பினர்கள் பேசும்பொழுது, தென்னாட்டில் உண்டான ‘தவறான பயம்’ பற்றிக் குறிப்பிட்டார்கள்.

## கோபமல்ல, வேதனை !

நேர்மையற்ற பிரச்சாரத்தால் தவறான பயம் உண்டானதுபோலவும், அவ்வாறு தவறான பயம் உண்டாவதற்குத் தகுந்த காரணங்கள் இல்லையென்றும் அவர்கள் வாதிட்டார்கள்.

அவர்கள் கூறியது எனக்குக் கோபத்தை உண்டாக்கவில்லை— வேதனையைத் தந்தது .

### பள்ளிப் பிள்ளைகளல்ல !

எங்களுடைய புரிந்துகொள்ளும் தன்மையை—அறிவுத் திறமையைக் குறைத்து மதிக்காதீர்கள் !

எங்களுக்கு உண்டானது தவறான பயம் அல்ல—உண்மையான—தகுந்த அடிப்படையுள்ள—காரணம் தெரிந்த பயம்தான் !

அஞ்சுவது அஞ்சாமை பேதமையாகும்.

அஞ்சவேண்டிய ஒன்று—அது பற்றி எங்களுக்கு நியாயமான அச்சம் உண்டானது !

அச்சத்துக்கும்—தவறான அச்சத்துக்கும் வேறுபாடு இருக்கிறது.

மொழிப் பிரச்சினையில் தென்னாட்டில் 'தவறான அச்சம்' வளர்ந்துள்ளதாகத் தலைமையமைச்சரும், உள்துறை அமைச்சரும் கூறுகிறார்கள்.

ஆனால், குடியரசுத் தலைவர், 'தென் மாநிலங்களில் உண்டான அச்சம்' என்றுதான் கூறுகிறார்.

குடியரசுத் தலைவர், 'அச்சம்' என்று மட்டும் கூறுவது குறிப்பிடத்தக்கது.

ஆனால், தலைமையமைச்சர் தான் 'தவறான அச்சம்' என்று கூறுகிறார்.

ஒரு நிலைமையைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல், தவறானபடி அச்சம் கொள்ள நாங்கள் என்ன பள்ளிக் கூடத்துச் சிறுபிள்ளைகளா ? அல்லது நடப்பதை உணர முடியாது திகைக்கும் சித்தப் பிரமைகளா ?

### கேட்காமலில்லை ; கவனித்து வருகிறோம்

உங்கள் அறிக்கைகள்-அறிவிப்புக்கள்—உத்தரவுகள்-சட்டப் பிரிவுகள் ஒவ்வொன்றையும் கூர்ந்து நாங்கள் படித்துவருகிறோம் ; நீங்கள் தரும் விளக்கங்களை ஒன்று தவறாமல் கேட்டு வருகிறோம். உங்கள் நடவடிக்கைகளை இடைவிடாமல் கவனித்து வருகிறோம்.

நீங்கள் கொடுத்த விளக்கங்கள் எங்களைச் சமாதானப்படுத்தவில்லை.

"இந்தியாவின் ஒற்றுமைக்காக ஒரு பொது மொழி தேவை" என்று சுலபமாக வாதிடலாம். இந்த வாதத்தைக் கவனித்துப் பார்ப்பதற்கு முன், 'ஒற்றுமை' என்பதற்கும்—ஒரேவிதம்' என்பதற்குமுள்ள வேறுபாட்டை இந்தப் பேரவையின் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆட்சிமொழியின் மசோதா பற்றிய விவாதத்தில் பேசும்பொழுது, 'மொழிப்பிரச்சினையில் முடிவு கட்டக் கூடியவர்கள் நாமல்ல' என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

### 'இந்தி' வருவது சரியல்ல !

விருப்பு வெறுப்புக்களாலும், இன்னும் அமைதி பெறாத சில

உணர்ச்சிகளாலும், கட்டுண்டிருக்கும் நாம், இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவை எடுக்கக்கூடிய நிலையில் இல்லை என்று கூறுவேன்.

நேற்றைய தினம் பேசிய நண்பர் ஏ. டி. மணி அவர்கள், 'மொழிப் பிரச்சினையை 20 ஆண்டுகளுக்கு ஒத்திப்போட வேண்டும்' என்று கூறினார்கள்; மற்றும் சிலர், 15 ஆண்டுகள் தள்ளிப் போடலாம்-10 ஆண்டுகள் ஒத்தி வைக்கலாம்? என்று கூறுகின்றனர்.

எவ்வளவு ஆண்டுகள் என்ற எண்ணிக்கை ஒருபுறம் இருக்கட்டும். இந்த வேண்டுகோள்கள் எதைக் காட்டுகின்றன? அடிப்படையில், 'இப்பொழுது இந்தி வருவது சரியல்ல' என்று அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள்.

## அச்சத்தைப் போக்கியதா ?

இந்தி இப்பொழுது ஆட்சி மொழியாவதற்கு அவர்கள் தயாராக இல்லை. ஆக, இந்தி இப்பொழுது ஆட்சிமொழியாவது பற்றி ஒருவகை அச்சம் அவர்களுக்கு இருக்கிறது! கட்சி வேறுபாடின்றி மக்களிடையே அச்சம் உண்டாகியுள்ளது! அந்த அச்சத்தை அரசாங்கம் மதிக்க வேண்டாமா ?

எனக்கு முன் பேசிய உத்தரப் பிரதேச நண்பர், 'திடமாக இருங்கள்' என்று தலைமையமைச்சரைப் பார்த்துக் கேட்டுக் கொண்டார்.

## இரும்புக் கரம் !

"சட்டம் மீறப்பட்டாலும், ஒழுங்கு குலைக்கப்பட்டாலும், இரும்புக் கரம் கொண்டு அவற்றை அரசாங்கம் அடக்க வேண்டும்" என்று கூறுவது அரசியல் துறையின் ஆரம்பப் பாடம் என்பது எனக்குத் தெரியும்.

வெளிப்பார்வைக்குப் பலவீனமாகத் தோற்றமளித்த போதிலும், நமது தலைமை அமைச்சர் இரும்புக் கரம் படைத்தவர் என்பதும் எனக்குத் தெரியும்.

இரும்புக் கரம் கொண்டு மண்டைகளைப் பிளக்கலாம்—ஆனால் இதயங்களைக் கவர முடியாது.

நமது தலைமையமைச்சருக்கு இரும்புக் கரமும், பொன்போன்ற இதயமும் இருக்கின்றன என்று நம்புகிறேன்.........

பேராசிரியர் இரத்தினசாமி (சுதந்திரா சென்னை):—கரம் தெரிகிறது—இதயம் வெளிப்படையாகத் தெரியவில்லை !

அண்ணா:—"மனிதனுடைய பெருந்தன்மையில் எனக்கு இன்னமும் நம்பிக்கை இருக்கிறது. அவருக்குப் பொன் இதயம் இருக்கவேண்டும்."

பேராசிரியர் இரத்தினசாமி:— "இருக்க வேண்டும்"

பூபேஷ் குப்தா (கம். மேற்கு வங்கம்):—"இருக்க வேண்டும்."

அண்ணா:—"அது மட்டுமல்ல— மொரார்ஜி தேசாயின் தங்கக்

கட்டுப்பாட்டுக்கு முற்பட்ட பொன்னுக அது இருக்கவேண்டும். 14 காரட் தங்கமாக அது இருக்கக்கூடாது."

## உறுப்பினர் உணரட்டும்

தவறான அச்சத்தில்—தவறான கருத்தில் நாங்கள் இருப்பதாக நினைத்துப் பேசும் உறுப்பினர்களுக்கு ஒன்று கூறுவேன்—'முதலில் உங்களுடைய தவறான கருத்தைப் போக்கிக்கொள்ளுங்கள்.

நாங்கள் காரணத்துடன்தான் அச்சப்படுகிறோம்—சரியான முறையில் புரிந்துகொண்டுதான் போராடுகிறோம்!

நான் வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறேன்-தனிப்பட்ட முறையில் இந்தியை நாங்கள் ஏன் எதிர்க்கவேண்டும்?

இந்தி மீது மட்டுமல்ல—எந்த மொழிமீதும் எங்களுக்கு விரோதம் கிடையாது!

நண்பர் வாஜ்பாய் பேசுவதைக் கேட்கும்பொழுது 'இந்தி ஒரு நல்ல மொழிதான்' என்று தோன்றுகிறது!

மற்றவர்கள் பேசும்பொழுது, 'வாஜ்பாயி பேசுவது போன்று இது அவ்வளவு நன்றாக இல்லையே' என்று தோன்றும்!

## ஞாபகம் படுத்துகிறேன்

இந்தி ஆட்சிமொழியாவதை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இல்லை என்பது மட்டுமல்ல—ஆட்சி மொழியாக வருவதற்கு இந்தி மொழியே தயாராக இல்லை!

அந்த மொழிக்குள்ள குறைபாடுகளை நீங்கள் கவனித்தீர்களா? வளர்ச்சியடைய வேண்டிய—வளமில்லாத ஒரு மொழியை வைத்து, மற்ற வளர்ச்சியடைந்த மொழிகளை நொறுக்கி, அடிமைப் படுத்த உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

ஒரு மொழியை வைத்து, மற்றொரு மொழியை அடிமைப்படுத்தும் முயற்சியில் பாகிஸ்தான் அரசாங்கமே தோல்வி கண்டுள்ளது—இதை மறந்துவிட வேண்டாம்.

## அரசியல் விவேகம்

"திடமாக இருங்கள்" என்று காங்கிரசு நண்பர் கூறினால்கூட, 'நாங்கள் கூறுவதையும் சற்றுக் கவனித்துப் பாருங்கள்' என்று தலைமையமைச்சரை நான் கேட்டுக்கொள்வேன்.

திடமாக இருக்க வேண்டியதுதான்—சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்பதில் திடமாக இருங்கள்!

சீனர்களிடம் காட்டவேண்டிய திடத்தை — பலத்தை — உங்களைச் சேர்ந்த நாட்டு மக்களிடம் காட்டாதீர்கள்!

பண்புடன் இருங்கள்—பெருந்தன்மையுடன் இருங்கள்—கனிந்த இதயத்துடன் இருங்கள்—ஒவ்வொரு கட்டத்திலும் அரசியல் விவேகத்துடன் நடந்துகொள்ளுங்கள்!

நெருக்கடியான கட்டத்தில் எடுக்கப்படும் ஒரு தவறான முடிவு நாட்டைப் பெரிய புயலில் சிக்க வைத்துவிடக்கூடும் என்பதை மறவாதீர்கள்!

## குறையும் குற்றமும்

மொழிப் பிரச்சினைபற்றிய நடவடிக்கைகளில் இந்த அரசாங்கமும், மாநில அரசாங்கமும் பல தவறுகளையும், குறைகளையும் செய்திருக்கின்றன.

இந்த ஆண்டு சனவரி 26—ஆம் தேதியை 'துக்கநாளாக'க் கொள்ள நாங்கள் தீர்மானித்தோம்.

சனவரி 26—ஆம் தேதியைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம், அது குடியரசு நாள் என்பதற்காக அல்ல—அது இந்தி ஆட்சி மொழியாகும் நாள் என்பது தான்!

இந்த நிலைமையில், மாநில முதலமைச்சர் என்ன செய்திருக்கவேண்டும்? எங்கள் கழகத்தின் அவைத்தலைவர், தமிழ்நாடு சட்ட மன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவருமாவார்.

எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து, நிலைமை குறித்து விவாதிக்க ஒரு பொறுப்பு வாய்ந்த முதலமைச்சர் முன்வந்திருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது தவறு? என்பன போன்ற விஷயங்களைக் கேட்டுவிட்டு மேலும் தொடர்ந்தார்.

கேரளாவிற்குச் சென்றிருந்த பிரதம மந்திரி அவர்கள், தமிழ்நாட்டின் நிலைமை அறிந்து அங்கு வருகை தருவார் என்று மிகவும் எதிர்பார்த்தேன். ஆனால் அவர் தமிழ்நாட்டுக்கு வரத் தவறிவிட்டார். மொழிப் பிரச்னையில் அசாம் மாநிலத்தில் கலவரம் மூண்டு, விபரீதங்கள் விளைந்த நேரத்தில், அப்பொழுது பிரதம மந்திரியாக இருந்த பண்டித நேரு அவர்கள் என்ன செய்தார்? செய்தி கேட்டதும், அவர் அசாமுக்குப் பறந்து சென்றார்; மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார்; ஷில்லாங், கௌகாங் போன்ற முக்கிய நகரங்களில் கூட்டங்கள் போட்டு, மக்களுடைய கொந்தளிப்பை அமைதிப்படுத்தும் விதத்தில் பேசினார் பண்டிதநேரு. அவ்வாறு அமைதி காணப்பட்டார். நீங்கள் என்ன செய்தீர்கள்?

## எதிர்பார்த்தோம்ஏமாந்தோம்!

நான் இதைக் கோபத்துடன் கேட்கவில்லை: வேதனையுடன் கேட்கிறேன்! எங்கள் பகுதியில் மக்கள் சுட்டுத் தள்ளப்பட்டார்கள்—பொருள்கள் சேதமாக்கப்பட்டன—உடமைகள் அழிக்கப்பட்டன,—மனிதர்கள் மிருகங்களைப்போல துரத்தித் துரத்தி வேட்டையாடப்பட்டனர். கேரளத்துக்குச் சென்ற நீங்கள் தமிழ்நாட்டுக்கு மட்டும் வரவில்லை, வர நினைக்கவில்லை! நேரிடையாக வராமற்போனது மட்டுமல்ல, வானொலி மூலம் பேசியாவது மக்களை அமைதிப்படுத்த-அவர்களுக்கு ஆறுதல் தர முயன்றிருக்கலாம். அதுவும் செய்யவில்லை.

ஜவகர்லால் நேருவுக்கு அடுத்தபடியாக நீங்கள் வந்தீர்கள். ஜவகர்லால் நேருவுக்கு அடுத்தபடியான மதிப்பை நாங்கள் உங்கள் மீது வைத்திருந்தோம்! ஆனால் மிக முக்கியமான நேரத்தில் நீங்கள் எங்களைக் கைவிட்டுவிட்டீர்

கள்! நான் மிகவும் வருந்துகிறேன்! வேறெந்தச் சமயத்திலும் இல்லாத அளவு—வேறெவரிடமும் எதிர்பார்க்காத அளவு நாங்கள் உங்களை எதிர்பார்த்தோம்; தேவைப்பட்ட நேரத்தில் நீங்கள் உதவிசெய்யத் தவறிவிட்டீர்கள்!

## ஒரே நம்பிக்கை!

சென்னை முதல் அமைச்சர் அவர்களோ எவரையும் கலந்து பேச மறுத்தார். பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், அரசியல் தலைவர்கள்—இவர்களையெல்லாம் புறக்கணித்து, போலீசு அதிகாரியின்மீது மட்டும் நம்பிக்கை காட்டி, அவர் செயல்பட்டார்.

சட்டம்—ஒழுங்கு இவைமட்டும் பேசப்பட்டன. பிரதமமந்திரி சாஸ்திரி முன்னால் நிற்கவில்லை. எல்லாவற்றையும் பின் தள்ளி உள்துறை அமைச்சர் நந்தா சட்டம் — ஒழுங்கின் சின்னமாகக் காட்சிதந்தார். அதனால்தான் நிலைமை மோசமானது.

இன்னும் நிலைமை திருந்தியபாடில்லை. தி.மு. கழகத்தைக் கொடுமைப்படுத்தும் விதத்தில் அரசாங்க நடவடிக்கைகள் வளர்ந்தபடி உள்ளன; தி.மு. கழகத்தினர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். காரணமின்றிச் சிறையில் தள்ளப்படுகின்றனர்!

## பாதுகாப்புச் சட்டம் யாருக்கு?

இந்தியப் பாதுகாப்புச் சட்டமும் துணைக்கு அழைக்கப்பட்டுள்ளது. கழகப் பொருளாளரும், சட்டசபை எதிர்க் கட்சித் துணைத் தலைவருமான திரு. கருணாநிதி இப்பொழுது இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளார்!

இந்தியப் பாதுகாப்புச் சட்டமென்பது நாட்டின் பாதுகாப்புக்காக அல்ல, காங்கிரஸ் கட்சியின் பாதுகாப்புக்காகவே பயன் படுத்தப்படுகிறது என்று எனக்கு முன்பு பேசிய திரு. பூபேஷ் குப்தா கூறினார். அந்தக் குற்றச் சாட்டுக்கு நீங்கள் என்ன பதில் தரப் போகிறீர்கள்? இந்தக் குற்றச் சாட்டை பூபேஷ்குப்தா மட்டுமல்ல, பொதுமக்கள் கேட்கத் தலைப்பட்டுள்ளார்கள்.

## அரசியல் முறையல்ல, போலீஸ்முறை!

நீங்கள் அரசியல் முறையைப் பின்பற்றாமல், போலீசு முறையைப் பின்பற்றுவதாக மக்கள் நினைக்கிறார்கள்;

ஒரு நெருக்கடி நிலைமையென்றால் அதைத் தீர்த்துவைப்பது எப்படி? ஆட்சி மொழிப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாம். இந்தி ஒன்றுதான் ஆட்சி மொழி என்று திரு. வாஜபாய் கூறுகிறார். இருபது ஆண்டுகள் தள்ளிப் போடுங்கள் என்று திரு. ஏ. டி. மணி கூறுகிறார். இந்தி

வரப்போகிறது அது வருகிறபடி வரவேண்டும் என்று நாட்டின் பிரதம மந்திரி தெரிவிக்கிறார். திரு. நந்தா அவர்களோ ஒருநாள் இந்தி வரத்தான் போகிறது என்கிறார், இரு மொழிக் கொள்கையைத் தவிர்க்க முடியாது என்று மறுநாள் அவரே அறிக்கை விடுகிறார்.

## உண்மையும் உறுதியும் ?

உண்மையானநிலை என்ன? உறுதியான கொள்கை எது? சமயசந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் ஆட்சி மொழிக் கொள்கை மாறுகிறதா? எங்களைச் சமாதானப்படுத்தப் போகிறீர்களா அல்லது பிரச்சினைக்கு முடிவு காணப் போகிறீர்களா? பலர் பல விதமாகப் பேசுகிறார்கள், ஒருவரே பலவிதமாகவும் பேசுகிறார்!

அதனால்தான் 'ஆட்சி மொழிகள் மசோதா பற்றிப் பேசும் பொழுது, ஆட்சி மொழிக் கொள்கை மீண்டும் புனராலோசனைகள் செய்யப்பட வேண்டும் என்று கூறினேன்.

அரசியல் சட்டத்தில் ஒரு நிலைமையைச் செய்து வைத்துக் கொண்டு, அதன்படி ஆட்சி மொழிக் கொள்கையைச் செயல்படுத்த துடிப்புக் காட்டப்படுகிறது. இந்தி ஆட்சி மொழி ஆவதற்குத் தரப்படும் ஒரே காரணம் அரசியல் சட்டத்தில் அவ்வாறு இருக்கிறது என்பதுதான்.

## தேவைக்குத் திருத்தலாம்!

ஆட்சி மொழியாக இந்தி வருவதற்கு அதற்குள்ள தகுதி, அவசியம், காரணம் என்ன என்று நான் கேட்கிறேன். அரசியல் சட்டம் என்றால், தேவைப்பட்டால் அது திருத்தப்பட வேண்டியது தானே என்று கூறுவேன். அரசியல் சட்டம் அசைக்க முடியாத ஒன்று அல்ல.

அரசியல் நிர்ணய சபை கூடிய நேரத்தில் இருந்த சூழ்நிலையை நாம் கவனிக்க வேண்டும். பிரிட்டிஷாரின் கொடி இறக்கப்பட்டு, இந்தியாவின் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்ட சமயம், விடுதலைக்காக அரும் பாடுபட்டவர்கள், தமது போராட்டத்தில் வெற்றி கண்டு குதூகலமாக இருந்த நேரம். அந்தச் சூழ்நிலையில் நெடுந்தொலைவு பார்த்து, திட்டங்களைப் போடும் மனப்பாங்கு இருந்திருக்காது. அது ஒரு குறைபாடல்ல. சூழ்நிலையின் தன்மை அப்படிப்பட்டது. 15 ஆண்டுகள் கழித்துப் பார்க்கும் பொழுது முதலில் இருந்த சூழ்நிலை மாறி, அப்பொழுதிருந்த மதிப்பீடுகளும் நம்பிக்கைகளும் மாறி இந்தி ஆட்சி மொழியாவது என்ற திட்டம் மீண்டும் ஆலோசிக்கப்பட வேண்டிய கட்டம் உருவாகியுள்ளது.

## காட்டும் காரணமென்ன ?

இந்தி ஆட்சி மொழியாக வேண்டும் என்பதற்கு மிகத் தீவிர இந்திப் பிரியர்களே என்ன காரணம் காட்டுகிறார்கள்? இந்தியாவில் 100க்கு 40 பேர் இந்தி பேசுவதால் இந்திதான் இந்தியா

வின் ஆட்சி மொழி என்று அவர்கள் கூறுகிறார்கள். இந்தியாவில் 40 சதவீதம் கூட அல்ல, 20 சதவீத மக்களாவது இந்தி பேசுபவர்களாக இருந்து அந்த 20 சதவீத மக்கள் இந்தியா பூராவும் பரவலாக இருந்தால் இந்தியைத் தொடர்பு மொழியாகவோ, ஆட்சி மொழியாகவோ கொண்டு வருவதில் ஓரளவு அர்த்தமிருக்க முடியும். ஆனால் இவர்கள் கூறுகிற 40 சதவீதம் என்பது-விவாதத்துக்கு அதை அப்படி ஏற்றுக் கொண்டாலும்—உ. பி., மத்தியப் பிரதேசம், பீகார், ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்களுக்குள் அடங்கிவிடுகிறது. இந்தி ஒரு பகுதியில் உள்ள மக்களிடையே பேசப்படுகிறதேயன்றி, இந்தியா முழுவதும் பரவலாகப் பேசப்படவில்லை. ஆக ஒரு பகுதியில் பெரும்பான்மையினரால் பேசப்படுவது, நாடு முழுவதற்கும் ஆட்சி மொழியாகும் தகுதியைப் பெற்றுவிட்டது.

## தெளிவில்லாத திட்டம்!

ஆங்கிலத்தை எதிர்க்கிறீர்களே தவிர, ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதை அறவே அகற்றிவிட்டீர்களா என்று பார்த்தால், அப்படியும் கிடையாது. மூன்று மொழித் திட்டத்தின்கீழ் ஆங்கில மொழிப் பயிற்சியைக் கட்டாயமாக வைத்துக் கொண்டுள்ளீர்கள்! ஆக உங்கள் திட்டம் எதுவென்று புரியவில்லை. ஆங்கிலமொழி வேண்டாமென்கிறீர்களா? ஆங்கிலமொழியும் கட்டாயமாக இருக்கவேண்டியது தான் என்கிறீர்களா? திரு வாஜ்பாயின் போக்கு எனக்குப் புரிகிறது, எனது வாதம் அவருக்குப் புரிகிறது' ஆனால் உங்கள் போக்கு எங்கள் இருவருக்குமே புரியவில்லை. அதனால்தான் கூறுகிறேன், ஆட்சிமொழி பிரச்சினை முழுவதையும் மீண்டும் புனராலோசனை செய்யவேண்டும் என்று!

அக்பர் அலிகான் (காங் ஆந்திரா): நீங்களும் வாஜபாயும் பேசி ஒரு சமாதானத்துக்கு வாருங்கள். அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம்.

அண்ணா; நானும் வாஜ்பாயும் ஏற்றுக்கொள்ளும் முடிவை இந்த அரசாங்கம் அப்படியே நிறைவேற்றுவதாக உறுதி தந்தால், நாங்கள் கலந்து பேசத் தயார். ஆனால் எங்களைப்பற்றி உங்கள் போக்கு என்ன என்பது எங்கள் இருவருக்கும் நன்கு தெரியும். ஆக உங்கள் வலையில் சிக்க நான் மறுக்கிறேன்.

## மும்மொழித் திட்டம்

ஆங்கில மொழி பற்றிய அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. மூன்று மொழித் திட்டத்தைப் பார்க்கும்பொழுது, ஆங்கிலத்தைக் கைவிடத் தயாராக அரசாங்கம் இல்லை என்பது தெரிகிறது. ஆங்கிலமொழியைத் தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறுவதற்கு அவர்கள் தெரிவிக்கும் கண்டனத்தைப் பார்த்தால், ஆங்கிலத்தை

அவர்கள் எதிர்க்கிறார்களென்று நினைக்க வேண்டியிருக்கிறது.

உங்களிடம் எதுவும் திட்ட வட்டமாக இல்லை. வெளிநாட்டுக் கொள்கை, பொருளாதாரக்கொள்கை, ஆட்சிமொழிக் கொள்கை, எல்லாம் குளறுபடியாக இருக்கிறது. இரண்டும்—பொதுத்துறை தனித்துறை—கலந்த பொருளாதாரம், கூட்டுசேரா வெளிநாட்டுக்கொள்கை, திட்டவட்டமில்லாத மொழிக் கொள்கை-இப்படி எல்லாவற்றிலும் கலந்து பல திறப்பட்ட விதமான கொள்கைகள் தரப்படுகின்றன. கலந்து இருப்பது மட்டுமல்ல, கலப்படமே நடைபெறுகிறது. உணவில் இருப்பதைவிட, அரசியலில் நடைபெறும் கலப்படம் பெரிய குற்றமாகும்.

## ஒருநாள் விஷயமல்ல !

ஆட்சி மொழிப் பிரச்சினையை ஒரே ஒரு நாளில் ஒரு மாநாடு கூட்டிப் பேசித்தீர்த்துவிட முடியாது. ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்கும் நிலைமையைத் தொடர்ந்து வைத்துக்கொண்டு, நாம் ஆட்சி மொழிப் பிரச்சினை பற்றி அடிக்கடி கூடிப்பேசி, ஒரு திருப்திகரமான முடிவுகாண முயலவேண்டும். இதை முதன் மந்திரிகள் மட்டும் ஒருநாள் கூட்டத்தில் முடிவு கட்டிவிட முடியாது.

நண்பர் எ.டி. மணி அவர்களைப் பார்த்து 20 ஆண்டுகள் ஏன் கேட்கிறீர்கள் என்று வினவினேன். நம்மால் இப்பொழுது முடிவு செய்ய முடியவில்லை. எனவே இருபது ஆண்டுகள் ஒத்திப் போடலாம் என்று அவர் கூறினார். இப்பொழுது நம்மால் ஒரு பிரச்சினையை முடிவு செய்ய முடிய வில்லை என்றால், அதை ஒத்திப்போடுவதில் காலவரை வகுப்பதில் என்ன பொருள் இருக்கிறது?

## நாம் யார்?

கால்க் கெடுவைக்க நாம் யார்? ஒன்று இப்பொழுது முடிவு செய்யவேண்டும். அல்லது எதிர் காலத்தின் முடிவுக்கு எத்தகைய கால அட்டவணையுமின்றி விட்டு விடவேண்டும், என்றேன்.

திருமணி அவர்கள் 20 ஆண்டு என்கிறார்—அவர் 20 ஆண்டுகளுக்கு மேலும் நீடுழிகாலம் வாழவேண்டும்—ஆனால் 20 ஆண்டுகள் என்று கூறும் பொழுது, அப்பொழுது அது நம்மைப் பாதிக்காது என்ற நினைப்பில் நாம் பிரச்சினையைக் கவனிக்கக் கூடாது.

## ரயில்வே அட்டவணையா?

மற்றும் சிலர் பத்து ஆண்டுகள், இருபது ஆண்டுகள், இருபத்தைந்து ஆண்டுகள் என்று காலவரையறை தருகிறார்கள். கால வரையறை தர, இது என்ன இரயில்வே கால அட்டவணையா? இரயில்வேயில்கூட, குறித்த நேரத்தில் இரயில்கள் வருவதில்லை, கிளம்புவதில்லை! ஆக மொழிப் பிரச்சினையில் கால

அட்டவணை போட்டுக்கொண்டு உட்காருவது சரியல்ல! பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு காணும்வரை இப்பொழுதுள்ளபடி ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கட்டும்.

## மொழித்தகுதி!

மொழிப்பிரச்சினையில் தி. மு. கழகத்தின் கொள்கை என்னவென்று முதலில் திரு. அக்பர் அலிகான் இடையிட்டுக் கேட்டார். அதுபற்றி இப்பொழுது விளக்கம் தர விரும்புகிறேன். இந்தியாவிலுள்ள முக்கிய மொழிகளாக உள்ள பதினைன்கும் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆட்சி மொழிகளாகும் தகுதி தரப்படவேண்டும்.

அக்பர் அலிகான்.—அவ்வளவு மொழிகளை வைத்துக் கொள்வது முடியாத காரியம்.

அண்ணா:—"முடியாத காரியம்' என்று திரு. அக்பர் அலிகான் கூறுகிறார். சில காலத்துக்குமுன் இந்தியாவை ஒன்றாக வைத்துக் கொள்வது முடியாத காரியம் என்று நானும் நினைத்தேன்.

பி. கே. பி. சின்கா (காங்.உ.பி.) அரசியல் சட்டத்தில் எட்டாவது பட்டியலில் தரப்பட்ட மொழிகளுள் 'தேசிய மொழிகள்' என்று கூறப்படவில்லை.

பூபேஷ் குப்தா (கம், மே-வங்): இந்தியும் அந்தப் பட்டியலில் உள்ள ஒரு மொழிதான்.

அண்ணா: நண்பர் சொல்லுவது உண்மையாக இருப்பின் அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்து, அவற்றை தேசியமொழிகளாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என நான் வலியுறுத்துவேன்.

வாஜ்பாய் (சனசங்—உ.பி.) அந்த மொழிகளெல்லாம் தேசிய மொழிகள்தான். அதில் சந்தேகமில்லை.

ஏ. டி. மணி (சுயே—ம. பி.) சட்டத்தில் எப்படியிருந்தாலும், அவை தேசிய மொழிகள்தான்!

## கால வளர்ச்சியில்

அண்ணா: ஆக, பதினைன்கு மொழிகளும் ஆட்சிமொழிகளாகும்வரை, ஆங்கிலம் தொடர்ந்து இருக்கட்டும். தொடர்பு மொழியாக எது இருக்கவேண்டுமென்பதில், இயல்பான கால வளர்ச்சிக்கு அதை விட்டுவிடலாம்.

இப்பொழுதுகூட, அரசாங்க முயற்சியைவிட தனிப்பட்ட அமைப்பின் முயற்சியே பலனளித்திருக்கிறது. அந்தப் பிரச்சினையை மக்களிடம் விட்டு விடுங்கள். காலப்போக்கில் அவர்கள் இயல்பாகத் தேர்ந்தெடுத்து வழங்கிக்கொள்கிற மொழி தொடர்பு மொழியாக பிறகு வரட்டும். அவ்வாறு அரசாங்கக் கட்டாயமில்லாமல், மக்களே இந்திதான் தொடர்பு மொழியாகவேண்டும் என்று நினைப்பார்களானால் அது நடைமுறையில் தொடர்பு மொழியாகி பிறகு சட்ட சம்மதம் பெற்றுக் கொள்ளட்டும்.

பி. எல். குரியல் (சோஷ—உ. பி,): முதலில் அரசாங்கம் அங்கீகாரம் தரப்பட்டால்தான், நடைமுறையில் அது வரும்.

அண்ணா:கனம் உறுப்பினர்க்கு. அவர் மொழி மீதே அவருக்கு நம்பிக்கை இல்லை.

நண்பர் வாஜ்பாயி அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக் கொள்வேன். அவர் தமிழ் மொழியைப் படித்து, அமிழ்தினும் இனிதான தமிழ் இலக்கியங்களை ஒரு முறை சுவைத்துவிட்டால், தமிழ் தான் தொடர்பு மொழியாக இருக்கக் கூடியது என்று அவரே தேர்ந்தெடுத்து விடுவார். ஆக எது தொடர்பு மொழி என்று தேர்ந்தெடுத்து வழங்கும் வரை, இருக்கும் நிலையை மாற்றாமல் ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக் கொள்வது நலம்.

## நலம், தரும் நிலை!

பதினான்கு தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாகும் வரை மொழிப்பிரச்சினையில் ஒரு திருப்திகரமான—நிரந்தரமான முடிவு ஏற்படப்போவதில்லை. பன்மொழிகளை ஆட்சி மொழிகளாக்குவது, இந்தியாவை ஒன்றுபட்ட நாடாக வைத்துக் கொள்ள நாம் தரும் விலை என்று கொள்ளவேண்டும்.

இந்தியா என்பது இருக்கத் தான் வேண்டும்—ஒற்றுமையான இந்தியா வேண்டும் என்றால் ஒரு வட்டாரம் மற்றொரு வட்டாரத்தை அடக்குகிறது என்ற எவரும் கருதும் வகையில் எத்தகைய ஏற்பாட்டையும் நீங்கள் செய்யக் கூடாது. இந்தியா என்றால் எல்லோரும் பொதுவாக நம்பிக்கையுடனும் பெருமையுடனும் அதை இதயபூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால், ஆட்சி மொழிப் பிரச்சினையில் பல மொழித் திட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டாகவேண்டும்.

## முடியாத காரியமா?

பதினான்கு மொழிகளை ஆட்சி மொழிகளாக்குவது என்பது முடியாதகாரியம் என்று அக்பர் அலிகான் கூறினார். அதில் சிக்கல் இருக்கிறது, நடைமுறையில் சிரமங்கள் ஏற்படலாம். அதையும் நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அது முடியாதகாரியம் என்று கூறிவிடக் கூடாது.

## புரியாத புதிர்!

சுவிட்சர்லாந்தில் நான்கு மொழிகள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன என்றால், அதைவிடப் பல மடங்கு பெரிய நாடாக இருக்கிற இந்தியா 14 மொழிகளை ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது என்று எனக்குப் புரியவில்லை. சுவிட்சர்லாந்துக்காரர்கள் பல மொழி பிரச்சினையை திறம்பட சமாளித்தார்கள் என்றால் அவ்வளவு கூட திறமையும் விவேகமும் இங்கு உள்ளவர்களுக்கு இல்லை என்று பொருளா?

## உதவிக்குத் தயார்!

எத்தகைய தடைகளையும் மீறிச் செயலாற்ற வல்ல திறமைசாலிகள் இங்கு இருக்கிறார்கள்.

உங்களுடைய பணியில் எங்களுடைய உதவி தேவை என்று உங்களுக்குப் பட்டால், நாங்கள் எங்களால் இயன்ற அளவு உதவத் தயாராகக் காத்திருக்கிறோம். எங்களுடைய உதவி உங்களுக்குத் தேவைப்படாது என்பது எனக்குத் தெரியும். உதவி தேவை என்று நீங்கள் பாவனை செய்தால் கூட, நாங்கள் உதவி புரியத் தயாராக இருக்கிறோம்.

பல மொழிகள் ஆட்சிமொழிகளாக ஆகவேண்டும் என்பது ஒரு குருட்டுத் தனமான கோட்பாடு அல்ல. பல மொழிகளைக் கொண்ட ஒரு நாட்டில், அது தவிர எல்லோரையும் திருப்திப் படுத்தவல்ல திட்டம் வேறெதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

## தேசிய மொழிகள்

தேசிய மொழிகளே அனைத்தும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்ற தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றி வைத்துள்ளது என்பதற்காக அதை ஒதுக்கி வைக்காதீர்கள். முன்பு சென்னை கவர்னராக இருந்த பிரகாசா அவர்கள், தகுந்த காரணங்களைக் காட்டி, பலமொழித் திட்டத்தை ஆதரித்துள்ளார். மொழி அடிப்படையில் மாநிலங்களை அமைத்த பிறகு, ஆட்சி மொழிகளாக எல்லா மொழிகளையும் ஏற்றுக்கொள்வதினின்று தப்ப முடியாது என்று அவர் கூறுகிறார்.

தேசிய மொழிகளனைத்தும் ஆட்சிமொழிகளாகும் வாய்ப்பையும் தகுதியையும் நாம் தரவேண்டும். முன்புநான் குறிப்பிட்டபடி, தமிழ் ஆட்சி மொழியாகக் கூடிய தகுதியைப் பெருமளவு பெற்றுள்ளது. நண்பர் பூபேஷ் குப்தா அவர்கள் வங்காள மொழி அந்தத்தகுதியையுடைந்துள்ளதாகக்கூறுவார். தேசிய மொழிகள் ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்படும் வரை ஆங்கிலம் நீடித்து இருக்கட்டும்.

## ஆங்கில மோகமல்ல !

1970ல் தேசிய மொழிகள் எல்லாம் ஆட்சி மொழிகளாகின்றன என்றால், ஆங்கிலத்தை அகற்றிவிடலாம். 1980-ல் அந்த நிலை என்றால், அப்பொழுது ஆங்கிலத்தை நீக்கிவிடலாம். ஆக ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடித்து இருக்கட்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறுவது, ஆங்கில மோகத்தாலல்ல என்பதை நீங்கள் பற்றிகொள்ள வேண்டும். எங்கள் தாய்மொழி தெரிந்து நாங்கள் பெருமைப்படுகிறோம். தமிழ் மொழி ஒப்புயர்வற்றது.

சென்குப்தா (மே-வங்.) வங்காள மொழி ?

*அண்ணா:* வங்காள மொழியுடன் சேர்ந்து அதற்கு ஈடானது வேறெந்த மொழியும் கிடையாது.

## துரதிர்ஷ்டவசம்

நமது உள்துறை அமைச்சர் நந்தா அவர்கள் இங்குப் பேசும் பொழுது, "நான் இந்திவாலா

அல்ல; என் தாய்மொழி பஞ்சாபி; என் வளர்ப்பு மொழி குசராத்தி. இப்பொழுது நான் இந்தியை ஆதரிக்கிறேன் !" என்று குறிப்பிட்டார். துரதிர்ஷ்டவசமாக நமக்கு அத்தகைய அனுபவம் கிடையாது. தாய்மொழி ஒன்று, வளர்ப்பு மொழி மற்றொன்று, ஆதரவு காட்டும் மொழி வேறொன்று—இவை நல்ல அனுபவம்தான்.

ஓரிடத்தில் நிலையாக இல்லாமல் கட்டவிழ்ந்து அலைந்து வந்திருப்பதாக உள்துறை அமைச்சரே கூறினர். ஆனல் அதிர்ஷ்டவசமாகவோ, துரதிர்ஷ்டவசமாகவோ எங்களுக்கு நிலையாக ஒரு இடம் இருந்து விட்டது; அலைந்து திரியவேண்டிய அவசியம் இல்லாமற் போய்விட்டது.

## உயர்தனிச் செம்மொழி !

உயர்தனிச் செம்மொழியான தமிழ் மொழி என்னுடைய தாய்மொழி என்ற பெருமிதம் எனக்கிருக்கிறது. நீண்ட வரலாற்றையும் புகழ்மிக்க பொற்காலங்களையும் உடைய மொழி—கவிஞர்கள் யாத்த மொழி — கவிதைகள் கொஞ்சும் மொழி-காலத்தாலும்—கவிஞுறு வளத்தாலும் கடலெனப் பரந்து கிடக்கும் மொழி —எங்கள் உயிருடன் வாழ்வுடன் கலந்த மொழி—அந்தத் தமிழ் மொழி மற்றெதற்கும் தாழாத வகையில் மத்திய ஆட்சிமொழி என்ற தகுதி தரப்படும் வரை, நான் அமைதி பெறமாட்டேன். திருப்தி அடையமாட்டேன்.

## அது அவர்கள் உரிமை !

நான் தமிழுக்காக வாதாடுகிறேன். அதை வைத்து இந்திக்காக வாதாடுபவர்களின் தாய்மொழிப்பற்றை நான் மறுக்கவில்லை. அவர்கள் இந்திக்காகப் பாடுபடட்டும்.

## பஞ்சம் நிரம்பிய மொழி !

நான் இங்கு இந்தியில் பேசப்பட்டவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தேன். வாஜபாயின் பேச்சிலேதான் மிகக் குறைந்த அளவுள்ள ஆங்கில வார்த்தைகள் கலந்திருந்தன. மற்றவர்களின் பேச்சுக்களில், ஏதோ தயாதாட்சணியத்துக்காக இந்தியைதெளித்திருக்கிறார்கள். "ஆல் இந்தியா ரோடியோமே பிலிம் சங்கீத் அச்சா ஹை" என்ற இம்முறையில் பேசினார்கள். கேட்டேன். இது இந்தி அல்ல. நான் இந்திக்காக வாதாடுபவனுக இருந்தால் இவ்வளவு பஞ்சம் நிரம்பிய மொழியாக்கமாட்டேன்.

இந்தி வளர்ச்சியில் உற்சாகம் காட்டுங்கள்; அது பரிதாபமானதாக இருக்கவேண்டாம்! நமது அமைச்சர் நந்தா வேண்டுமானல் எதிலும் உற்சாகம் காட்டாமல் இருக்க முடியும். அவர் "எஸ்பிராண்டோ" மொழியின் பக்கம் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனல் எங்களுக்கென ஒரு மொழி இருக்கிறது, அந்த மொழிக்கு ஆட்சிமொழிப் பட்டியலில் இடம் தந்தாகவேண்டும்.

என்று கேட்கிறோம். அவ்வாறு இடம் தரும்வரை, ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருந்து வரட்டும் என்று கூறுகிறோம்.

ஆங்கிலம் தொடர்ந்து நீடிப்பதால், தெரிந்தோ தெரியாமலோ இந்தி வருவதால் இழைக்கப்படும் ஏற்றத்தாழ்வு இருக்காது; அரசாங்கத்தில் குழப்பம் வராது; ஒரு வட்டாரம் மற்ற வட்டாரங்களை அடக்கியாளுகிறது என்ற அச்சம் நிலவாது.

ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டதுபோல, இந்தியையும் ஏன் கற்றுக்கொள்ளக் கூடாது என்று சிலர் எங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள். ஒரு கனம் நினைத்துப் பார்த்தால் என்னுடைய மகன்கள்—இன்னும் சொல்லப்போனால் என்னுடைய பேரப் பிள்ளைகள் இந்தி எழுத்துக்களைத் தடுமாறி உச்சரிக்க ஆரம்பித்தால், அதே போல் திரு. வாஜ்பாயின் பேரப் பிள்ளைகள்........

ஏ. டி. மணி: வாஜ்பாயிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.

அண்ணா: இப்போது புரிகிறது, ஏன் வாஜ்பாய் இப்படிப் பேசுகிறார் என்று. அவருக்குச் சொல்வேன். இந்தியை ஆட்சி மொழியாக்குவது பிறகு இருக்கட்டும். முதலில் இன்னொரு மொழி பேசும் பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்ளும்! (சிரிப்பு)

## பரம்பரைச் சொத்தும் பள்ளிக்கூட அறிவும்!

அண்ணா: இந்தி பேசுகிற பகுதியில் பிறந்து வளரும் குழந்தைகள், தாயின் மடியிலேயே இந்திப்பாடல்களைக் கேட்கின்றன. வயலிலும் வரப்பிலும், வீட்டிலும் தோட்டத்திலும், அங்காடி வீதியிலும் ஆற்றோரத்திலும், வாழ்வின் எல்லாப் பக்கத்திலும் நாள் முழுவதும் இந்தி மொழிப் பயிற்சி அவர்களுக்குக் கிடைக்கிறது. புத்தகங்களைப் புரட்டுவதால் அவர்கள் இந்தி கற்றுக்கொள்ளவில்லை, இந்தி பேசும் இடத்தில் பிறந்ததாலேயே அவர்கள் இந்தியைக் கற்றுக் கொண்டு விடுகிறார்கள். உங்களுக்குப் பரம்பரைச் சொத்தாக வருவது, எங்களுக்கு பள்ளிக்கூடத்து அறிவாகக் கிடைக்க வேண்டும். ஒத்தமுறையில் இதில் எப்படிப் போட்டியிட முடியும்.

## ரோமாபுரிப் பிரபுக்களா?

ரோமப் பேரரசு காலத்தில் ரோம் நாட்டுப் பிரபுக்கள் மேலேயிருந்து வேடிக்கை பார்க்க, கீழே மைதானத்தில் கோரப்பசியுடன் பாய்ந்துவரும் சிங்கங்களுடன் அடிமை வீரர்கள் வெறும் கைகளுடன் சண்டை போடுவார்களாம். அப்படிப்பட்ட சண்டைகளிலிருந்து ஒரு சில அடிமைகள் உயிருடன் திரும்பியிருக்கக் கூடும். நமது நண்பர் சத்திய நாராயணா இந்தி பேசவில்லையா, அதைப் போல! ஆனால் மற்றவர்கள் சிங்கங்களிடம் சிக்கி, சின்னா

பின்னமாகக் கிழித்து எறியப் பட்டிருப்பார்கள்! எங்களுக்கும் அத்தகைய கதிவர வேண்டுமென ஏன் நினைக்கிறீர்கள்?

நாங்கள் என்ன செய்துவிட்டோம், இப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாக? உங்களுடைய மொழியை நாங்கள் படித்து உங்களுடன் நாங்கள் எப்படிப் போட்டி போடமுடியும்? அது பெரிய அநீதி, சித்திரவதை!

## அநீதி புரியவில்லையா?

ஒரு மொழியை—ஒரு வட்டார மொழியை மற்றெல்லா மொழிகளுக்கெல்லாம் மேலாக ஆட்சி மொழியாக ஆக்க நினைப்பதில் உள்ள அநீதி உங்களுக்குப் புரியவில்லையா? எங்களுக்கு எவ்வளவு மனவேதனையை அது தருகிறது என்பதை நீங்கள் உணரவில்லையா? இந்திக்காக எவ்வளவு தான் பிடிவாதமாக நீங்கள் வாதாடினாலும், ஆர அமர நீங்கள் யோசித்தால், நான் கூறுவது உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்.

## மறுக்கும் மனோபாவம்!

பத்திரிகைகளைப் படிக்கும் பொழுது, இந்திப் பிரியர்கள் கோபதாபங்களுக்கு ஆட்பட்டுள்ளார்கள் என்பது தெரிகிறது; எங்களுடைய போராட்டத்தின் அடிப்படையை-தத்துவத்தை கவனித்துப் பார்க்க அவர்கள் மறுக்கிறார்கள். இந்தியை எதிர்ப்பதற்காக அண்ணாதுரையை மட்டுமல்ல, காமராசரையும் பிடித்துச் சிறையில் போடவேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். இன்னும் சிலர், திரு. சுப்பிரமணியமும், திரு. அளகேசனும் செய்த இராஜிநாமா குறித்துக் கேலியாகப் பேசுகிறார்களாம். கலவரம் மிகுந்த நேரத்தில், இவர்கள் செய்த இராஜிநாமா எந்த அளவு மக்களுக்குப் புதிய நம்பிக்கையைத் தர உதவியது என்பது இங்குள்ளவர்களுக்குத் தெரியாது. யாராவது தமிழ் நாட்டுக் காங்கிரசின் பெயரைக் காப்பாற்றினார்கள் என்றால்,—முழு அளவு அல்ல, ஓரளவு,—அது சுப்பிரமணியமும் அளகேசனும் தான்! அவர்களிடம் பற்றோ பாசமோ எனக்குக் கிடையாது. நானும் சுப்பிரமணியமும் வாதிட்டிருக்கிறோம். அவரை எதிர்த்து நான் சென்னை சட்டசபையில் பல தடவைகள் பேசியிருக்கிறேன். என்னை மடக்க அவரும் தவறான வழிகளைக் கையாண்டிருக்கிறார். ஆனால், உரிய நேரத்தில் அவர் செய்த ஒரு செயல், தமிழ்நாட்டில் மூண்ட கொந்தளிப்பை ஓரளவு அடக்க உதவியது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

## அசாம் 'அமைதி அணி'போல் பக்தவத்சலம் ஏன் ஏற்படுத்தவில்லை?

அசாம் மாநிலத்தில் மொழிச் சண்டைகள் நடைபெற்றபொழுது, ஊர் ஊராக அந்தச் சச்சரவு பரவியது; அமைதி காக்கும் அணி ஒன்று புறப்பட்டு ஊர் ஊராகச் சென்று அமைதி காக்கப் பாடுபட்டது. அதுபோல்,

அமைதி காக்கும்பணியில் மாநில முதலமைச்சர் இறங்கி, எங்களையும் சேர்த்து, ஏன் முயற்சி செய்திருக்கக் கூடாது?

## கற்பாறையானார்!

ஆனால், திரு பக்தவத்சலம் அவர்களைப் பற்றி, "அவர் கற்பாறை போல் நின்றார்" என்று உள்துறை அமைச்சர் நந்தா புகழ் பாடுகிறார். ஆம்; பக்தவத்சலம் ஒரு கற்பாறை போலத்தான் நின்றார். ஆடாமல் அசையாமல், உணர்ச்சியற்று, இரக்கமற்று அவர் கற்பாறை போலத்தான் நின்றார்.

துப்பாக்கிகள் வெடித்தன, குண்டுகள் பாய்ந்தன. பிணங்கள் விழுந்தன, அப்பொழுதும் அவர் கற்பாறை போல நின்றார்! மகனை இழந்த மாதாவின் அழுகுரல், கணவனை இழந்த மங்கையின் கதறல் எதுவும் அவரை அசைக்கவில்லை! அவர் கற்பாறைபோல நின்றார்! இதயத்தைக் கல்லாக்கி அவர் நின்றார். அப்படிப்பட்ட கற்பாறை போன்ற மனிதர்கள் தாம் உங்களுக்குத் தேவையா? தமிழகத்தில் அதைவிடச் சிறந்த பண்புள்ள மனிதர்கள் இருக்கிறார்கள்!

## பெரிய பக்தவத்சலம்!

கற்பாறைபோல அவர் நின்றார் என்று நீர் புகழ்கிறீரே! உம்முடைய இதயம் சற்று கனிவானது என இதுவரை நம்பியிருந்தேன்! சாதுக்கள் சந்நியாசிகள் கூட்டத்தில் இருக்கும் உமக்கு சிறிதாவது சாந்த குணம் இருக்கும் என்று எதிர்பார்த்தேன்! 50, 60 பேர்களைப் பிணமாக்கி, ஆறு வயதுப் பையன் ஏழு வயதுச் சிறுமி, எண்பது வயது கிழவர் என்றுகூட கண் மண் பாராமல் சுட்டு வீழ்த்தி, வீதிகளை இரத்தமாக்கி, வீடுகளை சோகமாக்கி, ஆட்சி நடத்தும் ஒருவருக்கு "கற்பாறை போல நின்றார்" என்று புகழ் மாலை சூடுகிறீர்களே! உம்மைப் பற்றி நான் என்ன சொல்ல முடியும்...நீர் ஒரு "பெரிய பக்தவத்சலம்" என்பதைத் தவிர!

## புனராலோசனை!

சட்டமும் ஒழுங்கும் காப்பற்றப்பட்டு விட்டன என்று தவறாக நினைத்துச் சமாதானமடையாதீர்கள்! சட்டமும் ஒழுங்கும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் எனக்குச் சிறிதளவு கூட கருத்து வேறுபாடு கிடையாது' பலாத்காரம் சிறிதளவு கூடக் கூடாது என்பதில் நான் கண்ணுங் கருத்துமாக இருப்பவன்!

நான் கடைசியாகக்கூறுகிறேன். மொழிப் பிரச்சினையை புனராலோசனை செய்து ஒரு திருப்திகரமான முடிவு காணும் வரை, ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக நீடிக்கட்டும். எல்லா தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாகும் வரை, ஆங்கிலம் இருக்கட்டும்; பிறகு இந்திய மொழி ஒன்று வளர்ந்து தகுதி பெற்று, தொடர்பு மொழியாகும் வாய்ப்பை காலப் போக்குக்கு விட்டு விடலாம். நன்றி!

# நேரு உறுதி மொழி

## பிரதமர் வாக்குறுதி

### ராஜ்ய சபையில் அண்ணாத்துரை பேச்சுக்குப் பதில்

"நான் நிச்சயமாக அந்த உறுதி மொழியைக் கடைப்பிடித்து நடப்பேன்" என்று பிரதமர் கூறினார். இறுதியில் ஆட்சி மொழியாகும் இந்தியில் வேலை செய்ய எல்லாப் பகுதி மக்களும் தயாராகும்வரையில் ஆங்கிலம் இருந்துவரும்.

பிராந்திய மொழிகளுக்கு எல்லா விதமான ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும். ராஜ்யங்களின் ஆட்சி மொழிகளாக ஆகும்படியாக அவற்றை வளம் பெறச் செய்யவேண்டும்.

இந்தியை யாரும் எதிர்க்காதது குறித்து அவர் மகிழ்ச்சிதெரிவித்தார். திரு. அண்ணாதுரை கூட இந்தி தொடர்பு மொழியாக இருப்பதை ஆட்சேபிக்கவில்லை என்று அவர் சொன்னார். ஆனால் தென்னிந்திய மக்கள் மனதில் உண்மையான அச்சம் நிலவுகிறது என்று அவர் ஒப்புக்கொண்டார்.

நான் அந்தப் பயத்தைப் போக்க விரும்புகிறேன். ஏனெனில் நாட்டை ஐக்கியப்படுத்துவதே ஒரு மொழியின் நோக்கம். எந்தக் கொள்கையை வகுப்பதிலும், நிறைவேற்றுவதிலும் ஐக்கியத்துக்கே முதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

ஸர்வீஸ்களுக்கு நியமனங்கள் செய்வதிலோ, இந்தி தெரியாத அதிகாரிகளுக்கு உத்தியோக உயர்வு அளிக்கும் விஷயத்திலோ தென்னாட்டவருக்கு பிரதிகூலமான நிலைமை இருக்காது என்று பிரதமர் உறுதியளித்தார். விரும்பாத மக்கள் மீது எந்த மொழியையும் திணிக்க விரும்பவே இல்லை.

சர்க்கார் மூலம் இந்தியை பரப்பக் கூடாது என்று திரு. அண்ணாதுரை கூறிய யோசனை பற்றி அவர் எதுவும் சொல்ல விரும்பவில்லை எனினும், இந்தியை போதிக்கவும், பரப்பவும் பெரிய அளவில் உத்தியோக பற்றற்ற ஸ்தாபனங்களில் முயற்சி இருக்கவேண்டும் என அவர் ஒப்புக்கொண்டார்.

மொழி என்பது நாட்டை இணைக்கும் ஒரு கருவியாக இருக்கவேண்டும். அது நாட்டை ஐக்கியப்படுத்த வேண்டுமே தவிர பிளவுபடுத்தக் கூடாது. இந்தியாவின் ஐக்கியத்துக்கே முதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

தென்னாட்டு மாணவர்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். ஸ்டிரைக்கை வாபஸ் செய்து விட்ட மாணவர்கள் எதிர்காலத்தில் நேரடி நடவடிக்கை எதிலும் இறங்க வேண்டாம் எனக் கேட்

டுக் கொண்டார். மாணவர்களின் வாதிகள், படிப்பில் குறுக்கிட வேண்டாம் என்று அவர் அரசியல் கட்சிகளையும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். இது சம்பந்தமாக திரு. அண்ணாதுரை வெளியிட்ட அறிக்கையை வரவேற்றார்.

பல்வேறு ராஜ்யங்களில் வழக்கிலுள்ள தாய் மொழிகளுக்குப் பதிலாக வேறொன்றைக் கொண்டுவரும் பிரச்சினையே இல்லை என்றார்.

## திரு. அண்ணாதுரைக்கு பதில்

திரு. அண்ணாதுரை பேசியதைக் குறிப்பிட்டு, "இந்தி திணிக்கப்படும் என்ற உண்மையான பயம் இருப்பதாக திரு. அண்ணாதுரை சொன்னார். காலஞ்சென்ற நேரு கொடுத்த வாக்குறுதி பிரகாரம் நடப்போமென்று திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். அவ்வாக்குறுதியின்படி நடப்பேன். அதை எப்படிச் செயல்படுத்துவதென்பதை நிச்சயமாக ஆலோசிப்பேன் (கரகோஷம்.)

அதோடு மற்றொன்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்தியாவுக்கொரு இணைப்பு மொழி வேண்டும். திரு. அண்ணாதுரை இந்தி வேண்டாமென்று சொல்லவில்லை என்பதைக் குறித்து மகிழ்கிறேன். அதை அரசாங்கத்தின் ஆணை கொண்டு பரப்பலாகாது என்று அவர் கருதுகிறார். அதைப்பற்றி நான் ஏதும் சொல்லவிரும்பவில்லை. ஆயினும் இதுகுறித்த விஷயத்தைப்பற்றி கூட சிறிது காலம் பொறுத்திருந்து அவர் தம் கருத்தைப்பற்றி புனராலோசனைசெய்யலாம் என்று நம்புகிறேன்" என்றார்.

சென்னை மக்கள் மனத்தில் இனி எவ்வித பீதிக்கும் இடமிருக்காது என்று நம்புவதாக பிரதமர் கூறினார்.

மும்மொழித்திட்டத்தைப் பற்றி பல்வேறு யோசனைகளை சர்க்கார் ஆராய்ந்து வருகிறது. பல்வேறு மொழிகளைப் பரீட்சை மொழியாக்கும் விஷயமும் பரிசீலனையில் இருக்கிறது. ஆய்வுக்குப் பின் திட்டமான முடிவு காணப்படுமென்றார்.

சென்னை மாணவர்கள் ஸ்டிரைக்கை வாபஸ் பெற்றதைப் பாராட்டினார். மாணவர்கள் கோரிக்கைகளை சென்னை சர்க்கார் அனுதாபத்துடன் கவனிக்குமென்றார். மாணவர்களிடம் குறுக்கிடவோ அல்லது அவர்களுக்கு ஊக்கம் தரவோ விரும்பவில்லை என்று திரு. அண்ணாதுரை கூறியதை வரவேற்றார். மாணவர்கள் நிம்மதியாகப் படிப்பில் கவனம் செலுத்தி கல்வி முடிந்த பின் தங்களுக்கு விருப்பமான கட்சியில் சேரலாம் என்றார்.

மொழி மக்களை ஒன்றுபடுத்துவதற்காகும் என்று கூறினார்.

"**தினமணி**" மார்ச், 9.

# 'இந்தி' — பொருந்தாத மொழி

## 'தினமணி'யின் தலையங்க விளக்கம்

இந்தி, 'யூனியன் ஆட்சி மொழியாவதை எதிர்ப்பவர்கள், 'ஆங்கிலமோகம் பிடித்தவர்களே" என்று சிலர், 'வாய் புளித்ததோ— மாங்காய் புளித்ததோ' என்று பேசுகிறார்கள்.

இந்தியை எதிர்த்துக் 'கலவரம்' செய்தவர்கள், 'சமூக விரோத சக்திகள்' (Anti-Social—'ஆண்டி சோஷல்') என்று சொல்லப்படுவது சகஜமாகிவிட்டது.

'பலாத்கார அக்கிரமங்கள்—காலித்தனத்தில் ஊறிப்போனவர்களும், பலாத்காரப் புரட்சிகளில் நம்பிக்கை கொண்டு பயிற்சி பெற்றவர்களும் செய்த வேலை'—என்ற அர்த்தத்தில்தான் இது உண்மையாகும்.

'இந்தியை எதிர்ப்பவர் சமூக விரோதிகள்' என்ற கருத்தில் சிலர் இந்தச் சொற்களை உபயோகிக்கிறார்கள்."

---

இந்தச் சொற்களைத் தவறாக உபயோகிப்பதில் என்ன விபரீதம் ஏற்படுகிறது என்பதற்கு, மக்கள் சபையில் ஒரு உதாரணம் கிடைத்திருக்கிறது.

"இந்திக் கலாட்டாக்கள், 'சமூக விரோதிகளின்' செயல்" என்று ஒருவர் கூறியபோது, மற்றொருவர் குறுக்கே விழுந்து, 'மந்திரி சுப்பிரமணியம்உட்பட........,' என்று கூறியதே இதற்கு உதாரணமாகும்.

அதாவது, இந்தியை எதிர்ப்பதே 'காலித்தனம்' என்று வட இந்தியாவில் சிலர் கருதுகிறார்கள். இவ்வாறு கருதுவது முற்றிலும் தவறாகும்.

இந்தி, யூனியன் ஆட்சிமொழியாவதை எதிர்ப்பவர்கள், 'ஆங்கில மோகினி பிடித்தவர்கள்' என்றும், 'காலிகள்' என்றும் நினைப்பதும் அறியாமை அல்லது சண்டித்தனமே ஆகும்.

பக்தவத்சலம், இவ்விஷயத்தில் உண்மையான நிலைமையை டில்லி சர்க்காருக்கு அறிவிப்பது அவசியம்.

இந்தி பற்றி ஒரு நிலையை வற்புறுத்தியதற்காக மந்திரி சுப்பிரமணியத்தை, 'சமூக விரோதி' ஜாபிதாவில் சேர்ப்பவர்களை, 'வெறியர்கள்' என்றே சொல்ல வேண்டும்.

இந்த வெறியர்களுக்கு உண்மை நிலையை எடுத்துரைப்பது சாஸ்திரியின் கடமை.

சாஸ்திரிக்கு உண்மை நிலையை

எடுத்துச் சொல்வது பக்தவத்சலத்தின் கடமை.

அத்துடன், இந்தி ஆட்சி மொழியாக வருவது பலவிதத்திலும் இந்திய சர்க்காரை சீரழிய வைக்கும் என்பதையும் இன்று சிறிது விளக்க விரும்புகிறோம்.

இந்தி பற்றி நாம் எழுதுவதெல்லாம், இந்தி பற்றிய தமிழ் மக்களின் உணர்ச்சியைக் காரண காரியங்களுடன் டில்லியில் எடுத்துச் சொல்வதில் பக்தவத்சலத்துக்கு உதவி செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையுடன் தான்.

மத்திய சர்க்காரின் 1965–66–ம் ஆண்டு பட்ஜெட் பற்றிய வெளியீடுகளில், டி. டி. கே. பிரசங்கத்தின் முதற்பகுதியும், நிதி மசோதாவின் விளக்க யாதாஸ்தும், 'இந்தியுடன் ஆங்கிலத்திலும்' வெளியிடப்பட்டிருக்கின்றன. ('ஆங்கிலத்துடன் இந்தியிலும்' என்று சொல்வது சட்டத்தின் வாசகத்துக்குப் பொருந்தாதாதலின், முதலில் இந்தியையும், பிற்பகுதியில் ஆங்கிலத்தையும் அச்சடித்திருக்கிறார்கள்).

டி. டி. கே. பிரசங்கத்தின் இரண்டாவது பகுதிக்கு இந்தி மொழி பெயர்ப்புத் தயாராவதில் தாமதம் ஏற்பட்டதாலோ, அல்லது வேறென்ன காரணத்தாலோ, அந்த இரண்டாவது பகுதியில் இந்தி மொழிபெயர்ப்பு இல்லை. நிதி மசோதாவுக்கும் மொழி பெயர்ப்பு இல்லை.

மொழி பெயர்ப்பிலுள்ள சிரமம், தாமதம் இரண்டுக்கும் இது ஒரு அத்தாட்சியாகும்.

அடுத்தபடியாக, மொழி பெயர்ப்பின் தன்மையைக் கவனிப்போம்.

பிரசங்க மொழி பெயர்ப்பு ஓரளவு புரியக்கூடிய இந்தியில் இருக்கிறது; ஆனால், நிதி மசோதாவை 'விளக்கும் யாதாஸ்தில்' என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதே விளங்கவில்லை. அகராதியைப் பார்த்தும் பொருள் புரிந்து கொள்ள முடியாது. (இந்தத் தலையங்கத்தை எழுதுபவருக்கு இந்தி சுமாராக மட்டுமல்ல—நன்றாகவே தெரியும்).

மொழிபெயர்த்தவர் என்ன அகராதி தயாரித்து வைத்துக் கொண்டிருக்கிறாரோ, அதே அகராதியை அவரிடமிருந்து வரவழைத்துப் பார்த்தால்தான், அந்த 'விளக்க யாதாஸ்தை' யாரும் புரிந்துகொள்ள முடியும்!

இந்தியைத்தான் ஆட்சிமொழியாக உபயோகிக்க வேண்டும் என்று பார்லிமெண்டில் கோஷித்து வற்புறுத்திவரும் இந்தி மாநில மெம்பர்களுக்கு சாஸ்திரி ஒரு சவால் விடுவிக்க வேண்டும்.

"விளக்க யாதாஸ்திலுள்ள இந்திக்கு ஓரளவாவது பொருள் சொல்லக் கூடியவர்கள், அவர்களில் 100–க்கு 15 பேராவது இருக்கிறார்களா?" என்று சாஸ்திரி கேட்கவேண்டும்.

ஆங்கிலப் பகுதியைப் பார்க்காமல் அந்த விளக்கத்துக்குப் பொருள் சொல்லக்கூடியவர்கள், 100-க்கு 10 பத்து பேர்கூட தேறமாட்டார்கள்! அதிலுள்ள வார்த்தைகளை சிருஷ்டித்தவர்கள் தாம் பொருள் சொல்ல முடியும்!

இப்படிப்பட்ட, மொழி பெயர்ப்புக்காக எவ்வளவு பணம் செலவாகிறது — எவ்வளவு சிப்பந்திகள் தேவையிருக்கிறது—என்பதெல்லாம் ஒருபுறமிருக்க, இந்தியின் இன்றைய நிலைக்கு இந்த மொழிபெயர்ப்பு முயற்சி ஒரு எடுத்துக்காட்டாகும்.

இதிலிருந்து புலனுவது என்ன?

ஆட்சிமொழியாக-சட்டமொழியாக உபயோகிப்பதற்கு இந்தி இலாயக்காகவில்லை.

சட்டத்தை விளக்குவதற்குக் கூட இலாயக்கான மொழியாக ஆகவில்லை.

பிரசங்கத்திற்கும் கதைக்கும் தான் இந்தி இலாயக்கேயொழிய, 'சட்டத்துக்கு' அது இலாயக்காகவில்லை. சட்டத்தின்படியே விவகாரம் நடப்பதாயின் சட்டத்துக்கு உதவாத மொழி நிர்வாக உத்தரவுகளுக்கும் பொருந்தாது.

'ஆட்சிமொழி' ஆக்குவதற்காக மக்களின் மொழியினது உயிரையும், உடலையும் சீர்குலைத்து ஒரு அர்த்தமற்ற 'புது மொழியை' சிருஷ்டித்திருக்கிறார்கள்.

இந்தப் பிரசுரங்களிலுள்ள மொழி யாருடைய மொழியுமல்ல! இது 'பொது மொழி' அல்ல! யாருக்கும் விளங்காத 'புது மொழி'!

இந்தப் பிரசுரங்களில் நாம் காணும் 'ஆட்சிமொழி' காந்திஜி விரும்பிய 'பொதுமொழி' அல்ல! இது இந்திப் பிரதேசத்து படித்த மொழியுமல்ல—பாமர மக்களின் மொழியுமல்ல!

(48-ம் பக்கம் பார்க்க)

## இறப்பதற்கு முன்

நான் இறப்பதைப் பற்றி நீங்கள் கவலைப்படக்கூடாது. நான் இவ்வுலகை நீத்தால் அதை எனக்கு விடுதலையென ஏற்று நீங்கள் மகிழவேண்டும். உங்களுக்குச் சொல்லவேண்டியது ஒன்றுண்டு. எனக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமையை உணர வேண்டும். எனக்காகக் கோயில்கள் கட்டவேண்டாம், குளங்கள் வெட்ட வேண்டாம், சாலைகள் அமைக்கவேண்டாம், சிலைகளும் வைக்கவேண்டாம். என் கொள்கைகளை மனத்தில் வைத்து அவைகளைப் பின்பற்றுங்கள். என் கொள்கைகள் மூலம்தான் நான் வாழ்கிறேன். அதை மாத்திரம் செய்வீர்களானல், என்பால் மகத்தான அன்பைச் செய்தவர்களாவீர்கள்.

—மகாத்மா காந்திஜி

புதிய முறை வெற்றி பெறுமானல் இருதயத்தையும் பொக்கிஷம்போல் பாதுகாக்கலாம்...

# இருதய உறுப்பு

[பெ. நா. அப்புஸ்வாமி]

ஒருவனுடைய இருதயம் நோயுற்றிருந்தால் அதை வெளியே எடுத்து விட்டு, அதற்குப் பதிலாக, செயற்கை இரத்தப் பம்புகளையும், இரத்தக் குழாய்களையும் வால்வுகளையும் அமைத்து, அவனை உயிரோடிருக்கச் செய்யலாம்; கிட்டதட்ட சாதாரண மனிதனைப் போலவே அவனை வாழச் செய்யலாம்என்ற நிலை இப்போது மெல்ல மெல்ல நடைமுறையில் வந்து கொண்டிருக்கிறது.

இந் நாளில் உலகில் எங்குமே இதய நோய்களும், இரத்தக் குழாய் நோய்களும் சாவுக்கும், ஊனமுற்ற குறைபாட்டு நிலைகளுக்கும் முக்கிய காரணங்களாயிருக்கின்றன. இந்த நோய்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் மிக்க முனைப்போடும் தீவிரமாகவும் நடந்து வருகின்றன. ஆகவே, யாவற்றையும் மிதமாகவே மதிப்பிடும் நிபுணர்களும்கூட, இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் திகைப்பூட்டும் அற்புத முன்னேற்றங்களைக் காணலாம் என்று வரும்பொருள் உரைக்கிறார்கள்.

நியூயார்க் இதய சங்கத்தின் சார்பிலே, நிபுணர்களின் சபை ஒன்று கூட்டப்பட்டது. மின்னஸோட்டா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற இரண வைத்தியர் டாக்டர் ஸி. வால்ட்டன் லீவ்ஹை என்பவர் முழு செயற்கை இதயத்தை உடலின் உள்ளே பொருத்திச் செயல் புரியக்கூடிய காலம் விரைவில் வந்து விடும் என்று கூறினர்.

இதய ரண வைத்தியத்தில் உலகத்தில் முன்னோடிகளாக விளங்கும் மருத்துவர்களில் ஒருவரான டாக்டர் மைக்கேல் டி. பேக்ரீ என்பவர், விரைவில் இதய வால்வுகளுக்குப் பதில் வேறு வால்வுகளைப் பொருத்துவதிலும். வெவ்வேறு உடல் உறுப்புக்களை ஓரிடத்திலிருந்து எடுத்து மற்றோர் இடத்தில் 'நடுவதிலும்' முன்னேற்றம் ஏற்படும் என்றும், இதயத்துக்கே மாற்று இதயம் வைக்கும் காலம் வந்து விடும் என்றும் தாம் எதிர்பார்ப்பதாகக் கூறினர்.

சிறிது காலத்துக்கு முன்னல் 42 வயது ஆகியிருந்த ஒருவரின் இடது வென்ட்ரிக்கிள் (இதயக் கீழ் அறை) நோயுற்றிருந்தபடியால், அதற்குப் பதிலாக, ஒரு செயற்கை பம்பைப் பொருத்தி, அவரை நான்கு நாள் வரையில் சாகாமல் காப்பாற்றினர்.

இதயத்துக்கும், அறைக் கீழ் உள்ள இரத்தக் குழாய்களுக்கும்

ஏற்பட்ட நோய் முற்றி, மிக்க கடுமையான நிலையோ, அல்லது செப்பனிட முடியாத நிலையோ ஏற்படுவதற்கு முன்னால், இதய நோயோ இதய இரத்தக் குழாய் நோயோ இருப்பதைக் கண்டு பிடித்து, அறிவிக்கக்கூடிய சிறந்த முறைகளை இப்போது விஞ்ஞானிகள் பயன்படுத்தி வருகிறார்கள்.

இதய நோயுற்றவர் தமது சாதாரண வேலைகளைப் பார்த்து வரும்பொழுது, அவரது இதயம் எப்படி இயங்கி வருகிறது என்பதை நெடுநேரம் தொடர்ந்து கவனித்து வரக்கூடியதும், வேண்டிய இடத்துக்கெல்லாம் எடுத்துச் செல்லக் கூடியதுமான, ஓர் இயந்திரத்தை அமெரிக்காவில், அண்மையில் இயற்றியிருக்கிறார்கள்.

கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில், ஒரு புதிய சோதனை முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள், அங்குள்ள விஞ்ஞானிகள். அதற்கு "இதயச் சுவர் இரத்த ஓட்டக் குறி எண் சோதனை" என்று பெயர். அதன் துணையால் தமனிகளில் அடைப்பு ஏற்படக்கூடிய நிலை இருக்கிறதா, இதய மாரடைப்பு உண்டாகுமா என்று தெரிந்து முன்கூட்டியே எச்சரிக்கை முறைகளைக் கையாள முடிகிறது.

## மின்விசை முறை

வேறு சில இதய நோய்களை விரைவாகவும், திருத்தமாகவும், தெரிந்துகொள்ளுவதற்கு அமெரிக்க நாட்டு முதிய படையினர் நிறுவனம் மற்றொரு திட்டத்தை வகுத்திருக்கிறது. நாடு முழுதும் உள்ள அந்த நிறுவனத்தின் மருத்துவச்சாலைகளில் இம் முறை கையாளப்படுகிறது. மின்சார—நெஞ்சுத் துடிப்பு மானி காட்டும் அளவுகளைக் குறியீடு முறையில் அமைத்து, சாதாரணத் தொலைபேசியின் வழியாக, வாஷிங்டனில் உள்ள கம்ப்யூட்டர் (கணக்கிடு கருவி) ஒன்றுக்குள் செலுத்துகிறார்கள். உடனே அக் கருவி வேலை செய்யத் தொடங்குகிறது. பல மணி நேரம், அறிவிற் சிறந்த மருத்துவர் ஒருவர் அந்த அளவுகளை உற்றுப் பார்த்து ஆராய்ந்து, தெரிந்துகொள்ளக்கூடிய முடிவுகளை விடத் திருத்தமான விடையை—நோய் நிலையின் தரத்தை—அக்கருவி 5 நொடிகளுக்குள் கணக்கிட்டு, அறிவித்துவிடுகிறது.

அமெரிக்க தேசிய ஆரோக்கிய நிலையம் என்னும் நிறுவனம் தொடங்கி வைத்து ஆதரித்து வந்த ஆராய்ச்சிகளின் மூலம், எட்டு வகையான செயற்கை—இதயங்கள் சோதிக்கப்பட்டு வருகின்றன. உடலின் உள்ளே வைத்து வேலை செய்யும்படியாக இவை அமைந்தவை. இவற்றைப் பல விலங்குகளின் உடலின் உள்ளே வைத்து, 21 மணி நேரம் வரை வேலை வாங்கிச் சோதித்து வருகிறார்கள்.

தொடங்கி இன்னும் அதிக நாள் ஆகவில்லை. இதற்குள்ளேயே ஊனமுற்ற இதயங்களுக்குத் துணைசெய்வதற்கு ஏற்ற வேறு

பல உத்திகள் இவற்றைவிட இன்னும் அதிக வளர்ச்சி பெற்றிருக்கின்றன. மின்சார பாட்டரிகள் துடிப்பு முறையைத் திட்டமிடுகின்றன; அதற்கு இணங்க, அமெரிக்காவில் 3,000 பேர்களும் மற்ற நாடுகளில் நூற்றுக்கணக்கானவர்களும் தங்களுடைய இதயங்களைத் துடிக்க வைத்துக்கொண்டு, கிட்டத்தட்ட சாதாரண வாழ்க்கைகளை நடத்தி வருகிறார்கள்.

பாஸ்ட்டன் நகரில் மாஸச்சூஸெட்ஸ்ஜெனரல் ஆஸ்பத்திரியில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் நெஞ்சுத் துடிப்பின் வேகத்தை ஒழுங்குபடுத்தும் ஓர் ரசாயனப் பொருளை உபயோகித்துப் பார்க்கிறார்கள். இதயத்தின் துடிப்பை ஒழுங்குபடுத்தும் பொருட்டு, அந்தப் பொருள் இதயத்தை ஊக்கவல்ல மருந்து ஒன்றை அவ்வப்போது, சிறிய அளவில் இதயத்தில் பாயுமாறு செய்து வருகிறது. வேறு சிலர் இன்னும் புதியமுறைகளில், தமனிகளின் துடிப்பைக்கொண்டு சிறு அளவில் மின்சாரத்தை இயற்றி, அந்த மின்சாரத்தால் இதயத்தை ஊக்கி வருகிறார்கள். கருவிக்கு வெளியிலிருந்து மின்சாரம் தேவையில்லை.

இதய ரண வைத்தியம் என்னும் கலை மிக மிக நன்றாக முன்னேறிவிட்டது. இப்பொழுது, புதுப் புது உத்திகளைத் தேட முயல்வதை விட, இதுவரை தெரிந்துள்ளவற்றைத் திடமாகப் பற்றி அவற்றை ஒழுங்கு படுத்துவதே நன்று என, அதிலேயே விஞ்ஞானிகள் அதிகக் கருத்தூன்றி வருகிறார்கள்.

சென்ற பத்து ஆண்டுகளாக, உடலின் பல பகுதிகளில் உள்ள முக்கியமான தமனிகளில் ஏற்பட்ட அடைப்பைச் செப்பனிடும் முறை 5000 நோயாளிகளுக்கு அளித்துப் பார்க்கப்பட்டது. அந்த முறையை இப்பொழுது இதயத்தில் உள்ள தமனிகளைச் செப்பனிட மெல்லக் கையாள முயலுகிறார்கள்.

## இதய நடுகை

சென்ற பதினைந்து ஆண்டுகளில், தமனியின் நோயுற்ற பகுதியை நீக்கிவிட்டு, அண்மையில் இறந்த ஒருவரின் தமனிப் பகுதியையோ அல்லது செயற்கைத் தமனியையோ பொருத்துவதற்குரிய ரண வைத்திய முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தத் தமனிகளுக்குப் பதிலாக, பலவகையான 'ப்ளாஸ்டிக்' பொருள்களால் செய்யப்பட்ட குழாய்களை உபயோகிக்கிறார்கள்.

குழந்தைகளுக்குப் பிறவி முதலே உள்ள ஊனங்களை நீக்கி, குணப்படுத்துவதும் இதய ரண வைத்தியர்கள் புதிய முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். வயது, மருத்துவர்களுக்கு ஒரு தடையல்ல. பிறந்து ஓர் ஆண்டுக்குள்ளேயே இறந்து போயிருக்கக் கூடிய ஆயிரக்கணக்கான குழந்தைகளும், அல்லது வாலிபப் பருவத்தில் கொடிய ஊனங்களால் ஒன்றுமே சீராகச் செய்ய முடியாதிருந்தவர்களும், இப்போது

சாதாரண மக்களைப்போல் வளர முடிகிறது. பிறவி ஊனங்களை நீக்கவும் திருத்தவும் தெரிந்து கொண்ட புதிய முறைகளே இதற்குக் காரணம்.

இதற்கிடையில், கலிஃபோர்னியாவில் ஸ்டான்டார்டு பல்கலைக் கழகத்தில் உள்ள ரண வைத்தியர் குழு ஒன்று இதய நோயைத் தீர்ப்பதற்கான மிகப் புதிய முறை ஒன்றை முதல் முதலாகத் தொடங்கியிருக்கிறது. இறந்தவன் ஒருவனுடைய இதயத்தை அப்படியே நோயாளியின்-நோயுற்ற காரணத்தால் சீராகச் செயல் புரியாதிருக்கும் இதயத்தை உடைய நோயாளியின் உடலில் உள்ளே பொருத்துவதற்கான, புதிய வழிகளை அது தேடிவருகிறது.

இவை வெற்றி பெற்றால், இப்போது கண்களையும், ரத்தத்தையும், எலும்பு, தோல் முதலிய உடலுறுப்புகள் பிறவற்றையும், இடைத்தபோது சிலரிடமிருந்து எடுத்து, பொக்கிஷம் போல் சேர்த்துவைப்பதைப் போலவே, பிறரின் உடல்களிலிருந்து பெயர்த்தெடுத்த இதயங்களையும், அத்தகைய பொக்கிஷங்களில் தேவைப்படும் வரையில் இனி வைத்திருக்கக் கூடும்.

—"தினமணிச் சுடர்"


## "ஆரம்பக்கல்வி" ஆபீஸ்.

**94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 1-00

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு :

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

43—ம் பக்கத் தொடர்ச்சி....

காந்திஜி விரும்பிய 'பொது மொழி' யாரும் அதிக சிரமமில்லாமல் புரிந்துகொள்ளக் கூடிய மொழி. வடநாட்டில் பல மக்களுக்கு ஏற்கனவே தெரிந்தமொழி, இந்தத் தலையங்கத்தை எழுதுபவர் படித்தும் வந்த மொழி, இயற்கையாக வளரக்கூடிய மொழி.

ஆனால் இப்போது, 'ஆட்சி மொழியாக இப்பிரசுரங்களில் காணப்படுவது, இயந்திர மனிதன்போல், இயந்திரத்தில் செய்யப்பட்ட 'செயற்கை மொழி'!

ஒரு நூற்றாண்டு சாவகாசம் கொடுத்தாலும் 'இந்தச் செயற்கை மொழி' வளரமுடியாது!

உயர்தர கணிதப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு வினைத் தாளுடன், 'கிளார்க் டேபிள்' (Clark's table) என்ற ஒரு 'லாகரிதம்' (logarithm) அட்டவணையும் கொடுப்பதுண்டு. ஏனென்றால், அந்த அட்டவணையை மனப்பாடம் செய்யவோ சொல்லிக் கொடுக்கவோ முடியாது.

அதுபோலவே, இப்போது சர்க்கார் தரும் இந்தி மொழி பெயர்ப்பின் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், மொழிபெயர்ப்புடன் சர்க்கார் இதற்கென்று தயாரித்துள்ள அகராதியையும் கொடுக்க வேண்டியிருக்கும்.

'இது, 'செயற்கை இந்தி' ஆதலின் இதைக் கற்பதோ சொல்லிக் கொடுப்பதோ முடியாது.

எப்போதும் கையில் அகராதியை வைத்துக்கொண்டு அதைப் புரட்டிக்கொண்டிருந்தாலொழிய, இந்தச் 'செயற்கை மொழியை— உபயோகிக்க முடியாது!

இந்தி தெரிந்தவர்கள், நாம் சொல்வதன் உண்மையைப்புரிந்து கொள்ள முடியும். பிரதமர் சாஸ்திரி புரிந்துகொள்ள முடியும். அவர் இதை இந்தி வெறியர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அவருக்குப் பக்தவத்சலம் சொல்லவேண்டும்.

1963—ல் டில்லி சர்க்கார் காரியாலயத்தின் ஒரு இலாகாவில் வெளியிட்ட சுற்றறிக்கை 'புரொபேஷனர்கள்' இந்திப் பரீட்சையில் தேறினால்தான் உத்தியோகத்தில் நிரந்தரமாக வைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று கூறுகிறது.

இதுபோன்ற உத்தரவுகளை வாபஸ் வாங்காமல், 'இந்தி வருவதால் யாருக்கும் உத்தியோகத்தில் சிரமம் இருக்காது' என்று வேதாந்தம் பேசுவதில் பயனில்லை. இது பற்றி பக்தவத்சலம், சாஸ்திரிக்கு எழுத வேண்டும்.

இந்தியில் படித்துப் பட்டம் பெற்றிருந்தால்கூடப் போதாதாம்.

உதாரணமாக, சென்னையில் தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபைப் பள்ளிகளில் தேறினால் கூடப் போதாதாம்.

(56—ஆம் பக்கம் பார்க்க)

# 'பசிபோக்கி'

சௌராஷ்டிராவில் இந்த ஆண்டு ரூ. 100 கோடி மதிப்புள்ள 10 லட்சம் டன் வேர்க்கடலை மாசூல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவிற்குப் பரவலாகப் பயிர் செய்யப்படும் வேர்க்கடலை, சௌராஷ்டிராவில் எப்போது முதன் முதலாகப் பயிர் செய்யப்பட்டது என்ற விவரம் காலஞ்சென்ற பத்ம பாபா என்பவருக்கு விருது வழங்கும் விழா நடைபெற்றபோதுதான் தெரியவந்தது. பத்ம பாபாவுக்கு, 'வேர்க்கடலையின் தந்தை' என்ற பெயர் இவ்வட்டாரத்தில் வழங்கி வருகிறது. காரணம், அவர்தான் வேர்க்கடலையை சௌராஷ்டிராவுக்கு முதன் முதலாகக்கொண்டுவந்தார்.

## 50 ஆண்டுகளுக்கு முன்

பத்ம பாபா, அந்தக்காலத்திலேயே, 50 ஆண்டுகளுக்கு முன்பே, விவசாயத்தில் பல ஆராய்ச்சிகளைச் செய்து வந்தார். பல எண்ணெய் வித்துக்களை அவர் பயிர் செய்து பார்த்தார். ஆனால் சௌராஷ்டிராவின் தட்ப வெப்ப பருவ நிலைகள் ஒத்துவராததால், இப்பயிர்களைச் சாகுபடி செய்வதில் அவர் வெற்றிகாண முடியவில்லை. இந்த நிலையில், அவர் ஒரு சமயம் சென்னைக்குச் சென்றபோது வேர்க்கடலையைப் பார்த்தார். அது தமிழ் நாட்டில் பெருத்த அளவில் பயிர் செய்யப்படுகிறது என்பதை அறிந்து, அதன் மற்ற விவரங்களையும் கேட்டறிந்தார். வேர்க்கடலை விதைகளைத் தம் ஊருக்கு எடுத்துச் சென்றார். இது நடந்தது 1910–ல். அதாவது 54 ஆண்டுகளுக்கு முன்பு.

## கஜு காளி, பக் காதியாயிற்று

சென்னையிலிருந்துகொண்டு சென்ற வேர்க்கடலையைத் தம் நிலத்தில் போட்டுப் பார்த்தார். வெற்றி கிடைத்தது. இதைக் கண்ட கிராம மக்கள், தாங்களும் இந்தப் பயிர் செய்வதில் ஈடுபட்டனர். வேர்க்கடலைக்கு அப்போது அவர்கள் இட்ட பெயர் 'கஜு காளி' என்பது. ராஜகோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பிபாலியா என்ற அந்தக் கிராமத்திலிருந்து 'கஜு காளி' மற்ற இடங்களுக்கும் பரவிற்று. சௌராஷ்டிராவின் தட்ப, வெப்ப நிலை வேர்க்கடலைக்கு ஏற்றதாக இருந்ததால், நல்ல மாசூலும் கிடைத்தது. மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தனர். 'கஜு காளி' என்ற பெயரை 'பக் காதி, (பசிபோக்கி) என்று மாற்றினர். இந்த வேர்க்கடலையைத் தங்களுக்குக்கொண்டு வந்து அளித்த பத்ம பாபாவை (பத்ம நதுபாய் கலாரியா என்பது முழுப் பெயர்), 'வேர்க்கடலையின் தந்தை' என்று பெருமையுடன் மக்கள் அழைக்கின்றனர்.

—"கிராம நலம்"

# கம்பன் கவிச் சித்திரம்

**பேராசிரியர்**
**அ. சீனிவாசராகவன்**

கம்பன் தேரழுந்தூரிலே என்றோ பிறந்தான்; வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பெற்றான்; பிறகு, மறைந்தான். கம்பனைப்பற்றி, வரலாறு சொல்வதெல்லாம் இவ்வளவே. ஆனாலும் என்ன? "இராமாவதாரம்" என்று அவன் இயற்றிச் சென்ற ஒப்பற்ற காவியத்தில், அவனுடைய நெஞ்சு இன்னும் துடிக்கிறது. ஒரு மனிதனுடைய வாழ்க்கை, அவனுடைய உள்ளத்தின் சலனங்களாலும் நிலைகளாலும் ஆனது என்பது உண்மையானால், என்றோ இருந்த கம்பனுடைய வாழ்க்கை முழுவதையும் இன்னும் நாம் காணமுடியும். காணும்படி அமைத்த பெருமை அவனுடையது.

கம்பன் இவ்வதிசயத்தை எப்படிச் சாதித்தான்? தெரிந்து கொள்ள வேண்டுமானால், சொல், உவமை, புனைவு முறை முதலிய கவிதைக் கருவிகளை அவன் எப்படிக் கையாண்டான் என்பதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். சிந்தித்தால், அவற்றின் மூலமாக உருவாகும் காவியப் பொருளையும், நாம் அணுகக்கூடும். கவிதை ஒளியாகச் சுடர்விடும் அக்காவியப் பொருள்தான் எது? கம்பன்தான், அவனுடைய அறிவாற்றல், அத்தனையும் தன் உள்ளுணர்வையுங்கொண்டு, வாழ்வின் அடித்தலமாக அவன் கண்ட தத்துவம், இவையே சிறப்பாகக் கம்பனுடைய காவியத்தின் பொருள்.

கம்பனுடைய கவிதைப்பாங்கு அறிவாற்றல், தத்துவம், இவற்றால் சமைந்த காவியப் பேருலகில், சிறிது நேரம் இப்போது சஞ்சாரம் செய்யப்போகிறோம்.

சொல்லும், உவமையும் கவிதைக் கருவிகள். வருணனை என்பது கவிதையின் வகை. இம்மூன்றிலும் கம்பன் சிறந்து விளங்குகிறான். ஆனால், இவற்றில் கம்பனுடைய சொல்லின் தனிநயம் எது? அவனுடைய அழகிய உவமைகளின் தனித்தன்மை எது? வருணனையில் அவனுக்கென்றே அமைந்த தனிப்பாதை எது? ஒரு பாட்டிலே, இம்மூன்றுக்கும் விடை காண முடியுமா? பார்ப்போம்....

இரவு. ஒரே இருட்டு. அந்த இருட்டிலே இலக்குவனோடும், சீதையோடும், இராமன் காட்டுக்குள் அடி எடுத்து வைக்கிறான். அப்போது கீழ்வானில் சந்திரன் தோன்றுகிறான். இதைச்சொல்கிறான் கம்பன்.

மருமத்துத் தன்னை ஊன்றும்
மறக்கொடும் பாவம் தீர்க்க

*உரும் ஒத்த சிலையினோரை*
*ஒருப்படுத்தி உதவ நின்ற*
*கருமத்தின் விளைவை எண்ணிக்*
*களிப்பொடு காண வந்த*
*தருமத்தின் வதனம் என்னப்*
*பொலிந்தது தனி வெண்*
*திங்கள்.*

கம்பன் என்ன சொல்லுகிறான், தெரிகிறதல்லவா? சந்திரன் தோன்றினான். எப்படி? தருமத்தின் முகத்தைப் போல. அந்த முகத்திலே இப்போது களிப்பு. இதுவரையில் தன்னுடைய மருமத்தில் அதாவது உயிர் நிலையில் —யாவும் தன்னை அழுத்தி நிற்க, தருமம் தவித்துக்கொண்டிருந்தது. இப்போது தனக்கு உதவி வருகிறது. தன்னை வதைக்கும் பாவம் தீரும் என்று எண்ணுகிறது. வரும் உதவி இடியைப் போன்ற வலிமை உடைய வில் லேந்திய வீரர் இருவர் வடிவத்தில் வருகிறது. கருமம்—அதாவது விதி—இவ்வாறு தருமத்திற்கு உதவியது. இதை உணர்ந்து, தன்னைக் காக்க நெருங்கும் வீரர்களைக் களிப்போடு காணவரும் தருமத்தின் முகத்தைப் போலச் சந்திரன் உதயமானான். இது ஓர் உவமை. நாம் சந்திரனைப் பார்த்திருக்கிறோம். ஆனால் தருமத்தையோ, பாவத்தையோ, விதியையோ கண்ணால் கண்டதில்லை. காணவும் முடியாது. ஆனால் கருத்தினால் உணர முடியும். கண் முன்னே உள்ளபொருளுக்கு, கருத்தினால் மட்டும் உணரக்கூடியவற்றால் இங்கே கம்பன் விளக்கம் தருகிறான். உவமைகளை அமைக்கும்போது, கம்பன் பெரும்பாலும் கையாளும் தனிமுறை இது. சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவிரி என்பான். ஏழையர் உள்ளமென்ன இருண்டன திசைகள் என்பான். கங்குல்பூசி வரும் கலிகாலத்தைப்போல வந்தான் விராதன் என்பான். தவம் செய்த தவமாக இருந்தாள் சீதை என்பான். பாக்கியம் புரிந்த எல்லாம் நின்றிரு வடிவமாகி இராம லக்ஷ்மணர்களாகச் சமைந்தது என்று பேசுவான். புலன்களைக் கொண்டே காணக்கூடிய ஒரு பொருளுக்கு, அதே தன்மை உடைய மற்றொரு பருப் பொருளை உவமை கூறுவதும், கருத்தால் மட்டும் உணரக்கூடியதற்கு, கண்ணால் காணும் பொருளை ஒப்பாகக் காட்டி விளக்குவதும், கம்பனுக்குத் தெரியாதா? தெரியும். ஆனால் காணும் பொருளுக்கு, கருத்தால் மட்டுமே உணரும் ஒன்றால் விளக்கமும் உணர்ச்சியும் தருவது கம்பனுக்கு மிகவும் பிடித்தமான முறை.

வெறும் கருத்து நெஞ்சைக் கவ்வாது. சந்திரோதயத்தை வருணிக்கும் கவிஞன், தருமம், பாவம், விதி என்று பேசினால், பேசவந்த சந்திரன் ஒளி மங்கி விடும். இந்த நிலையைக் கம்பன் சமாளிப்பது எப்படி? கருத்துக்களை வரட்டுக் கருத்துக்களாக அவன் தருவதில்லை. பிறகு? காட்சிப்பொருளுக்கு இயல்பாக அமைந்த வடிவமும், தெளிவும், கருத்துப் பொருளுக்கும் அமை

யும்படி, அவன் கருத்துக்களை உருவாக்குவான். பாட்டை மறுபடியும் பார்ப்போம்.

"மருமத்துத் தன்னை ஊன்றும் மறக்கொடும் பாவம் தீர்க்க—"ஊன்றும்" என்ற சொல்லுக்கு, "அழுத்துதல்" "நிலையாக இருத்தல்" என்ற பொருளோடு "முற்றுகை இடுதல்" என்ற பொருளும் உண்டு. தருமத்தைப் பாவம் முற்றுகை இடுகிறது. மருமம் வரையில் அந்த முற்றுகை, தருமத்தை நெருங்கி விட்டது. அதாவது. தருமக் கோட்டையின் வெளி மதில்கள், உள் மதில்கள், கொத்தளங்கள், அரண்கள் இவையெல்லாம் வீழ்ந்துவிட்டன. இப்போது எஞ்சி இருப்பது ஒன்றே ஒன்று. கோட்டையின் உயிராக இருக்கின்ற ஒரே இடம்—அதன் மருமம் இரகசிய வலிமை—கடைசி ஆறுதல் — கருவறை. அதுவும் வீழ்ந்த தென்றால் தருமம் வீழ்ந்துவிடும். இப்படி முற்றுகையில் பெருமளவு வெற்றி அடைந்த மனக்கொடும்பாவத்தை அழிக்க முடியுமா? முடியும்... எதனால்? கணத்திலே எதனையும் அழிக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த இடி போன்ற ஒன்றும்.

ஒரு கோட்டை. முற்றுகை பெரும்பாலும் தகர்ந்து போன கோட்டை. அதைத் தகர்த்து வரும் பாவப் பெரும்படை. இந்தப் படையைத் தீர்க்க வரும் இடி போன்ற ஆற்றலைப் பார்த்துக் களிக்கின்றது தருமம். அதன் முகத்தில் அக்களிப்பு முழுவதும் தோன்றுகிறது. ஆகவே அம்முகம் வதனம் ஆகிறது. வதனம் என்றால், பேசும் ஒன்று, உணர்ச்சியைத் திறலோடு காட்டும் ஒன்று என்று பொருள் படும். இப்போது பாருங்கள். மருமம், ஊன்றிய, உரும் (அதாவது இடி) வதனம் என்ற சொற்களில் உள்ள தொனியைப் பயன்படுத்தி, தருமம், பாவம், விதி இவற்றால் சமைந்த கருத்து உலகத்தை, உண்மையிலேயே—ஓர் உலகமாக—அதாவது நாம் கண்ணால் காணக்கூடிய ஒன்றாகக் கம்பன் செய்து விடுகிறான். ஆனால் இந்த உலகமோ, பரந்தது. மனிதனுடைய கருத்தளவு பரந்தது. ஆகவே எல்லையற்றது. அதை வடிவாக நம்மை உணரும்படி செய்து நமது நெஞ்சை நிறைத்து, அந்த அகண்டமான உணர்ச்சி ஒளியில், சந்திரனைப் பார் என்கிறான் கம்பன். தருமத்தின் வதனம் எனப் பொலியவில்லையா அது என்று அவன் நம்மைக் கேட்கும்போது தருமத்தின் எல்லையில்லாப் பேரொளியாகவே சந்திரன் நமது நெஞ்சிலே உதயமாகிப் பொலிகிறான். அதன் மூலமாக, கருத்து உலகைக் காட்சிப் பொருளாக அவன் மாற்றும் மாயம்! இதைச் சாதித்தது எது? கம்பனுடைய சொல் நயம்.

கம்பனுடைய உவமை, சொல் நயம், இவற்றின் தனித்தன்மையைக் கண்டோம். இவை இரண்டும் சேர்ந்த வருணனைதானே இந்தப் பாடல்? அது என்ன செய்கிறது. காவியப் பொருளை ஒட்டிய ஓர் உணர்ச்சிச் சிந்தனைச்

சுழலை அது உண்டாக்கி விடுகிறது. இராமன் காட்டில் அடி எடுத்து வைக்கிறான். "இராம இராவணப் போராட்டம் தருமத்திற்கும் பாவத்திற்கும் இடையே நிகழப்போகும் அந்த முடியா நெடும்போர் — அது தொடங்கி விட்டது. அந்தப் போரும் முடியும். இறைவன் திருவுளம் அதுவே. இதோ இடி போன்ற இராமன் வில். இனி தருமத்தின் வெற்றிக்குத் தடையேது; இதோ வரும் நிலவு அதையே சொல்கிறது. ஆகவேதான் இன்று ஒப்பற்ற திங்களாகத் தனி வெண் திங்களாக அது சுடர் விடுகிறது." என்பது கம்பன் வருணனை. இந்த வருணனை காவியத்தின் அடி நாதத்தோடு வரம்புள்ள உலகில் வரம்பற்ற ஒன்றைக் கண்டு — அதன் வதனமாகவே உலகையெல்லாம் காண வைக்கிறது. இதுவே கம்பனுடைய வருணனையின் தனித்தன்மை.

சொல், உவமை, போன்ற கவிதைக் கருவிகளின் வழியாகவும், வருணனை போன்ற கவிதை வகைகளின் மூலமாகவும், ஒப்பற்ற அறிவாற்றலைத் தன் காவியம் முழுவதும் வெளியிடுகின்றான். கம்பனுடைய காலத்திற்கு முன் மனிதன் யுகயுகாந்தரமாக திரட்டி வைத்திருந்த அறிவுச் செல்வத்தையெல்லாம் கம்பன் தன்னுடையதாகச் செய்து கொள்கிறான். கல்வியிற் பெரியனாக விளங்குகிறான் கம்பன். இன்றைய விஞ்ஞானம் நேரடியாகச் சோதனைகளின் மூலமாகக் கண்டுள்ள உண்மைகளைக் கூட, அவனுடைய அறிவாற்றல் எதிர்நோக்கி அவற்றிற்கு இலக்கணம் வகுக்கிறது. இதை நாம் காண்கிறோம். வெறும் அறிவு மட்டுமன்று; கம்பனுடைய தெளிந்த உள்ளுணர்வே இதைச் சாதிக்கிறது. உலகம் முழுவதும் நிறைந்து நிற்கும் சத்தியத்தைத் தொட்டுக் காணும், தொட்டுக் காட்டும் மெய்ஞானம், பூத பௌதிக விகாரப் பாட்டை மட்டும் விவரிக்கும் விஞ்ஞானத்தை உணர்வது கஷ்டமா என்ன? கம்பனுடைய அறிவாற்றல் பெருகிப் பெருகி, கடைசியில் சத்திய தரிசனக் கடலாக விரிந்து வருகிறது. அந்தக் கடலின் சூரலே கம்பனுடைய தத்துவம். உலகையெல்லாம் அளந்து, அளந்து, மனித வாழ்வின் நிலைகள் அனைத்தையும் ஆராய்ந்து, ஆராய்ந்து, கடைசியில் சத்தியப்பொருளையும் கண்டான் கம்பன். அந்தப் பொருள்தான் எது? மனிதன் தெய்வமாக உயரலாம் என்பதா? ஆம். ஆனால் அதுமட்டுமில்லை. வாழ்வாங்கு வாழ்ந்து மனிதன் தெய்வமாக உயரலாம். உயரவில்லையா? உயர்வது எப்படி? அதைக் காட்டுவதற்கு, மேலொரு பொருளும் இல்லாமெய்ப் பொருள் மனித வடிவம் தாங்கி இங்கே வருகிறது. மனிதன்தெய்வமாகக் கூடும் என்பதை வேதத்தில் சொல்லளவிலே காண்கிறோம். ஆனால் அந்தச் சொல் விளங்கவில்லையே, மறை பொருளாக இருக்கிறதே. விளங்கினாலும், அதன்படி, கற்றதற்குத் தகுந்தபடி நிற்க முடியவில்லையே.

வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்திறம் தெரிந்து தெளிவது முதற்படி. பிறகு, திறம்தெரிந்து அத்திறத்தை உலகம் பூணவேண்டும்—இது இரண்டாவது படி—இவை இரண்டிலும் மனிதன் ஏறுவதற்குத் துணை செய்யவே, பிறவி நோய்க்கு மருந்தான ஒன்று, பிறவி நோய்ச் சூழலில் அளவிலாக் கருணையால் தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொண்டு இறங்கி வந்தது.

"அறந்தலை நிறுத்தி வேதம் அருள்
சுரந்து அமைந்த நீதித்
திறந்தெரிந் துலகம் பூணச்
செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறத் தக்கோர்
இடர் துடைத்து ஏக ஈண்டும்
பிறந்தது பிறவிநோய்க்கு
மருந்து."

கம்பன் குரல் இது. மனிதன் தெய்வமாக உயரக்கூடும் என்பதற்குக் கம்பன் காட்டுகின்ற சான்று; இலட்சிய மனிதன் இராமன். உண்மை. ஆனால், கால் தரைதோய நின்று, மனித குலத்தை, மனிதனாகவே நின்று உய்விக்க வந்த அலகிலா ஆற்றலும் அறிவும், கருணையும் அவனே, அந்த இராமனேதான் இராமன் பரம்பொருளே என்பதும் தத்துவம்.


# புதுமுறை சங்க வாய்பாடு

(V. K. சேஷாத்திரி. B. A., L. T.,

Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு, ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

# வளரும் விஞ்ஞானி - நார்லிகர்

[எம். வி. மணி]

அவர் வயது இருபத்தேழு. ஆனால் சுமக்கும் புகழோ, வளரும் விஞ்ஞான மேதை. இதை உலகம் உவந்தளித்துள்ளது. அவர்தான் திரு. டாக்டர். ஜயந்த் விஷ்ணு நார்லிகர். சின்னக்குழந்தையாக இருந்தபோது இவருக்கு விளை யாட பொம்மைகளும் சொப்பு களும் கிடைப்பதற்குப் பதிலாக இவர் தந்தை இவருக்குக்கொடுத் தவை கரும்பலகையும் சாக்குக் கட்டியும்தான். இவற்றை வைத்து விளையாடவா? இல்லை. கணக்குப் போடத்தான். அந்த வயதிலேயே இவரது கணித மேதைத்தனம் இவரது தந்தை யால் காணப்பட்டு உரமூட்டப் பட்டு வளர்க்கப்பட்டது. இவரது தந்தை வி. வி. நார்லிகரும் ஒரு கணிதப் பேராசிரியர். அவரும் கூட புவி ஈர்ப்புத் தன்மை பற்றிய கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். எனவே, அந்த இரத்த வளம் குழந்தை நார்லிகரை பௌதிக கணிதத்திலே முன்னேடி நிற்கச் செய்துள்ளது.

இவரது தந்தையார் பனாரஸ் பல்கலைக் கழகத்திலே கணிதப் பேராசிரியராகப் பணியாற்றி வரு கின்றார். இங்கேதான் நார்லிகர், கணிதம் பௌதிகம் புள்ளிவிபரம் ஆகியவற்றினுக்காக பி. எஸ். ஸி. பட்டத்தை 1957-லே பெற்றார். பின்னர் 1957-லே கேம்பிரிட்ஜ் கிங்ஸ் கல்லூரியிலே சேர்ந்து மேற்படிப்பைத் துவங்கி சென்ற ஆண்டு தமது நவீன கோட்பாட் டிற்காக பி. எச். டி. பட்டத்தைப் பெற்றார். ரிலேடிவிடி, காஸ் மாலஜி ஆகியவை சம்பந்தமாக இவர் கூறியுள்ள இந்நவீன கோட்பாடானது பெரும்பாராட்டு தலைப் பெற்று, இவ்வாண்டு குடி யரசு தினத்தன்று பத்மபூஷன் விருதை இந்திய ஜனாதிபதி அளிக்கும் வரை சென்றுள்ளது.

இவ்வரிய கோட்பாட்டினை இவர் கடந்த ஏழு ஆண்டுகளாக கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிலே உள்ள கணிதப் பேராசிரியர் ஹோய்ல் என்பவருடன் துணை யாக ஆய்ந்துகண்டார். காலஞ் சென்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் விட்டுப்போன கோட்பாட்டிலே விடுவிக்கப்படாமலேயே கடின மாகக் கிடந்த கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டுதான், நார்லிகர், தமது கோட்பாட்டின் ஆராய்ச்சி அஸ்திவாரத்தை எழுப்பினார். ஐன்ஸ்டீன் கோட் பாட்டினை விவாதம் செய்யும் நிலை யான, இந்தப் பிரபஞ்சம் ஏதொன் றுமில்லாமலே ஏதோ ஒரு மந்திர சக்தியினால் எப்படியோ ஒழிக்கப் பட்டாலும் கூட, அகிலமானது ஏதோ ஒரு அமைப்பிலே அல்லது வியூகனத்திலேயே இருக்கும் என் பதனை எதிர்த்து, இந்த விதமான கணிதக் கோட்பாட்டின்படிக்கு அகிலமானது ஒழிக்கப்படுமேயா னால் ஒன்றுமே இருக்காது என்ப தனை வலியுறுத்துகிறது, நார்லிக ரின் கோட்பாடு.

சாதாரணமாக மனிதன் ஏன் முதுமையடைகிறான் என்ற கேள் வியை இவர் எழுப்பினார். பதிலை யும் அவரே சொல்லுகிறார்; கார ணம் காலமானது கடந்த, நிக ழும், எதிர் என்ற முக்காலப் போக்கின் வழியாகச் சென்று கொண்டிருப்பதனால்தான் – என்ப தாக. நார்லிகர் மூன்று காலப் போக்குகளை (ஆரோ ஆப் டைம்) வரையறுத்துள்ளார். டெர்மோ டைனமிக் ஆரோ ஆப் டைம்: உதாரணமாக ஒரு வாயுப் பொருளானது அதிக அழுக்க

நிலையிலிருந்து குறைந்த அமுக்க நிலைக்குச் செல்லுமானால் முன்னதிற்கும், பின்னதிற்கும் ஒரு விளக்க கருத்தைக்கொடுக்கிறது. எலெக்ட்ரோ டைனமிக் ஆரோ ஆப் டைம்: மின்சார அலைகள் மட்டில்லாத ஒரு நிலைக்கு அவைகளை அனுப்பும் வகையிலே பல வீனம் அடைந்தும், பெறப்படும் நிலையிலே உறுதியடைந்தும் காணப்படுகிறது. காஸ்மோ லாஜிகல் ஆரோ ஆப் டைம்: விரிவடைந்து கொண்டிருக்கும் அகிலத்துள்ளே இருக்கும் எதிர் காலத்தினூடே காலமானது சென்றுள்ளது என்பதனைக் குறிப்பிடுவதாகும்.

இவருடைய சொற்பொழிவுகளிலே கிடைக்கப் பெறுவது கடினமான உதாரணங்கள் அல்ல. எவரும் எளிதிலே புரிந்து கொள்ளக்கூடியவைகளாகும். இவர் ஒரு பொருளை தம்மைப் போன்ற விஞ்ஞானிக்கு மட்டுமில்லாமல், மாணவர்களுக்கும் சாதாரணமானவர்களுக்கும் கூட பளிச்செனப்படும் பான்மையிலே விளக்குவது இவருடைய மேதைத்தனத்திற்கு ஒரு அணிகலனாக உள்ளது.

இத்தகைய கோட்பாடுகளால் உலகம் இன்னும் பலவழிகளிலே முன்னேறப்போகிறது. பரவெளிப் பயணம் சுலபமாக்கப்படலாம், புத்தம்புதிய கோள்களின் நிலை மனிதனுக்குப் புலப்படலாம், செவ்வாய்க்கு சீக்கிரம் போய்ச் சேரலாம். மின்னுதை மின்சாரம் உண்டாகலாம், மருத்துவத்துறையிலே சடப்பொருள்களின் தன்மையை மேலும் மேலும் ஊன்றிக் காண வகையேற்பட்டு அதன் பயனாக நோய்கள் தீர்க்கப்படலாம். மேற்சொன்னவையாவும் நமது சொந்தக் கருத்துக்கள்தான். ஆனாலும் நார்லிகரின் கோட்பாட்டை அறிந்த, உணர்ந்த, புரிந்து கொண்ட எவரும் ஒப்புக்கொண்டு தானாகவேண்டும்.

திரு. நார்லிகர் அவர்கள், இங்கிலாந்திலேயே தங்கி, பேராசிரியர் ஹோய்லுடன்கலந்துமென்மேலும் தொடர்ந்து ஆராய திட்டமிட்டுள்ளார். புரொபசர் ஹோய்லை அவர் போற்றுவதிலும், சென்ற மாதம் அவர் சென்னையிலே கொடுத்த சொற்பொழிவின் ஆரம்பத்திலே கண்டதும், எப்போதும் அந்தக்கூரிய பார்வையின் பின்னே வைத்திருப்பதும், மிகப் பெரியபொக்கிஷமான தன்னடக்கமாகும்.

வாழ்க, இந்த வளரும் விஞ்ஞான மேதை. அதனால் மனிதகுலம் அடைக, பெரும் ஆக்கப்பயன்கள்.

---

(48—ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திப் பிரதேசத்திலுள்ள பரீட்சைகளில் மெட்ரிகுலேஷனுக்குச் சமமான பரீட்சையில்தேற வேண்டுமாம். வேறு பிரதேசத்துப் பரீட்சைகளாயின், இந்தியை முக்கிய பாடமாக எடுத்து 'இண்டர் மீடியட்' தேறியிருக்க வேண்டுமாம்.

இப்படியெல்லாம் பலவித செய்திகள் வருகின்றன. இதுபற்றிப் பத்திரிகைகளில் வரும் கடிதங்களையெல்லாம் பக்தவத்சலம் படித்து, டில்லியின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

# காமாலை

காப்டன்
—[என். சேஷாத்திரிநாதன்]—

காமாலை என்ற பொதுப் பெயரால் பல நோய்களைக் குறிப்பிடுகிறோம். இவற்றில் ஊதுகாமாலை என்பதும் மஞ்சள் காமாலை என்பதும் சாதாரணமாய்த் தோன்றும் நோய்கள்.

ஊதுகாமாலையில் முகமும் கை கால்களும் வயிறும் ஊதினாற் போல் இருக்கும். சருமமும் சற்று வெளிறியிருக்கும். இரத்த சோகை அதிகமாக இருந்தாலும், ஊதுகாமாலைபோன்ற தோற்றம் உண்டாகும். ஆனால் இரு வகை ஊதுகாமாலைகளும் மிகவும் வேறுபட்ட நோய்கள். முதல் வகை ஊதுகாமாலை சிறுநீரகத்துக்குக் கோளாறு ஏற்பட்டுத் தோன்றும் நோய். சிறு நீரைச் சோதித்துப் பார்த்து, நோயின் கூற்றைக் கண்டுகொள்ளலாம். சிறு நீர் குறைந்து போகும். சாதாரணமாகப் பேச்சிலே "உப்பு" எனப்படும் பொருள் சிறுநீரில் கழியும். இது உண்மையில் உப்பல்ல. ஆல்புமின் என்னும் பொருள். புரதப் பொருள் வகை. இரத்தத்தின் ஒரு பகுதி. இத்தகைய பொருள்களை ஆரோக்கியமான சிறுநீரகம் கழியவொட்டாமல் தடுத்துவிடும். ஆனால் அது நோயுற்றுவிட்டால், இதையும் நீரோடு அகற்றிவிடும்.

இந்த நோய் முற்றிவிட்டால், இரத்தத்தில் சில நச்சுப் பொருள்கள் அதிகமாக, இருதயத் துடிப்புக்கும் கேடு நேரக் கூடும். இதற்குப் பரிகாரமாக உணவிலிருந்து உப்பை அகற்றிவிட வேண்டும். வேறு வகையிலும் தக்க சிகிச்சை செய்து, வைத்தியர்கள் நோயாளியை ஆரோக்கிய நிலைக்குக் கொண்டுவந்து விடுவார்கள்.

இவ் வகை ஊதுகாமாலை, நமுட்டுச் சிரங்கு உடலெங்கும் பற்றிக் கொண்டால் அல்லது தலையில் கடுமையாகப் பேன் பூச்சி தொல்லை ஏற்பட்டால் உண்டாகும்.

சோகையினால் ஏற்படும் ஊது காமாலை, இரத்தத்திலிருந்து சிவப்பு வடிகங்கள் குறைந்து, அல்லது வேறுகாரணத்தினால் இரத்தத்தின் சிவப்பு நிறம் குறைந்து நோய் ஏற்படும். இவ் வகை ஊதுகாமாலையில் சிறுநீரைச் சோதித்துப் பார்த்தால், அதில் உப்பு என்னும் பொருள் தோன்றாது. சிறுநீரின் அளவும் குறையாது. தக்க முறையிலே சோதித்துப் பார்த்தால், அதில் நிறக் குறை இருப்பதை அறிந்துகொள்ளலாம். சோகைக்கு நம் நாட்டில் முக்கியமான காரணம் மலேரியாச் சுரமும் கொக்கிப் புழு ஆக்கிரமிப்புமாம். இக் காரணங்களை அகற்றி, அயம் கலவையான மருந்துகளைக் கொடுப்பதே இதற்குப் பரிகாரமாகும்.

மஞ்சள் காமாலை என்னும் நோய்க்கும் மேலே சொல்லிய காமாலைகளுக்கும் உறவே இல்லை. இந்த நோய் கல்லீரலுக்குக்

கேடு ஏற்படுவதால் தோன்றும் கோளாறுகும்.

கல்லீரல் உடலுக்கு ஒரு முக்கியமான உறுப்பாகும். வீட்டிற்கு "உக்கிராணம்" எப்படியோ, அது போன்றது உடலுக்குக் கல்லீரல். அதில் உடலுக்குத் தேவையான பொருள்கள் சில வகை சேமித்து வைக்கப்பெற்று, அவ்வப்பொழுது உறுப்புக்களுக்கு வினியோகமாகும். கல்லீரல் வேறொருவகைப் பொருளைச் செய்து, குடலில் சுரந்து கொடுக்கிறது. இது தான் பித்த நீர் என்பது. குடலிலிருந்து நிணம் சீரணமாவதற்கு இந்த நீர் இன்றியமையாத பொருள். பல காரணங்களால் இது கல்லீரலில் தடைபடும். அப்பொழுது மஞ்சள் காமாலே ஏற்படும்.

குடலில் சுரக்க வேண்டிய பித்தமானது கல்லீரலிலேயே தடைபட்டு, இரத்தத்தில் கலவையாகிவிடும். இரத்தம் உடலெங்கும் சுழன்று வரும்போது, சருமத்தில் பித்தம் பரவி, மஞ்சள்நிறம் தோன்றும். சிறுநீரிலும் அது சுரந்து அதுவும் மஞ்சளாகும் பித்த நீர் கல்லீரலில் தடைப்படுவதற்குக் காரணங்கள் பல உள்ளன. சில நுண்கிருமிகள் கல்லீரலே ஆக்கிரமிக்க, கல்லீரலே பருமனகும். அப்பொழுது பித்த நீர் கல்லீரலிலே தடைப்பட்டு, இரத்தத்தில் தேக்கமாகும். இது ஒரு வகைத் தொத்து நோய். இதைத் தோற்றுவிக்கும் கிருமிகள் முக்கியமாக மூன்று வகை. ஒன்று உலக முழுதும் சாதாரணமாகப் பரவியிருக்கும் கிருமி. இது சாதாரண அணுதரிசினியின் உதவியாலும் காண இயலாது. வைரஸ் எனப்படும் கிருமி வகுப்பைச் சேர்ந்தது.

இந்த நோய் சிறு வயதிலேயே பற்றிக்கொள்ளக் கூடியது. ஒரு நாள் அல்லது இரண்டு நாள் சுரம் தோன்றலாம். அல்லது சுரமே தோன்ருமல் இருக்கலாம். பிறகு குழந்தைகளுக்குச் சோறு வேண்டியிராமல், வாந்தியும் தோன்றும். பின்னர் காமாலே முகத்திலும் கண்ணிலும் தோன்றும். உடலெங்கும் மஞ்சள் நிறம் தோன்றும். பித்தம் தடைப்படுவது அதிகமாய் இருந்தால், காமாலே மஞ்சளும் அதிகமாகத்தோன்றும். சிறுநீரும் மஞ்சளாகும். மலம் மட்டும் இயல்பான மஞ்சள் இல்லாமல் வெள்ளேயாகவே இருக்கும். மஞ்சள் நிறம் பல அளவிலே ஏற்படும். சில குழந்தைகளுக்கு வெகு இலேசாகத் தோன்றிமறைந்துபோகும். சில பேருக்குக் கடுமையாகவே தோன்றி, ஒரு மாதம் வரை தங்கி

---

**கடவுள் துணே**

ஒரு சத்தியாக்கிரகி தனக்கு வேறு கதியில்லே என்று உணர்ந்து, ஓர் அடிகூட மேலே எடுத்து வைக்க முடியாதவனய், நான்கு திசைகளிலும் காரிருள் சூழ்ந்திருப்பதாக அவனுக்குத் தோன்றும் சமயந்தான், கடவுள் அவன் துணேக்கு வருகிருர்.

— மகாத்மா

நிற்கலாம். குழந்தை நிலையில் பற்றிக்கொள்ளாது போனால், நோய் முதியோரையும் பற்றிக் கொள்ளும். அப்பொழுது அதன் கடுமையும் அதிகமாகும்.

"லெப்டொஸ்பைரா" எனப் படும் வேறொரு வகை கிருமியும் காமாலை தோற்றுவிக்கும் இயல் புடையது. இது ஜப்பான் தேசத் திலும், அதனை அடுத்திருக்கும் கிழக்கு ஆசிய நாடுகளிலும் அதி கமாய்ப் பரவிக்கொண்டிருந்த நோய். உலகமெங்கும் ஓரளவு காணலாம் என்று சொல்லப்படு கிறது. எலிகளில் இந்தக் கிருமி நோய் தோற்றுவிக்காமல் நிரந் தரமாய் இருந்துவிடக் கூடும் என்றும் சொல்லப்படுகிறது. இந் தக் கிருமி, கல்லீரலில் பழுப்பை எழுப்பி, அதனால் காமாலை உண் டாக்கும். கிருமி சிறுநீரில் கல வையாய், அதன் வழியாய்ப் பிற ரைப் பற்றிக்கொண்டு பரவுமாம். இதற்கு இறப்புத் தொகை அதி கம்.

மஞ்சள் சுரம் என்றொரு நோய் உலகில் சில பகுதிகளில், முக்கிய மாக மத்திய அமெரிக்காவிலும், ஆப்ரிக்காவிலும் தங்கியிருக் கிறது. ஒருவகைக் கொசுவால் மக்களிடையே பரப்பப்படுகிறது. இதன் இறப்புத் தொகை வெகு அதிகமானது. இந்த நோய் பெரு வாரியாகத் தோன்றக் கூடியது. பனமாக் கால்வாய் கட்டுவதை வெகு காலம் தடை செய்தது இந்த நோயே. இது மற்ற நாடு களுக்குப் பரவாமலிருக்கக் கடு மையான தடை முறைகளைக் கையாளுகின்றனர். விமான யாத் திரை இக்காலத்தில் சர்வ சாதா ரணமாகி விட்டதால், இந்தத் தடை முறையின் அவசியம் ஏற் படுகிறது. ஒருவகை வாக்சின் குத்திக்கொள்வது உறுதியான தடைமுறையாகிறது

புற்று நோயும், வேறு வகைக் கல்லீரல் நோய்களும் காமாலைக் குக் காரணமாகலாம். காமாலை நீண்டகாலம் தோன்றி, உயி ருக்கே ஆபத்து நேரக்கூடும்.

ஆனால் சாதாரணமாகக் காமாலை எளிதில் மறையக் கூடி யது. அதிகமாய் மருந்துகளின் தேவை இல்லை. காமாலைக்குப் பரி காரமாக மாந்திரீகஞ் செய்வார் கள். வெள்ளிக் கிண்ணியில் தண் ணீர் வைத்து, அதில் ஊசியை (இரும்பு ஊசிதான் வேண்டும்) போட வேண்டும். பாட்டி மந்தி ரிப்பாள். கிண்ணித் தண்ணீர் ஒவ்வொரு நாளும் அதிகமாக மஞ்சள் நிறம் பெறும். நோயாளி யின் முகத்திலும் மஞ்சள் குறை யும். பாட்டி காமாலையை இறக்கி விட்டேன் என்பாள். காக்கை மரத்திலிருந்து பனம் பழத்தைக் கீழே தள்ளியது என்று சொன் னால் எவ்வளவு உண்மையாய் இருக்குமோ, அவ்வளவு உண்மை தான் பாட்டி சொல்வதும்!

—"நல்வழி"

தென்றல் தந்த

# கவிதை

[ தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் ]

*"கவிதை என்றால் என்ன?"*

*"வெளிச்சம் என்றால் என்ன?"*

*வெளிச்சம் என்றால் வெளிச்சம்தான்!"*

*"அப்போது கவிதை என்றாலும் கவிதை தான்"*—இப்படி இரண்டு நண்பர்கள் பேசிக் கொண்டார்கள் என்றால் அது அதிசயம் இல்லைதானே. வெளிச்சத்தை நமக்குத் தெரியும். அதை அனுபவிக்கவும் தெரியும். ஆனால் வெளிச்சம் என்றால் என்ன என்று கொஞ்சம் விளக்குங்களேன் என்று சொன்னால் நாம் வாயை மூடிக்கொள்வோம். நம்மால் முடியாது என்று சொன்னால் அது மிகையல்ல. அதே போலத்தான் கவிதை என்றாலும் என்ன என்று விளக்கிக் காட்டுவது அல்லது விளக்கிவிட முயல்வது. நல்ல கவிதையை நாம் படித்து விடலாம், ரஸித்து விடலாம். அதிலும் **ரஸிகமணி டி. கே. சி.** போன்றவர்கள், தமிழ்ப் பாட்டைப் பாடக் கேட்டு விட்டால், அப்பாட்டிற்கு அப்படியே அடிமையாகி விடுவோம். ஆனால் எது கவிதை, எது பாட்டு என்று சொல்லிவிட முடியும் என்று தோன்றவில்லை எனக்கு.

செய்யுள் யாத்துவிட எல்லோருக்குமே சாத்தியமாகலாம், கொஞ்சம் இலக்கணம் மட்டும் சரியாகத் தெரிந்து கொண்டோமானால். பாட்டு என்பது அவ்வளவு இலேசாக வந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளைத் தவிர லயத்திலே அமைத்து அதற்கு ஒரு அழகிய உருவமும் கொடுத்துவிட்டால் அது கவிதையாகும். அப்படி உருவாகும் கவிதையும், எளிமையும் இனிமையும் நிறைந்திருக்க வேண்டும். அப்போதுதான் அது உண்மைக் கவிதை-உயர்ந்த கவிதையாகப் பாராட்டப்படும்.

அழகும் ஆனந்தமும் நிறைந்த உள்ளம் ஒன்று, தான் அடையும் அதி அற்புதமான—ஆனந்தமயமான அனுபவத்தை அப்படியே 'ரிக்கார்ட்' எடுத்து வைக்குமானால் அப்படிச் செய்யப்பட்ட ரிக்கார்டுதான் 'கவிதை' என்கிறார் ஷெல்லி. (Poetry is the record of the best and happiest moments of the happiest and best minds ) ஆனால் இதற்கும் சில நிபந்தனைகள் உண்டு. எடுக்கும் 'ரிக்கார்ட்' நல்ல இசையுடனும் தாள லயத்துடனும் இருக்க வேண்டும், எளிமை உடையதாயும் இனிமை உடையதாயும் இருக்கவேண்டும் என்பது

தான். நல்ல கவிதைக்கு லக்ஷணம் எளிமை; உயர்ந்த கவிதைக்கு லக்ஷணம் எளிமையிலும் எளிமை.(Good poetry is always simple; and the best poetry is the simplest of all.)

மனிதனுடைய உள்ளமாகிய குகையிலே ஒளிந்திருக்கும் எண்ணங்களை யெல்லாம் எவனால் உணர முடிகிறதோ, மனித உள்ளத்திற்கு எட்டாத கற்பனைச் சிகரத்தை எவனால் எட்டிப் பிடிக்க முடிகிறதோ, கல்லிலும், வில்லிலும், இலையிலும், தளிரிலும் இருக்கும் இறைவனது பேரருளை யெல்லாம் இனிமையாகவும் எளிமையாகவும் எவனால் வெளிப்படுத்த முடிகிறதோ அவனே கவிஞன்; அவனுடைய சிருஷ்டியே கவிதை. இப்படி யெல்லாம் உருவாகும் கவிதைக்கும், செய்யுளுக்கும் ஒரு வித்தியாசம் இருந்துகொண்டேதான் இருக்கும். இரண்டும் ஒரே உருவத்தில் காட்சி அளித்தாலும் கூட, ஒன்றிலே உயிர் இராது; உணர்ச்சி இருக்கவே இராது. இதைத்தான் சொன்னான். வெர்னன் நோல்ஸ் (vernon knowles) என்பவன். "ஏதோ, இரண்டு எலக்டிரிக் பாட்டரி, சாதாரண பார்வையில் ஒன்று போலத்தான் இருக்கும். ஒன்றைத் தொட்டால் சக்தி பிறக்கும் மற்றொன்றைத் தொட்டால் சும்மா மண் ஆந்தை மாதிரி கிடக்கும். இது போலத்தான் கவிதைக்கும் செய்யுளுக்கும் உள்ள வித்தியாசம்" என்று ஆணித்தரமாகத்தான் சொல்லியிருக்கிறான், சிக்கலான விஷயத்தை (The difference between verse and poetry is like the difference between two dry cell batteries, alike in appearence and at the same time, one charged with electricity and the other dead.)

சரி; அப்படிப்பட்ட உயிருள்ள, உணர்ச்சியுள்ள, எளிமையும் இனிமையும் நிறைந்த நாடு **தென் தமிழ் நாடு**. வடக்கேயுள்ளவர்கள் எல்லாம் தெற்கே தான் தமிழ் இருக்கிறது என்று சொல்லிவந்த காரணத்தால் தென் தமிழ்நாடு என்று பாராட்டப் பட்டுவந்திருக்கிறது. இந்தப் பாண்டியநாட்டிலே ஒரு அரசன்; அவன் பெயரைப்பற்றி நமக்கென்ன கவலை. அவன் ஒரு பாண்டியன். நல்ல சந்திரகுலம். பகை அரசர்களை யெல்லாம் வென்று வெற்றி சூடியவன். அவனது ஆட்சியின் கீழ் இந்திய நாடு முழுவதுமே இருந்தது. இமயம் முதல் குமரி வரை அவனுடைய ஏக சக்ராதிபத்யமே. கங்கை பாய்ந்தது அவனுடைய நாட்டிலே. காவிரி பெருகிற்று அவனுடைய நாட்டிலே. கன்னியும் நின்றனள் அவன் நாட்டிலே. இப்படியெல்லாம் வெற்றி மேல் வெற்றி பெற்றாலும் அவன் இளைஞனே. பாண்டியனுக்கு ஏற்ற மனைவி பட்டமகிஷியும் இருந்தாள். இணைபிரி

யாத காதலர்களாக இவர்கள் வாழ்ந்தார்கள்.

இந்தப் பாண்டியனை வந்தடைந்தார் ஒரு புலவர். புலவர் பாடிய பாடல்களைக் கேட்டான் அரசன். அவர் பாடிய பாடல்களில் தன்னை மறந்தான். தன் தலைவியை மறந்தான். எப்போதும் புலவரைத் தன் பக்கத்திலேயே வைத்துக் கொண்டான் அரசன். அரசாங்க வேலைகளைக் கவனிக்கும் ஐம்பெருங் குழுவிடை அரசன் இருந்தாலும் கூடவே இருப்பார் புலவர். ஆஸ்தான மண்டபத்திலே அயல் நாட்டுப் பிரமுகர்களுக்குப் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தாலும் கூடவே இருப்பார் அவர். ஏன்? அந்தப்புரத்திலே நிலா முற்றத்திலே அரசியுடன் "ஏகாந்தமாக" இருந்தாலும் அங்கேயும் இருப்பார் கவிஞர் என்றால் பிற சொல்வானேன். பரம ரஸிகனை அரசன் புலவரைவிட்டுப் பிரிய இயலாதவனாகக் கவிதைகளை அனுபவிக்கும் சுக அனுபவத்திலேயே காலத்தைக் கழிக்க ஆரம்பித்தான்.

இந்தக் கவிப் பைத்தியம் காரணமாக, அரசி பல இரவுகளைத் தன்னந்தனியாகவே கழிக்க நேர்ந்தது. அரசனே அரசியின் தனிமையையோ தாபத்தையோ உணர்பவனாக இல்லை. புலவர் உணர்ந்தாலும் அரசனைத் தன்னிடமிருந்து பிரித்து அரசியிடம் அனுப்ப அவரால் இயலவில்லை. அவரா பிரித்து வைக்கிறார். அவர் சொல்லும் ரஸமான கவிகள் அல்லவா பிரித்து வைக்கின்றன. இப்படியே காலம் கழிகிறது. பல இரவுகளும் வீணே கழியத்தான் செய்கின்றன.

இப்படி நாள் பல கழிந்து வரும்போது ஒரு நாள் இரவு நல்ல நிலா. அரண்மனை அந்தப்புரத்து மாடியில் அரசனும் புலவரும் சல்லாபித்துக் கொண்டிருக்கிறார்கள். அச் சமயத்தில் பொதிகையினின்று தவழ்ந்து வந்த இளம் தென்றல் மெல்ல மெல்ல அசைந்தாடி வந்து மன்னனையும் கவிஞரையும் ஆனந்தமடையச் செய்தது. பார்த்தார் கவிஞர். இந்த இளந்தென்றலைச் சுகமாகச் சேர்ந்து அனுபவிக்க வேண்டியவர்கள் பாண்டியனும் அவன் மனைவியுமே யல்லவா! இவர்களுடைய இனிய வாழ்விற்கே அல்லவா நாம் இடையூறாக நிற்கிறோம். ஐயோ, அரசி அந்தப்புரத்தினுள்ளே எவ்வாறு வாடி வதங்கிக் கொண்டிருக்கிறாளோ, இதை இவனுக்கு அறிவிக்க இதைவிட ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்க்குமா? என்றெல்லாம் எண்ணினார். அரசனைப் பார்த்து, "அரசே! தென்றல் எப்படி நடக்கிறது; எப்படித் தவழ்கிறது; பார்த்தீர்களா! நல்ல மங்கை, மங்களம் நிரம்பிய மங்கை, அதிலும் மன்னன் மகள், மற்றொரு மன்னன் மனைவி இன்னொரு பட்டத்து இளவரசனை வேறே தன் திருவயிற்றில் தாங்கியிருக்கிறாள். ஆனந்த மயமான வாழ்விலேயே எப்போதும் திளைத்துக் கொண்டிருப்பவள், அவள் அப்படிப் பட்ட அரசிளங்குமரி பூரண கர்ப்

பவதியாய் இருக்கும்பொழுது எப்படி அடிமேல் அடிவைத்து மெல்லத் தவழ்ந்து நடந்து வருவாளோ அப்படியல்லவா வருகின்றது, இத் தென்றல்" என்றார் இப்படி எல்லாம் பொருள்பட:

மங்கல மங்கையராய்
மன்னவர் கன்னியராய்
மைந்தர் வயிற்றினராய்
வாழ்வினராய் அதிலே
திங்கள் நிறைந்து வரும்
சேயிழையார் நடைபோல்
தென்றல் நடந்து வரும்
தென்தமிழ் நாடுடையாய்!

என்று பாடி அரசனை அருமையாக அழைத்தார். அரசன் அப்படியே பரவசமாகி விட்டான். ஏது, பீடிகை பலமாக இருக்கிறதே; விசேஷம் என்ன? என்று கேட்க எண்ணினான். அதற்குள் புலவர்

கங்கையின் நன்கொழுநா!
காவிரியின் கணவா!
கன்னிதன் நாயகமே!
சென்னிநன் னாடுடையாய்.

என்று மறுபடியும் அரசனை அன்பாய் அழைத்தார். "அரசே! தென்றல் தவழும் இந்த இரவு, நிலவு பொழியும் இந்த இரவு, இப்படித் தாங்கள் ஒரு பக்கமாகவும், தங்கள் தலைவி ஒரு பக்கமாகவும் வீணே கழிய வேண்டுமா? இதுவரை எத்தனை இரவுகள் இப்படி வீணே கழிந்து விட்டன; இன்னும் எத்தனை இரவுகளை இப்படியே கழிப்பதாகத் தங்கள் எண்ணம்? என்றெல்லாம் கேட்பார் போல,

எங்கள் இளம்கொடிதான்
உங்கள் இளம் பிறையால்
எத்தனை கோடி இரா
இப்படி வாடுவதே!

என்று முடித்தார் பாட்டை.

"இரவுகள் வீணாகக் கழிந்ததென்னவோ வாஸ்தவம். இப்படி ஒரு பாட்டு பெறுவதற்கு, இன்னும் எத்தனையோ கோடி இரவுகளை வீணே கழிக்கலாமே! இப்படிபாக்களைக் கேட்டு அனுபவித்த இரவுகளையெல்லாம் வீணே கழிந்த இரவுகள் என்று எப்படிச் சொல்ல முடியும்" என்று மடக்கிக் கேட்டான் மன்னன், புலவரைப் பார்த்து.

பாட்டைப் பள்ளியறை உள்ளேயிருந்து கேட்ட அரசியும் 'அது என்ன பாட்டு' என்று கேட்டுக் கொண்டே, அரசனும் புலவரும் இருந்த இடத்திற்கே வந்து விட்டாள். புலவரும் இதுவே தக்க சமயம் என்று அங்கிருந்து நழுவி விட்டார். அந்த இடத்தில் அரசனும் அரசியும் தனித்தார்கள்.

மன்னனும் தேவியும் கவிஞர் பாடிய பாட்டை திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டே இருந்தார்கள், பொழுது விடியும் வரை. அவ்வளவு லாகிரியை உண்டாக்கிவிட்டது பாட்டு அவர்களுக்கு. அதே மயக்கம், லாகிரி நமக்கும் உண்டாகிறதா என்று பார்ப்போமே. பாட்டு முழுவதையும் மறுபடியும் பார்க்கலாம்; பாடலாம்.

மங்கல மங்கையராய்
மன்னவர் கன்னியராய்
மைந்தர் வயிற்றினராய்
வாழ்வினராய் அதிலே
திங்கள் நிறைந்து வரும்
சேயிழையார் நடைபோல்

தென்றல் நடந்துவரும்

தென்தமிழ் நாடுடையாய்!
கங்கையின் நன்கொழுநா!
காவிரியின் கணவா!
கன்னிதன் நாயகமே!
சென்னிநன் னாடுடையாய்!
எங்கள் இளங்கொடிதான்
உங்கள் இளம்பிறையால்
எத்தனை கோடி இரா
இப்படி வாடுவதே.

பாட்டைப் பாடப்பாட, ஆம்— கவிதை என்பது இதுதான் என்ற உணர்வு பிறக்கிறது. எளிமையும் இனிமையும் நிறைந்தது கவிதை வாழ்க்கையை ஆனந்தமயமாக ஆக்க உதவுவது என்று சொல்லத்தோன்றுகிறது. எல்லாம் **தென்றல் தந்த கவிதை** தான்.

**—பம்பாய்த் தமிழ்ச் சங்க
நாடக விழா மலர்**

## முக்கியக் கடமை - 'கோட்டாரி'

"சரித்திரம் பொருளாதாரம் போன்ற "ஆர்ட்ஸ்" துறைகளிலும், விஞ்ஞானம், தொழில் நுட்பம், மருந்து, விவசாயம் மற்ற தொழில் துறைகளிலும் திறந்த மனமும் அர்ப்பணிப்பு உணர்ச்சியும் சமுதாயத்தின்பால் பொறுப்புணர்வும் உள்ள நல்ல தகுதி வாய்ந்த ஆடவர்களையும், பெண்களையும் சமுதாயத்துக்கு வழங்க வேண்டியது சர்வகலாசாலைகளே.

இதுதான் சர்வகலாசாலைகளின் பணியாகும். இதை ஒரு சர்வகலாசாலையால் செய்ய இயலாவிடில், சர்வகலாசாலை அந்தஸ்தைக் கோரவே அது லாயக்கற்றது.

### சர்வகலாசாலை எப்படி இருக்க வேண்டும்

அபிவிருத்தி யடைந்து கொண்டிருக்கும் ஒரு நாட்டில் சர்வகலாசாலைகளைப் பலப்படுத்துவது மிக முக்கியமாகும். நமக்குப் பலம் வாய்ந்த முற்போக்கான சர்வகலாசாலைகள் அவசியமாகும். ஆனால், சர்வகலாசாலைகள் தங்களுடைய பணியைப் பூர்த்தி செய்ய வேண்டுமானால் அவை மக்களுடன் நெருக்கமாகவும், அவர்களுடைய தேவைகள், வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகவும் இருக்க வேண்டும். விஞ்ஞான அறிவும், தொழில் நுட்ப அறிவும் ஏராளமாக இருக்கவும் வெளி நாடுகளிலிருந்து அவற்றை "இறக்குமதி" செய்து தாங்கள் கண்டறிந்தவற்றையும் சேர்த்து ஸ்தல மக்களுக்குப் பரப்பும் சக்தி வாய்ந்த வர்த்தகத் துறைமுகங்களாகும் சர்வகலாசாலைகள்." என்று கோட்டாரி கூறினார்.

**—'தினமணி'**

Edited Printed and Published by, P. VEERARAGHAVAN,
Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.